KALKI 14.5.89 ரூ. 2

கல்கி





மரணத்திற்கு ஒரு டிக்கெட்?



NEW
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
தகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்
இப்போது, தூய தேங்கா-
யெண்ணெய் வளம் செறிந்து வரும்
புதிய ரெக்ஸோனா : உங்கள் மேனிக்கு
தங்கப் பட்டுமென்மை, பட்டொளி
மெருகு, மோகனப் புதுமணம்,
புது வடிவம், உமதாசை தீர்க்கும்
அனைத்துகுண சோப் புது ரெக்ஸோனா.
புதிய
ரெக்ஸோனா
பொன்னுன மென் பட்டு மேனி மெருகுக்கே.
LINTAS RX P 94 25 17 TM
தூய தேங்காயெண்ணெய் செறிந்தது

நெடுஞ்செழியன் என்ன செய்கிறார்?



* தேனாம்பேட்டை காங்கிரஸ் அலுவலகத்தில் இரண்டு நிருபர்கள் சந்தித்தால் கேட்டுக் கொள்வது: ''அந்த ஆபீஸுக்குப் போயிட்டு வந்தாச்சா?'' 'அந்த ஆபீஸ்' என்றால்...? ஆழ்வார்ப்பேட்டையில், உள்ள தமது மற்றொரு வீட்டில்தான் தம் ஆதரவாளர்களைத் தினமும் சந்திக்கிறார் மூப்பனார். அந்த இடத்தைத்தான் காங்கிரஸ் அலுவலகத்தின் 'பிராஞ்ச் ஆபீஸ்' என்று செல்லப் பெயர் சூட்டி விட்டார்கள் நிருபர்கள்.

* பழைய சபாநாயகர், 'வான் உயர' அதிகாரம் பெற்றிருந்த பாண்டியன், காரின் ஸீட்டுக்கடியில் நல்ல கனமான பூண் போடப் பட்ட நீள தடியை வைத்திருக்கிறார். எதற்கு என்று கேட்டால், 'எல்லாம் ஆபத்துக்குத் தான்' என்று சிரித்தவாறு பதிலளிக்கிறார்!

* மந்திரியாகிவிட்ட 'தினகரன்' கே. பி. கந்தசாமி, பத்திரிகையின் தினசரி அலுவல்களிலிருந்து ஒதுங்கி விட்டாலும், தினகரனின் பல்வேறு மாவட்டப் பதிப்புக்களைத் தினசரி படித்துவிட்டு, தவறுகளைக் குறித்து, கோடிட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி விடுகிறார். மாமனார் ஆதித்தனாரிடம் கற்ற பழக்கமாம் இது.

* 'முரசொலி' அலுவலகத்துடன் அடிக்கடி தொடர்புகொள்பவர் முதல்வர். தொலைபேசியில் பேசும் போது 'நான் கருணாநிதி பேசுகிறேன்' என்று ஆரம்பிப்பாரே தவிர கலைஞர், தலைவர், முதல்வர் என்றெல்லாம் கூறிக் கொள்ள மாட்டார். புதிதாக வேலைக்கு வந்திருப்பவர்கள் போனை எடுத்தால் நம்பிக்கை இன்றி, 'எந்தக் கருணாநிதி?' என்று கேட்டுக் கலைஞரைச் சங்கடத்தில் ஆழ்த்தி விடுவார்களாம்!

* பழைய மந்திரி திருநாவுக்கரசு மகாலிங்கபுரத்தில் சொந்த சினிமா கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். முதல் படத்தில் ராமராஜன் — கவுதமி ஜோடி. இன்னும் படத்திற்குப் பெயர் வைக்கவில்லை.

* பத்திரிகையாளர்களுக்கு டிமிக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நெடுஞ்செழியன் என்ன செய்கிறார்? 'அண்ணாவுக்குப் பின்னர் தமிழகம்' என்ற புத்தகத்தை எழுதுவதில் மிகவும் தீவிரமாக இறங்கியிருக்கிறார். புத்தகத்தை முடிப்பதற்கும் மேல்சபைத் தலைவர் பதவி வருவதற்கும் சரியாக இருக்குமோ?

* ஜனதா தள தலைவர்களில் ஒருவரான கலிவரதன் வீட்டிற்குச் செல்கிறவர்கள், வரவேற்பறையில் சோபா, நாற்காலிகளைப் பார்க்க முடியாது. தரையில், பாயின் மீது தான் அமர வேண்டும். மார்வாடி கடையில் இருப்பது போன்று குட்டி மேஜை போட்டுக் கொண்டு கலிவரதன் அமர்ந்து கொள்கிறார். ''நிறைய நபர்களுடன் பேசுவதற்கும், அவரவர் வசதிப்படி உட்காருவதற்கும் தரைதான் சிறந்தது'' என்கிறார்.

— கௌசல்யா



டீ.வி.வீடியோ:
ரசனைகளின் பிறப்பிடம் வேதனைகளின் உறைவிடம்!

பலத்த கரவொலி

தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சென்னை டீ.வி. நிலையத்தினர் தயாரித்து வழங்கிய சுவையான கவியரங்கம் 'விளக்கேற்ற வாருங்கள்'. ''வாங்கவும் விற்கவும் பொருள் — ஆதாரம் — பொருளாதாரம்! வாங்கவும் விற்கவும் பொருளா? தாரம்?'' என்று 'அகல் விளக்கு' ஏற்றினார் கவிஞர் இளந்தேவன். ''இயற்கை இருளை மட்டு மல்ல... மக்களின் அறியாமை இருளையும் நீக்கிய கணக்கற்ற மேதைகளை என் காலடியில் உருவாக்கி இருக்கிறேன்'' என்று 'தெரு விளக்கு' ஏற்றினார் கவிஞர் நாகப்பன். ''விளக்கில் கூட சாதிப்பிரிவினைகள்! ஆம். வெள்ளி, பித்தளை, எவர்சில்வர் என்று குத்துவிளக்கில் கூட சாதிப்பிரிவினைகள்!'' என்று 'மா விளக்கு' ஏற்றினார் கவிதாயினி நிர்மலா சுரேஷ். 'குடும்ப விளக்கு' ஏற்றிய கவிஞர் அப்துல் காதர், ''குடும்ப விளக்கு ஓர் அதிசய விளக்கு! இந்த அதிசய விளக்கை அணைக்க அணைக்கத்தான் நன்றாகப் பிரகாசிக்கும்!'' என்ற போது பார்வையாளர்கள் வரிசையில் பலத்த கரவொலி! எங்கே! உண்மையைச் சொல்லுங்கள். உங்கள் வீட்டிலும் ரசித்திருப்பார்களே!

— 'மதி' ஜி. குணசேகரன்,
சென்னை, 106

மணமகளையும் மறந்து...

என் ஆபீசில் பணிபுரியும் நண்பன் பெண் பார்க்கச் சென்ற போது என்னையும் அழைத்துச்சென்றான். டிபன் தயாராகிக் கொண்டிருந்ததால் பெண்ணைக் காட்டத் தாமதம் செய்தனர். போரடிக்காமல் இருக்க டீ.வி.யை ஆன் செய்தனர்.

டீ.வி. பார்த்துக் கொண்டிருக்கும் போதே டிபன் கொண்டு வந்து வைத்தனர். ஒரு பெண் கிராமியப் பாடல்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் — பாடியும் காட்டினார்.

அந்த நேரத்தில் பெண்ணிடம் காப்பி கொடுத்தனுப்பினார்கள். மாப்பிள்ளையின் கவனமெல்லாம் டீ.வி.யில் தோன்றிய பெண்ணின் மேல் இருந்ததால் மணப்பெண்ணை அவன் கவனிக்கவில்லை.

''மாப்பிள்ளை சார்! பெண் தரும் காப்பியை வாங்கிக் கொண்டு பெண்ணையும் நல்லா பார்த்துக்குங்க'' என்றார் பெண்ணின் மாமா.

''மாப்பிள்ளை பெண்ணைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்'' என்று நான் டீ.வி.யைச் சுட்டிக் காட்டியதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

தன்னைப் பார்க்காமல் டீ.வி.யில் தோன்றிய பெண்ணையே பார்த்திருந்ததற்காக மாப்பிள்ளை தண்டனை அனுபவித்தது வேறு விஷயம்.

— க. இராமலிங்கம், புதுப்பேட்டை.




ஜெயலலிதாவின் பழக்கம்!

மேஜர் சந்திரகாந்த் தமிழ்ப்படம் ஒளி பரப்பாகிக் கொண்டிருந்தது. படத்தில் ஜெயலலிதா தற்கொலை செய்து கொண்ட பிறகு, அவரது அண்ணன் நாகேஷ் ஜெயலலிதாவின் புகைப்படத்தைத் தேடி எடுக்கும் போது, ஜெயலலிதா எழுதிய கடிதம் ஒன்றையும் கண்டெடுக்கிறார். படம் பார்த்துக் கொண்டிருந்த என் மாமா, ஜெயலலிதாவுக்கு எப்பொழுதுமே தான் எழுதிய கடிதத்தை நேரிடையாக உரியவரிடம் சேர்ப்பிக்கும் பழக்கம் கிடையாது போலும்!'' என்றவுடன் எழுந்த சிரிப்பொலி அடங்கப் பத்து நிமிஷங்கள் ஆயிற்று!

— ஆர். புவனேஸ்வரி, பாபநாசம்.

துயரையும் மறந்து...

எங்கள் கிராமத்தில் உறவினர் ஒருவர்



இறந்து விட்டார். சாவில் நடந்த நிகழ்ச்சிகளை வீடியோ எடுத்தார்கள். இதனால் சாவிற்கு வந்தவர்கள் துக்கத்தை மறந்து வீடியோவிற்குப் போஸ் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்! கேமரா எந்தப் பக்கம் திரும்புகிறதோ அந்த பக்கம் எல்லோரும் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். எங்களுக்கு இதைப் பார்த்ததும் துக்கத்தையும் மறந்து சிரிப்புத்தான் வந்தது!

காரியம் நடந்த அன்று எடுத்த படத்தை வீடியோவில் போட்டுக் காட்டினார்கள். எங்கள் அத்தையும் ஆயாவும் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுததை மூன்று நிமிடம் எடுத்து இருந்தார்கள்!

ஆயா அதைப்பார்த்துவிட்டு, "ஐயோ! என்னைப் படம்புடிக்கிறாங்கன்னு தெரிஞ்சு இருந்தா ஜாக்கெட் போட்டுக் கொண்டு வந்து அழுது இருப்பேனே" என்று மறுபடி ஒப்பாரியே வைத்தார்!

— அ. பிரியதரிசினி, பொள்ளாச்சி, 2.

ஜோரான புது அம்மா!

என் பெண்ணுக்குச் சுமார் நான்கு வயதாக இருக்கும்போது டி.வியில் 'கற்பகம்' திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது. கதாநாயகன் ஜெமினி கணேசனின் முதல் மனைவியான கே.ஆர். விஜயா மாடு முட்டி இறந்து விடவே, அவர் சாவித்திரியை இரண்டாம் தாரமாக மணக்கிறார். அவரது குழந்தையான பேபி ஷகிலாவுக்கு இளைய தாயார் சாவித்திரியைப் பிடிக்காததால் சாப்பிடக் கூட வராமல் பிடிவாதம் பிடிக்கிறது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த என் பெண், "ஏம்மா அந்தப் பாப்பா படுத்தறது?" என்று என்னிடம் கேட்டாள். நானும் சிரம சிரத்தையாக அவளுக்குப் புரியும் வண்ணம் காட்சியை விளக்கினேன்.

அவ்வளவையும் கேட்ட அவள், "ஏம்மா இந்தப் புது அம்மாவும் ஜோராத்தானே இருக்கா; நீ செத்துப் போயி, அப்பா இது மாதிரி ஒரு புது அம்மாவைக் கல்யாணம் பண்ணிண்டா, நான் இந்தப் பாப்பா மாதிரியெல்லாம் படுத்தவே மாட்டேன். ரொம்பச் சமர்த்தா இருப்பேனாக்கும்" என்றாள் பெருமையுடன்.

— கோமதி பாலசுப்ரமண்யம்,
சென்னை, 33.

"டி. வி. யில் என்ன வாழ்கிறது?"

திரைப்படப் பவள விழாவில் குடியரசுத் தலைவர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். திரைப்படங்கள் நல்ல மனித உணர்வுகளைத் தூண்டிவிடுவதில்லை. கற்பழிப்பு, வன்முறை, கொலை, கொள்ளை, திருட்டு போன்ற நிகழ்ச்சிகளே அதிகமாகச் சினிமாவில் காட்டப்படுவதால் தான் சமுதாயத்தில் குற்றங்கள் மலிகின்றன என்பது ஆராய்ச்சியின் மூலம் கிடைத்த தகவல் என்று கோடி காட்டிப் பேசினார். ஆனால் அரசு இலாகாவில் உருவாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மட்டும் என்ன வாழ்கிறது! எத்தனை தவறான எண்ணங்களை அது விதைக்கிறது! குடியரசுத் தலைவர் பேசி முடித்ததற்கு மறு நாளே கொலை, களவு, கற்பழிப்பு, திருட்டு போன்ற சம்பவங்கள் அதிகமாகக் கொண்ட மேஜர் சந்தரகாந்த் படம்தானே காட்டப் பட்டது!

— ஆர். ஜெயலெட்சுமி, உத்திரமேரூர்.

மின்வெட்டு செய்த உபகாரம்!

விடுமுறை நாளான ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று கிராமத்திலிருக்கும் என் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அது போழ்து டி.வி.யில் மகாபாரதம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. நிறையப்பேர் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கங்கா தேவியானவர் தாம் பெற்ற ஒவ்வொரு குழந்தையையும் (கங்கை) ஆற்றில் கொண்டு விடுகிறாள். இவ்வாறு அவள் செய்யும் ஒவ்வொரு தடவையும் 'சூ! சூ!' என்று சூள் கொட்டி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். 'அடிப்பாவி' என்றும் சிலர் கூறினார்கள்! ஒரு குழந்தையை ஆற்றில் போட வரும் போது கரண்ட் நின்று விட்டது. உடனே டி.வி பார்த்துக் கொண்டிருந்த ஒருசிறுவன், "நல்ல வேளை கரண்ட் நின்று போச்சு; இல்லேன்னா இந்தக் குழந்தையையும் ஆற்றில் போட்டுக் கொன்னுருப்பாள்" என்றான்!

— கா. இராஜகோபால், கலியமாணிக்கம்
(திருச்சி).

இதிலும் சூதாட்டம்!

தினமும் இரவு சரியாக 8.40 மணி. ஒரு குறிப்பிட்ட 'டி.வி.' விற்பனை செய்யும் கடைமுன் சுமார் இருபது, முப்பது நபர்கள் கூடுகிறார்கள். 'குருப்லீடர்' போலுள்ள ஒருவர், ஒவ்வொருவரிடமும் சீட்டுக்களைக் கொடுத்து ஏதோ எழுதி வாங்குகிறார், பணத்துடன் சேர்த்து.


மணி 8.42! கடை ஷோ-கேசில் வைக்கப்பட்டிருக்கும் டி.வி.யில் செய்தி வாசிப்பவர் பிரசன்னமாக.... கூட்டத்தில், சல...சலப்பு!

ஏமாற்றமடைந்தவர்கள் மெல்ல கலைய.. வெற்றி பெற்றவர்களுக்குக் கமிஷன் போக பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது!

ஷோபனா ரவியா?.... வரதராஜனா?... சந்தியாவா?...தமிழன்பனா?.... ஆம்...புதிய முறை சூதாட்டம் தான்!

"குருப்லீடர்" — நோகாமல் சம்பாதித்த தன் பங்குடன் நடையைக்கட்டுகிறார்!

— வைதேகி கண்ணன், கோவை, 45.


ஜவஹர் ரோஜ்கர் யோஜனா
அஞ்சாறு வருஷம் பொறுத்துக்குங்க!
மின் உற்பத்தி திட்டங்கள்
பஞ்சாயத்து ராஜ்யம்
இ. காங்கிரஸ்
மாநிலங்களின் அதிகாரங்கள் பறிப்பு



கல்கி

1989 மே 14
மலர் 47 இதழ் 41
சுக்ல வைகாசி 1



பாரதப் பிரதமர் பஞ்சாயத்துத் தலைவராகிறார்!

பெரும்பாலும் நாற்காலிகளே கூடியிருந்த பஞ்சாயத்து ராஜ்ய மாநாட்டில் பேசிய பிரதமர், வெறுப்படைந்தோ அல்லது கோபித்துக் கொண்டோ குறிப்பிட்ட நேரத்துக்கு வெகு முன்னதாகவே அவசரமாகப் பெங்களூரிலிருந்து புறப்பட்டு டில்லிக்குத் திரும்பி விட்டார்! அவசரத்தோடு அவசரமாக, கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் தமிழ் நாட்டிலும் உள்ளாட்சி அமைப்புக்கள் சரியாக இயங்கவில்லையென்றும் இதற்கு மாநில அரசுகளே பொறுப்பு என்றும் இடித்துரைத்தவர், மேற்கு வங்கத்தில் மட்டும் பஞ்சாயத்து அமைப்புக்கள் சிறப்பாக இயங்குகின்றன என்று சான்றிதழ் வழங்கிப் போனார்.

பிரதமர் கூறியதில் உண்மை இல்லாமல் போகவில்லை. அ. தி. மு. க. ஆட்சியில் தமிழ் நாட்டில் நீண்ட காலமாக உள்ளாட்சித் தேர்தல்களே நடக்காமல் இருந்தது. நடந்த போது, தி. மு. க. அதிக அளவில் வெற்றி பெற, அ. தி. மு. க. அரசுக்கு அஸ்தியிலே ஜுரம் கண்டு விட்டது! உள்ளாட்சி அமைப்புக்கள் சரிவர இயங்க முடியாமல் அதிகாரங்களைக் குறைத்துத் தொல்லை கொடுத்து வந்தது. 'ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் கூட அதிகாரங்களைப் பல்வேறு விதங்களில் மாநில அரசுகள் தங்கள் கையிலேயே வைத்துக் கொண்டிருக்கின்றன; பரவலாக்கவில்லை' என்பது பிரதமரின் குற்றச்சாட்டு.

ஆனால் காங்கிரஸ் ஆள்கிற வேறு பல மாநிலங்களிலும் இதே நிலைமைதான் என்பதைப் பிரதமர் கண்டுகொள்ளவேயில்லை! அவர் கண்டுகொள்ளாத இன்னொரு அம்சம், மாநில அரசுகளுக்கு அதிக சுதந்திரம் தந்து அதிகாரங்களைப் பரவலாக்காமல், மத்திய அரசே சகல அதிகாரங்களையும் தன்னிடத்தே வைத்துக் கொண்டிருக்கிறது என்பது தான்! எதற்கெடுத்தாலும் டில்லிக்குக் காவடி தூக்குகிற நிலைமையை இவர் மாற்றத் தயாராக இல்லாத போது, மாநில அரசுகள், பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கி வழங்கவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்வது விசித்திரமாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. "அதிகபட்சமாக அதிகாரங்களைப் பரவலாக்கவும் அதிகபட்சமாக ஜனநாயகம் மலரவும் நாம் ஒரு புரட்சியே நடத்தியாக வேண்டும்" என்று பேசியிருக்கும் பிரதமர், மாநிலங்களுக்கு அதிக சுதந்திரமும் அதிக அதிகாரங்களும் வழங்குவதன் மூலம் முதலில் அந்தப் புரட்சியைத் தாமே செய்து காட்ட வேண்டும்.

இதைச் செய்ய முன்வராத பிரதமர், என்ன செய்ய நினைக்கிறார் என்றால், "உள்ளாட்சி அமைப்புக்களை மாநில அரசுகள் பொருளாதார ரீதியில் தங்கள் பிடியில் சிக்க வைத்துள்ளன; இதிலிருந்து அவற்றை விடுவிக்க, உள்ளாட்சி அமைப்புக்களை மத்திய அரசின் நேரடி அதிகாரத்துக்குள் கொண்டுவர உத்தேசித்திருக்கிறோம்" என்கிறார்! அதாவது மாநில அரசுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது போக,. இனி உள்ளாட்சி அமைப்புக்கள் மத்திய அரசுக்கு அடிமைப்பட்டுப் போகும்! இன்னும் தெளிவாகக் கூறுவதெனில், மத்திய அரசு, மாநில அரசுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவது மட்டுமின்றி, இனி பஞ்சாயத்து, மற்றும் ஊராட்சி போன்ற அனைத்து அமைப்புக்களின் மீதும் சர்வாதிகாரம் செலுத்தும்! இது யதேச்சாதிகாரத்தின் உச்ச கட்டமேயன்றி வேறில்லை. இதனை மூடி மறைக்கப் பிரதமர், "ஜனநாயகப் புரட்சி"; "அதிகாரங்களைப் பரவலாக்குதல்" என்றெல்லாம் வார்த்தை ஜாலம் செய்திருக்கிறார்.

உள்ளாட்சி அமைப்புக்களுடன் மத்திய அரசு நேரடித் தொடர்பு கொண்டு ஆதிக்கம் செலுத்த ஆசைப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் இன்றைய ஆளும் காங்கிரஸுக்குச் சாதகமாக முடிய இந்த அமைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே உள்நோக்கம்!

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஜனநாயக வறட்சி. அதிகாரம் பரவலாக்கப்படுதல் என்பது பெயரளவுக்குக் கூட இல்லை. கட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் நியமிக்கப்படுகிறார்கள். இவ்வாறு இருக்க, பிரதமரின் "அதிகபட்ச ஜனநாயகப் புரட்சி" என்ற வார்த்தை ஜாலத்தில் மக்கள் மயங்கிவிட மாட்டார்கள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



படம் த்ரில்லிங்; புலம்பல் பரிதாபம்!

வட்டமேஜை

• புறநகர்ப் பகுதி கொள்ளைகளைவிட, போலீஸ் அதிகாரியின் புலம்பல் பரிதாபமாக இருந்தது. தேவையான நடவடிக்கை எடுத்தால், போதுமான பாதுகாப்புக் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

மேலப்பாதி, எஸ். நாகராஜன்.

• 30.4.89 அட்டைப்படம் மிகவும் த்ரில்லிங்காக இருந்தது. கடையில் அட்டைப்படத்தைப் பார்த்ததுமே அதை வாங்க வேண்டுமென்ற எண்ணம் தூண்டியது. அட்டைப்படங்களைத் தத்ரூபமாக எடுத்து வெளியிடுவதில் கல்கி போன்ற ஒரு சிறந்த பத்திரிகையை நான் பார்த்ததில்லை.

மங்கநல்லூர், எம். செல்வநாயகம்.

• ஷண்முகன் எழுதிய 'ஒளிராத வைரம்' சிறுகதை ஒரு பெண் மனத்தின் போராட்டங்களை அருமையாக விளக்கியது.

வள்ளியூர், என். பெனிட்டோ குமார்.

• 'இழப்பு' சிறுகதை மனத்தை மிகவும் தொட்டுவிட்டது. அதில் உள்ள சில பாராக்களை அப்படியே எடுத்து தில்லியில் வேலையாக இருக்கும் என் (பிரம்மச்சாரி) பையனுக்கு அனுப்பியுள்ளேன். இக்கால இளைஞர்களுக்கும், தந்தைகளுக்கும் ஒரு நல்ல பாடம், அச்சிறுகதை.

சென்னை — 91, ஜி. சீனிவாசன்.

• தொடர்ந்து இரண்டாம் முறை சிறந்த நடிகையாகப் பரிசு பெற்ற அர்ச்சனாவை 'மீண்டும் அர்ச்சனா' என்ற தலைப்பில் வாழ்த்தியது பாராட்டுக்குரியது.

திருச்சி — 13, ச. விக்டர் ஆல்பர்ட்.

• 'அபூர்வ சகோதரர்கள்' விமர்சனத்தில், 'தெட்டை புதுக்கவிதையின் மலர்ச்சி என்றால், குட்டை, பண்டை, இலக்கியத்தின் நறுமணம்' என்ற வரிகளின் மூலம் கமலின் நடிப்பைத் துல்லியமாய் விளக்கியிருக்கும் கல்கியின் பாணியே தனிதான், சபாஷ் கல்கி!

சென்னை — 52, ரோஸி.

• 'தொழிலாளர் திருநாள்; விடுமுறை எதற்கு?' — மே தினத்தின் சிறப்பைத் தெளிவாக விளக்கியது. ரஷ்யாவின் மே தினக் கொண்டாட்டப் படம் மனத்தைக் கவ்வி இழுத்தது. அந்த முகங்களில்தான் எத்தனை மலர்ச்சி...! எவ்வளவு ஆனந்தம்...! அருமையான கட்டுரை தந்த கல்கிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

மதுரை — 9, பிரபாகர் பிரியன்.

• மொழிப் போராட்டத்தில் கலந்து கொண்டு தியாகம் புரிந்தவர்களுக்கு உதவிப் பணம் அளிக்க இருக்கும் இவ்வேளையில், தி. மு. க. கூட்டணியிலிருக்கும் 'வந்தியி'ன் 'இந்தி தெரியும்; சமஸ்கிருதம் தெரியும்; உருது தெரியும்' என்ற 'பேட்டி' கொஞ்சம் வித்தியாசமாகத்தானிருந்தது.

கரூர் — 1, டி. கே. கே. கிருஷ்ணன்.

• பதின்மூன்றாம் பக்கம் ஜோக்கில் டாக்ஸி டிரைவர் ஓட்டுவது, ஃபாரின் காரா? டா. டிரைவர் பீச் சாங்கைப் பக்கம் குந்தி இருக்காரே...!

பள்ளத்தூர், இம்ரான்கான்.

• 'நாத மாளிகையாக ஒரு ராகமாளிகை' என்ற தென்றலான கட்டுரையும், அந்த உயிரோவியமான வண்ணப்படமும் என் இதயத்தை இனம் புரியாத மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

• "அம்மா என்னை ஏன் வெறுக்கிறாய்?" — மனத்தில் மிக அதிகமான பாதிப்பை ஏற்படுத்திவிட்ட கட்டுரை. ஆனால் எனக்கு இன்று என்ன தோன்றுகிறது தெரியுமா? 'அன்றைக்கே நீ என்னை வெறுத்திருந்தால், இன்று என்னையே நான் வெறுக்கும் நிலை ஏற்பட்டிருக்காதே' என்று என் அம்மாவிடம் சொல்ல வேண்டும் போல உள்ளது!

'பெண் குழந்தை ஆண் குழந்தைக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல' என்பதை நிரூபிக்க வேண்டும் என்றெல்லாம் என் பெற்றோர் சபதம் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அதை நூற்றுக்கு நூறு செயலாக்கினார்கள். பெற்றோரின் நம்பிக்கைக்குக் கடுகளவும் குறை வைக்காமல்தான் நாங்களும் நடந்து கொண்டோம். (கொண்டிருோம்) இன்ஜினீரிங் கல்லூரியில் படித்துத் தேறி ஒரு நல்ல வேலையிலும் உட்கார்ந்தாயிற்று.

திருமணம் ஒரு பிரச்னையல்ல. கல்யாணமே ஆகாமல் நான் வாழத் தயார். ஆனால், பார்க்கிற மாப்பிள்ளை எல்லோரும் என்னை வேண்டாம் என்று ஒதுக்க என்ன காரணம்? இதுதான் எனக்குப் புரியாத பிரச்னை. எல்லோருக்கும் என்னைப் பிடித்து விடும் என்று நான் கர்வம் பேசவில்லை. ஒருத்தருக்குக் கூடவா பிடிக்காது?

எந்த ஒரு நேரத்திலும் 'நான் பெண்' என்று வருத்தப்பட்டதுமில்லை. யாரையும் வருத்தப்பட வைத்ததுமில்லை. ஆனால், கடந்த மூன்று வருடங்களில் இந்த வருத்தம் என் மனத்தில் உறைந்து, ஆறாத ரணம் போல்.... சே!

'அப்பா கவலைப்படாதீர்கள்! கடமை என்று கருதிப் படிக்க வைத்தீர்கள்; நானும் படித்து உத்தியோகத்தில் அமர்ந்து விட்டேன். கல்யாணம் என்பது அவசியம் தான். ஒருத்தர் வாழ்க்கையில். ஆனால், அதுவே வாழ்க்கை என்று எண்ணாதீர்கள்' என்று தேறுதல் சொல்ல என் வாய் தவிக்கும். ஆனால் நான் யோசித்துப் பேசுவதைச் சீரணிக்கும் சக்தி அவருக்கு இப்போது இல்லை.


ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் தான் பெண்ணாய்ப் பிறந்ததற்காக, வாழ்நாளில் ஒரு நிமிடமேனும் வருத்தப்படுகிறாள். இது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

நெய்வேலி, கமலி.



USHA
உஷாவின் பாணி!
பழுப்பு நிறத்தின் மீது
பொன் வேலைப்பாடு.
எழிலான தோற்றம்,
உன்னத தொழில் நுட்பம்.
சிறப்பான
ஏரோடைனமிக்ஸ் மற்றும்
டபுள் பால் பேரிங்ஸுடன்.
உஷாவின் 40 ஆண்டிற்கு
மேலான சிறப்புமிக்க
நுட்பத்திறனுடன்
உருவாக்கப்பட்டது.
உங்கள் பாணி!
2.73 கோடிக்கு மேற்பட்ட
உஷா ஃபேன்கள்
வாடிக்கையாளர்களைத்
திருப்திப்படுத்தியிருக்கின்றன
இந்தியாவிலும் 60க்கும்
மேலான
வெளிநாடுகளிலும்.
பற்பல ரகங்களில்
கிடைக்கின்றன
சீலிங், டேபிள்,
பெடஸ்டல்,
வால், கேபின் மற்றும்
எக்ஸாஸ்ட் ஃபேன்கள்.
அதனால்தான் மேலும்
அநேக மக்கள் உஷாவை
நம்புகிறார்கள்...
இந்தியாவின் அதிக
விற்பனையாகும் ஃபேன்.
உஷா
இந்தியாவின் அதிக விற்பனையாகும் ஃபேன்


தாகக் கனவு
தூக்கத்தில் நடப்பவருக்கும் லிம்கா
விழித்துக் கொண்டே
தூங்குபவருக்கும் லிம்கா
தூக்கத்திலே நடந்து நடந்து, அல்லது
பகற்கனவு கண்டு களைத்து நீங்கள் தாகத்தால்
தவிக்கும் பொழுது... ஐஸோடானிக் ஸால்ட்
அடங்கிய கிருமிகள் அற்ற லிம்கா அருந்தி
தாகம் தணிப்பீர்.
Limca®
RADEUS/PE/L/4-89-TAM
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY.



• அபூர்வ சகோதரர்கள்: கமல் — ஸிங்கீதம்.

குள்ளக் கமலை உருவாக்கியது எப்படி?

"இந்தப் படத்தில் குள்ளக் கமல் வரும் காட்சிகளை எப்படி எடுத்தோம் என்பதையே நாங்கள் ஒரு படமாய் எடுத்து வைத்திருக்கிறோம். இப்போது பிரமாத மாய் ஓடிக் கொண்டிருக்கும் அபூர்வ சகோதரர்கள் படத்தின் நூறாவது நாள் விழாவின் போது அந்தச் சிறு படமும் வெளியிடப்படும்."

இவ்வாறு கூறிய 'அபூர்வ சகோதரர்கள்' படத்தின் இயக்குனர் ஸிங்கீதம் சீனுவாச ராவ் தொடர்ந்து சொன்னவை:

* 'குள்ள' மனிதரை மையமாய் வைத்துப் படமெடுக்கும் ஐடியாவைக் கொடுத்தது கமல்தான். முதலில் ஒரு கதையை ரெடி பண்ணி, ஷூட்டிங் கூட ஆரம்பமாகி விட்டது. ஆனால், கதை முழு திருப்தியளிக் காததால், மறுபடி புதிய கதை உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

* கதையின் பிளாட்டைப் பஞ்சு அருணா சலத்திடம் சொல்லி அவர் உருவாக்கின கதைக்குத்தான் திரைக்கதை அமைத்திருக் கிறார் கமலஹாசன்.

* 'குள்ள'க் கமல் வரும் காட்சியை எப்படி எடுக்கிறார்கள் என்பதைப் படு ரகசியமாய் வைத்திருக்க முடிவு செய்து, ஷூட்டிங்கில், பத்திரிகையாளர்களை அனு மதிக்கவே இல்லை. சில நெருக்கமான, தவிர்க்க முடியாத நபர்கள், செட்டிற்கு வந்து விட்ட சமயங்களில், அவர்கள் போகும் வரை காத்திருந்து, அதன் பின் ஷூட்டிங்கைத் தொடர்ந்த சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு!

* முழங்காலைப் பின்புறமாய் வளைத்து, இறுக்கிக் கட்டி குள்ளத் தோற்றத்தை உருவாக்கினதாகவும், தரையிலே பள்ளம் தோண்டி அந்தக் காட்சிகளை எடுத்ததாக வும், இன்னும் பல விதங்களாகவும் பலரும் பேசிக் கொள்கிறார்கள்.

* இவையெல்லாம் உண்மைதான் என்றா லும், நாங்கள் கையாண்ட பலவித டெக்னிக் குகளில் இவையும் சில என்றுதான் சொல்ல முடியும். ஏனெனில், ஒரே காட்சியைக் கூட, பல டெக்னிக்குகளைக் கையாண்டு எடுத் திருக்கிறோம்!

* கமல், மிக மிக ரிஸ்க் எடுத்துக் கொண்டு சில காட்சிகளில் நடித்தார். வேறு சில காட்சிகளைப் படமாக்கும் போது மணிக் கணக்கில் அசாதாரண பொறுமை காட்டி னார்.

* குள்ளக் கமல் சம்பந்தமான காட்சிகள் எடுக்க நேரம், பணம், இரண்டுமே இரு மடங்கு செலவாயின. கமலுக்கு நடிக்கும் போது உடல் ரீதியிலும், தயாரிப்பாளர் என்பதால் மன ரீதியிலும் பிரஷர் தவிர, குள்ளன் சம்பந்தமான காட்சி யுக்திகள் காரணமாகவும் அதிகப்படி டென்ஷன்.

* ஜெமினி சர்க்கஸில் இருப்பவைதான் என்றாலும், படத்துக்கென்றே ஸ்பெஷலாய் யானை, புலி, சிங்கம், கிளி, நாய் போன்ற வற்றைப் பழக்கிப் பயன்படுத்திக் கொண் டோம். சர்க்கஸ் காட்சிகள் கொச்சியில் தான் படமாக்கப்பட்டன.

— எஸ். சந்திரமௌலி.

கேரளத்தில் சில காலம் முன்பு தடம் புரண்டு, ஏரியில் கவிழ்ந்து, ஏராளமான பயணிகளின் மரணத்துக்குக் காரணமாயிற்று ஐலண்டு எக்ஸ்பிரஸ் விபத்து. இது எப்படி நிகழ்ந்தது என்று ஆராயப் புகுந்த ரயில்வே பாதுகாப்பு கமிஷனரின் முடிவான அறிக்கை, ''திடீரென்று உருவான ஒரு சூறாவளியினால் ரயில் கவிழ்ந்து விட்டது'' என்பதுதான்!

இதை நாளிதழ்களில் படித்ததும், 'சிரிப்பதா, அழுவதா' என்று புரியாமல் திணறினோம். 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் இது என்ன அறிக்கை! அந்த விபத்தில் உயிரிழந்த பயணிகளின் உறவினர்கள் மனம் என்ன பாடுபடும்' என்று நினைத்தோம். அறிக்கையைப் படித்துவிட்டு, 'தவறு ஏதும் நடக்கவில்லை என்று நிரூபணமாகி விட்டது' என்று மகிழ்ந்து போன அமைச்சர் மீது கோபம் கோபமாகத்தான் வந்தது.

மறுநாளே வானிலை ஆராய்ச்சியாளர் அறிக்கை ஒன்று, ''சூறாவளி ஏதும் வீசவில்லை; அப்படி வீசியிருந்தால் எங்களுக்கு முன்கூட்டியே தெரியாமல் போயிராது. எச்சரிக்காமலும் இருந்திருக்க மாட்டோம்'' என்றது.

இதனை ஓய்வு பெற்ற ரயில்வே அதிகாரி ஒருவரிடம் கூறிக் கருத்துக் கேட்ட போது அவர், ''இதற்கு வானிலை இலாகா அறிக்கை எதற்கு சார்? விபத்து நடந்த மறு நிமிஷமே, அரசும், ரயில்வே இலாகாவும் செயல்பட ஆரம்பிப்பதற்குப் பல மணி நேரம் முன்னதாகவே — கேரளத்தின் மீனவர்கள் செயல்பட ஆரம்பித்தார்கள். தங்கள் படகுகளில் விபத்து நடந்த இடத்தை அணுகி, நூற்றுக்கணக்கான பயணிகளை மரணத்தின் வாயிலிருந்து மீட்டுக் கொண்டு வந்து, கரை சேர்த்தார்கள். அவர்கள் அப்படித் துரிதமாகச் செயல்பட்டிராவிட்டால், விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். சூறாவளி வீசியிருந்தால் மீனவர்கள் அவ்வளவு துணிச்சலாகச் செயல்பட்டிருப்பார்களா? யார் காதிலே பூ சுற்றுகிறார்கள்?'' என்று கேட்டார்.

மரணத்திற்கு ஒரு





அமைச்சரின் மதிப்பில் தமது கோபம்!

டீ. வி. யைப் போட்டால், நாளிதழைப் புரட்டினால், பஞ்சாப் பயங்கரவாதிகள் பற்றிய செய்தியை அடுத்து, நிச்சயமாய் இடம் பெறும் இன்னொரு விஷயமாகிவிட்டது ரயில் விபத்து. நாட்டில் எந்த ஓர் இடத்திலாவது, ரயில் விபத்து நடந்து, அப்பாவிப் பயணிகள் மாண்டு போவது வாடிக்

டிக்கெட்?

கையாகி விட்டது. அதிர்ஷ்டவசமாய் உயிர்ப் பலி வாங்கும் விபத்துக்கள் ஏதும் இல்லையெனில், அட்லீஸ்ட் ஏதாவது சரக்கு ரயிலாவது தடம் புரண்டிருக்கும். அதனால் ரயில்கள் தாமதப்படும். ஏன் இப்படி? இவற்றைத் தவிர்க்கவே முடியாதா?

''ஆண்டுதோறும் ரயில்வே பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பதும், அதிலே பயணிகள் கட்டணம், மற்றும், சரக்குக் கட்டணங்களை உயர்த்துவதும் வழக்கமாகி விட்டன. கட்டண உயர்வை அறிவித்ததால் ஏற்படும் அதிருப்தியைச் சமாளிக்க, ரயில்வே அமைச்சர் கையாளும் உத்திகளுள் சில்: புதிய ரயில்களை அறிவிப்பது; சில ரயில்களின் வேகத்தை அதிகரிப்பது போன்றவை. புதிய ரயில்களும், கூடுதல் வேகமும் அறிவிக்கப்படும் முன்னால், அந்த ரயில்கள் ஓட வேண்டிய பாதையின் திறனைச் சோதிக்க வேண்டும். 'ஏற்கெனவே அதில் ஓடும் ரயில்கள் எத்தனை; கூடுதல் வேகத்தையும் கூடுதல் டிராஃபிக்கையும் அதனால் தாங்க முடியுமா?' என்பன ஆராயப்பட வேண்டும். வாரத்துக்கு இருமுறை என்கிற அளவில் புது ரயில் ஒன்று அறிமுகப்படுத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். நம் நாட்டில், எங்கே எத்தனை ரயில் விட்டாலும், கும்பலுக்குக் குறைவிருக்காது என்பதால், நாளடைவில் வாரத்துக்கு இருமுறை என்பது, ஐந்து முறை வரை கூட அதிகரிக்கப்பட்டு விடுகிறது. இது விபத்துக்களுக்கு அதிமுக்கிய காரணம்'' என்றார் ஓய்வு பெற்ற ஓர் உயர் அதிகாரி.

''விபத்துக்கள் இரண்டு விதங்களில் பிரிக்கலாம்; ஸ்டேஷன் லிமிட்டிற்குள் நடப்பவை; ஸ்டேஷன்களின் இடையே நடப்பவை, ஸ்டேஷன் எல்லைக்குள் நடப்பவைகளுக்கு, ஸ்டேஷன் மாஸ்டர் நேரடிப் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறார். ஸ்டேஷன் எல்லைக்கு வெளியில் நடைபெறும் விபத்துக்களைப் பொறுத்தவரை, ஸ்டேஷன் மாஸ்டர்தான் முழுப் பொறுப்பு என்று கூறிவிட முடியாது. ஸ்டேஷன் எல்லைக்குள் நடைபெறும். விபத்துக்களைப் பொறுத்தவரை தவறான சிக்னல் தரப்படுவதே விபத்துக்கு முக்கிய காரணமாய்ப் பெரும்



பாலான கேஸ்களில் அமைகிறது'' என்றார் ஒரு ஸ்டேஷன் மாஸ்டர். ''ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் தனித்தனியே ஸ்டேஷன் சட்டதிட்டங்கள், பற்றிய புத்தகம் ஒன்று உண்டு. ஸ்டேஷனை நேரடியாகப் பார்வையிட்ட பிறகு, தயாரிக்கப்படும் இதில், அனைத்து விவரங்களும், சந்தேகங்களுக்கோ, பிரச்னைகளுக்கோ துளியும் இடமின்றி மிகத் தெளிவாய் எழுதப்படுகின்றன. அதிலுள்ள விதிமுறைகளைச் சரியானபடி கடைப்பிடிக்காத போதுதான் விபத்துக்கள் நிகழ்கின்றன.''

ரயில்வே சிக்னலிங் சம்பந்தமான ஓய்வு பெற்ற அதிகாரி சொன்னார்: ''விபத்துக்களை, உயிர்ச் சேதம் விளைவித்த விபத்து, உயிர்ச் சேதம் ஏற்படாத விபத்து — (பெரும்பாலும் சரக்கு ரயில் தடம் புரளல்) என்று பத்திரிகைகள் பிரித்துப் பார்க்கின்றன. உயிர்ச் சேதம் விளைவித்த விபத்துக்களுக்கே நாளிதழ்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. மக்களும் உயிர்ப் பலி வாங்கிய விபத்துக்கள் பற்றித்தான் பரபரப்பு



அருச்சனை

1. தாமரை, கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், பலா, மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதரி, செவ்வந்தி, ஆகிய பதினான்கு வகையான நறுமணமிக்க பூக்களைக் கொண்டு வழிபாடு செய்யவும்.

2. புனுகு, கத்தூரி, முதலிய சாந்துடன் சந்தனம் மணமிகுந்த குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், வயிரம் ஏறிய அகில், ஆகிய இவற்றினு டன் அளவாகப் பனிநீர் சேர்த்துக் குழைத்து அவற்றை அணிய வேண் டிய இடங்களில் முறையாக அணிந்து அன்புடன் வழிபட வேண்டும்.

3. உள்ளன்புடன் படைப்பினைக் குழைத்து விளக்கம் மிக்க திரு விளக்குகள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்றுக. புகையும் ஒளியும் காட்டி வழிபடுக. இனம் பற்றி மணியும் இயமும் இயம்புக, செந்தமிழ் மாமறைத் திருமுறை யோதுக.

இத்தகையதொழுகையினர் நினையுங்கால்
திருவடிப் பேற்றின்பம் உடனே கைகூடும்.

வணக்கம்

ஐம்புலனும் அடக்கியவர்கள், முழங்கை இரண்டு முழந்தாளிரண்டு நெற்றி ஒன்று ஆக ஐந்துறுப்பும் நிலத்தே படும்படி புரியும் வணக்கமும் செபமும் வழிபாட்டுக்கு இன்றியமையாதனவாகும், அத்துடன் இடை விடா நினைப்பாகிய தியானமும் அதற்கு வேண்டும்.

பலன்

மேல் ஓதுப்பெற்ற பொருள்களையெல்லாம் அன்பினால் தொகுத் துக் கொண்டு மெய்மையாக வழிபாடு செய்யின் இவ்வுலகின்கண் எய்த வேண்டுவன அனைத்தும் எய்தும் மேலும் தேவவுலக வாழ்வும் உண்டா குமௌண்வகையான சித்திகளும் கைகூடும். எளிதிற் கிடையாத வீடு பேறும் கிடைக்கும்.

திருமந்திரம்

அடைகிறார்கள். ஆனால், ரயில்வேயைப் பொறுத்தவரை, எல்லாமே விபத்துத்தான் என்பதை மறக்கக் கூடாது. சரக்கு ரயிலுக்குப் பதில் பயணிகள் ரயிலுக்கே கூட அங்கு விபத்து ஏற்பட்டிருக்கலாம். சரக்கு ரயிலுக்குத்தான் விபத்து ஏற்பட்டது என்பதே ஒரு அனுகூல விபத்துத்தான்!''

ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொள்ளுதல் அல்லது ஒன்றன்பின் ஒன்று மோதுதல் என்பன தவறான சிக்னல் தரப்படுவதாலோ, அல்லது, சரியான சிக்னல் தரப்பட்டும் ரயில் ஓட்டுனர் அதைக் கவனிக்காது, அல்லது சட்டை செய்யாது போய் விடுவதாலோ நிகழ்கின்றன. இத்தகைய விபத்துக்கள் பெரும்பாலும் இரண்டு ரயில்வே ஸ்டேஷன்களுக்கு இடையில் போகவும், வரவும் ஒரே ஒரு ரயில் பாதை மட்டுமே இருக்கும் பகுதிகளில்தான் நடக்கின்றன.

இதையெல்லாம் பார்க்கும் போது நம் நாட்டு ரயில்வேயில் கடைப்பிடிக்கப்படும் சிக்னல் முறைகள் அத்தனை பாதுகாப்பில்லாதவையோ என்று சந்தேகம் எழும். இதே கேள்வியை ரயில்வே சிக்னல் இஞ்சினியர் ஒருவரிடம் கேட்ட போது, சொன்னார்:

"சிக்னலிங் என்று இல்லை; மற்ற எதை எடுத்துக் கொண்டாலும் கூட, ஜப்பான் போன்ற மேலை நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாம் இருபத்தைந்து, முப்பது ஆண்டுகள் பின்தங்கித்தான் இருக்கிறோம். பிரான்ஸ் தேசத்தில், நம் நாட்டைப் போலவே அமைக்கப்பட்ட இருப்புப் பாதை அமைப்பு முறையிலேயே மணிக்கு இருநூற்றைம்பது கிலோ மீட்டர் வேகத்திலே ரயில்கள் ஓடுகின்றன. ஜப்பானிலும் அதே போல அதிவிரைவாகப் பறக்கிற ரயில்கள் இருக்கின்றன. மேற்கத்திய நாடுகளிலும், ஜப்பானிலும் இல்லாத, நம் நாட்டிற்கே உரியனவாய்ச் சில குறைபாடுகள், பிரச்னைகளை நம் ரயில்வே சந்திக்கிறது. மிக் மிக சக்தி வாய்ந்த மின்சாரம் பாயும் ஒயர்களைக் கூடத் திருடிக் கொண்டு போய் விடும் கில்லாடிகள் இங்கே இருக்கிறார்கள்! ரயில் தண்டவாளங்களில், எந்த ஒரு விலையுயர்ந்த கண்காணிப்பு அல்லது வேக எச்சரிக்கைக் கருவியைப் பொறுத்தினாலும், பொறுத்திய சில நாட்களிலேயே திருடு போய் விடுகிறது! தண்டவாளங்களில் உள்ள 'பாயிண்ட்' இடங்களில் ஆடு, மாடுகள் தடையின்றி கடப்பதால், சில சமயம் அவற்றின் கால்கள் சிக்கக் கூடாத இடத்தில் சிக்கி இழுக்க, லீவர் இழுபட்டுத் தண்டவாளங்கள் சேர வேண்டிய சமயங்களில், சேராமல் போய் விடும். இது அடிக்கடி நடப்பதுதான்.

இத்தனை இடர்பாடுகள் இருந்தாலும், எந்த ஒரு இடத்தில் சிக்கல் ஏற்பட்டாலும் உடனே சிக்னலிங் சிஸ்டம் முழுமையாய் நின்று போய், சிவப்பு விளக்கை எரிய

வைத்து ரயில் ஓட்டத்துக்குத் தடை ஏற்படுத்தும் முறையிலேயே நம் சிக்னலிங் சிஸ்டம் இயங்கி வருகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.''

ரயில் விபத்துக்களுக்குக் காரணமான இன்னோர் அம்சம், ரயில் தண்டவாளங்களைப் பராமரிப்பதில் காணப்படும் குறைபாடுகள். மிக அதிக எண்ணிக்கையில் ரயில் போக்குவரத்து நடைபெறுவதால், ரயில் சக்கரமும் தண்டவாளமும் உராயும் இடங்களில் தேய்வு ஏற்பட்டு, தேய்மானம் அளவுக்கு அதிகமாகும் போது, தடம் புரளல் சாத்தியமாகிறது. அதே போல, நீண்ட தூரப்பயணம் காரணமாய், ரயிலின் சக்கரங்களிலும் தேய்மானம் ஏற்படும். இதுவும் அளவுக்கு மீறும் போது தடம் புரளல் நிகழ்கிறது.

''இன்று இந்தியாவில் மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களை, அலுவலர்களை, பொறியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கும் நிறுவனம் இந்திய ரயில்வேதான். ஆனாலும், இந்தியாவெங்கும் விசாலமாய்ப் பரவிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவுள்ள இருப்புப் பாதைகளை, இருபத்தி நாலு மணி நேரமும் திறமையுடன் கண்காணிப்பதற்குப் போதிய அளவில் பணியாளர்கள் இல்லை என்பதே உண்மை'' என்று தொழிலாளர் சார்பாக ஒரு யூனியன் தலைவர் சுட்டிக் காட்டினார். ஆனால் ரயில்வே நிர்வாகம் இதை முழுமையாய் ஏற்கத் தயாராய் இல்லை. ஏதோ ஓரிரு பிரிவுகளில் ஆட்கள் குறைவாக இருக்கலாம். ஆனால் முக்கியமான பராமரிப்புப் பிரிவுகளில் போதிய அளவு ஊழியர்கள் உள்ளனர் என்பதே நிர்வாகத்தின் வாதம்.

''ரயில்வே என்பது மற்ற பல இலாகாக்கள் போலன்றி, மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டிய ஒரு துறை. எனவே, இங்கே திறமையின் அடிப்படையில்தான் வேலைக்கு ஆட்களை அமர்த்த வேண்டும்; திறமையின் அடிப்படையில்தான் உத்தியோக உயர்வும் அளிக்க வேண்டும். இந்த ஒரு துறையிலேனும் ஜாதி போன்ற வேறு காரணங்கள் புக அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதித்தால் அது, மக்களின் உயிர்களுடன் விளையாடுவது போல்தான் ஆகும்'' என்று கருத்துத் தெரிவித்தார் அனுபவசாலியான ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர்.

விபத்தில் உண்மையில் இறந்தவர் எண்ணிக்கையை மறைத்துக் குறைத்துச் சொல்வார்கள் ரயில்வேக்காரர்கள் என்பது பரவலான குற்றச்சாட்டு. இது ஓரளவுக்கு உண்மைதான் என ஓர் அதிகாரி ஒப்புக் கொண்டாலும், அதற்குக் காரணமும் கூறினார்: ''விபத்தில் பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கையை, விபத்து நிகழ்ந்த

லலித்பூர் ரயில் விபத்து

● ரயில்வேயின் கணக்குப்படி 69 பேரே இறந்து போனார்கள் என்பது நம்ப முடியாத கணக்கு என்கிறார்கள்.

● போபாலைச் சேர்ந்த கனரா வங்கி ஊழியர் விநோதும், அவர் தாயாரும் இந்த ரயிலில் பயணம் செய்தார்கள். தாயார் ஸ்தலத்திலேயே மாண்டார். விநோத் ஜான்ஸியில் உள்ள மருத்துவமனையில் இறந்தார். ரயில்வே இந்த மரணங்களை வெளியிடவே இல்லையாம். இதுபோல் எத்தனையோ?

● ஜான்ஸி டிவிஷனல் தலைமையகத்திலிருந்து 90 கி. மீ. தூரமே இருந்த விபத்து ஸ்தலமான காப்ணாவுக்குச் செல்ல ஐந்து மணி நேரம் ஆகியிருக்கிறது ரயில்வே அதிகாரிகளுக்கு!

● நிருபர்கள் குழு விபத்து நடந்த இடத்துக்கு விஜயம் செய்தபோது, அதிகாரிகள் முதலில் தெரிவித்த செய்தி — நாசவேலை என்பதுதான். இருப்புப் பாதையில், விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து சுமார் 25 கிலோ மீட்டருக்குச் சாவிகள் அகற்றப்பட்டிருந்தன என்கிறார்கள். இது சாத்தியமே இல்லை. கர்நாடகா எக்ஸ்பிரஸ் கடப்பதற்கு 16 நிமிடங்களுக்கு முன்னால்தான் இன்



படம் கூடாது!

''மளிகைக் கடையில் விநாயகர், லட்சுமி, சரஸ்வதி, முருகர் போன்று எந்தக் கடவுள் படம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ஒரு படம் மட்டும் இருக்கக் கூடாது'' எனக் கூட்டத்தில் வாரியார் சுவாமிகள் கூறி நிறுத்தினார். கூட்டத்தில் இருந்தவர்கள், 'எந்தப் படம் இருக்கக் கூடாது' என்று யோசித்துக் கொண்டிருந்த போது வாரியாரே, ''மளிகைக்கடையில் கலப்படம் மட்டும் இருக்கவே கூடாது!'' என்று கூறிக் கூட்டத்தினரை வியப்பிலும், சிரிப்பிலும் ஆழ்த்தினார்!

— சுந்தர் சுந்தரி.


னொரு எக்ஸ்பிரஸ் ரயில் அங்கே கடந்திருக்கிறது. விபத்து நடந்ததோ பகலில். எனவே இத்தனை வேகமாக யாரும் சாவிகளை அகற்றியிருக்க முடியவே முடியாது.

● பெங்களூரிலிருந்து புறப்படும் போதே, ஒன்பதாவது கம்பார்ட்மெண்ட் ஒரேயடியாக ஆட்டமாக ஆடிக் கொண்டிருந்ததாம். டிரைவர் முதற்கொண்டு எல்லோரும் புகார் செய்தும் ஒருவருமே கவனிக்கவில்லை. அதிவேக ரயில்கள் கால தாமதம் ஆகக் கூடாது என்ற பிடிவாதக் கொள்கையினால் இந்தக் குறையை யாரும் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

● அதிக உயிர்ச் சேதத்துக்கு இன்னொரு காரணம், பாதிக்கப்பட்ட கம்பார்ட்மெண்டின் கதவுகள் ஒரேயடியாக இறுகிப் போயிருந்தன. யாராலும் திறந்து வெளியே குதிக்க முடியவில்லை. லலித்பூரிலுள்ள மக்கள் வந்து, ஜன்னல் கம்பிகளை அறுத்து வெளியேற வைக்க வேண்டியிருந்தது.

● லலித்பூர் மருத்துவமனை, இத்தனை தூரம் விபத்துக்கு ஆளான அதிக எண்ணிக்கையுள்ள நபர்களைக் கவனிக்க முடியவில்லை. உயிர் காக்க அவசியமான மருந்துகளும் போதிய அளவு இல்லை. பயங்கரமாகக் காயமடைந்தவர்கள் கூட வெளியே திறந்தவெளியிலும் வராந்தாவிலும் துடித்துக் கொண்டு கிடந்தார்கள்.

● இன்னொரு முக்கிய விஷயம், மண்டலங்களுக்கிடையே எழும் பிரச்னைகள்தாம். நிர்வாக சௌகரியத்துக்காகப் பல மண்டலங்களாக ரயில்வே பிரிக்கப்பட்ட பிறகு, இந்தப் பிரச்னைகள் அதிகரித்திருக்கின்றன. ஒரு மண்டலத்தைச் சேர்ந்த ஊழியர்கள், இன்னொரு மண்டலத்தைச் சேர்ந்த வண்டியை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை!



● இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில், நாட்டுக்குப் பேரிழப்பு என்று சொல்லக் கூடிய வகையில், பேராசிரியர் வெங்கட்ராமனன் மரணம் நிகழ்ந்திருக்கிறது. விவசாயப் பொருளாதாரத்தில் உலகப் புகழ்பெற்ற மேதை.

— எஸ். வி. என்.

உடனேயே மிகத் துல்லியமாய்க் கணக்கிட்டுச் சொல்வது என்பது சாத்தியமில்லை. உத்தேசமாகத்தான் முதல் செய்தி வெளியிடுகிறோம். அதிகமாகக் கூறிப் பீதி கிளம்புவதை விட, குறைத்துக் கூறுவதே சிலாக்கியம், இல்லையா?''

''எந்த ஒரு ரயில் விபத்து நிகழ்ந்தாலும், ஸ்தலத்துக்கு விரையும் உயர் அதிகாரிகளும், மந்திரியும், 'நாச வேலைதான் விபத்துக்குக் காரணம் என நம்ப இடமிருக்கிறது' என்று அறிக்கை விடுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே நாச வேலை காரணமாய் ரயில் விபத்துக்கள் நடப்பது அபூர்வமே'' என்கிறார், ரயில் பயணத்திலேயே வாழ்நாளின் பாதிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் ஒரு 'பிஸினஸ் ரெப்'.

ஒரு விபத்து பற்றிய விசாரணையின் போது, ஒரு பிரிவின் அதிகாரிகள், பழியை வேறு ஒரு பிரிவின் மீது போட முயற்சி செய்வதும், அதே போல, உயர் அதிகாரிகள், கடைநிலை ஊழியர்கள் மீது பழியைச் சுமத்துவதும், தொழிற் சங்கவாதிகள், 'தொழிலாளர்கள் மீது தவறு இல்லை' எனப் பாதுகாப்பு அளித்துக் காப்பாற்ற முயற்சி செய்வதும் உண்டு. அறிக்கையில் குற்றம்சாட்டப்படுபவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது ரயில்வே நிர்வாகத்துக்கும், தொழிலாளர் யூனியனுக்கும்தான் வெளிச்சம்.

''அது மட்டுமல்ல; இத்தகைய அறிக்கைகளில், எதிர் காலத்தில் விபத்துக்களைத் தவிர்க்கக் கடைபிடிக்க வேண்டியவை என்று சில யோசனைகளையும் குறிப்பிடுவார்கள். ஆனால், அவற்றை எல்லா ரயில் நிலையங்களிலும், எல்லாத் தரப்பிலும் கடைப்பிடிக்க வழிவகை செய்யாமல் விபத்து நடந்த அந்தக் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் செயல்படுத்துவது பெரிய குறை'' என்றார் ஒரு ரயில்வே ஊழியர்.

''பெரிய ரயில் விபத்துக்களுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று, ரயில்வே அமைச்சர் ராஜினாமா செய்வது என்பது எவ்வளவு தூரம் இன்றைய சூழ்நிலையில் சரி?'' என்று ஒரு எம்.பி.யிடம் கேட்ட போது அவர் சொன்னார்: ''அது ஒரு ஷாக் டிரீட்மெண்ட் போல முன்பு செயல்பட்டது உண்மை. மந்திரி, தமது பதவியை ராஜினாமா செய்கிறார் என்கிற விஷயம், ரயில்வேயின் எல்லா மட்டத்திலும் அதிக பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் அது அந்தக் காலம். இப்போது மந்திரிக்கும் மரத்துப் போய் விட்டது. அதிகாரிகள், ஊழியர்களுக்கும் அடிக்கடி மந்திரி சபை மாற்றம், அமைச்சர் பதவி விலகல், அல்லது பதவி நீக்கம் என்பன சகஜமாகி விட்டதால் அலட்சியம் வந்து விட்டது!''

கட்டுரை: **மௌலி**

மேலட்டை வண்ணப்படம்: மற்றும்
புகைப்படம்: **ஸ்கார்ப் நியூஸ்**



என் குடும்பம் என் உலகம்


"என்னுடைய குடும்பமே எனது உலகம். என்னிடம் வாழ்க்கையை ஓட்டுவதற்கு வேண்டிய கொஞ்சம் நிலபுலன் இருக்கிறது— வயல் இருக்கிறது. தலைசாய்ந்து படுக்க கூரைக் குடிசை இருக்கிறது. ஆனால் நாளையைப் பற்றிய கவலையும் படவேண்டியிருக்கிறதே! எதாவது விபத்து நிகழ்ந்து விட்டால் என்ன செய்வது!"

ஆம்! இது ஒரு அறிவுள்ள மனிதனின் சிந்தனைப் போக்கு. விபத்து ஏற்படுவதும் ஏற்படாததும் ஒருவர் கையில் இல்லை. ஆனால் வருங்காலத்தைப் பற்றி யோசனை செய்வது பொறுப்புடைய அனைவரின் கடமையாகும்.

விவசாயிகள், கிராம வாசிகள் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கு ஓரியண்டல் இன்ஷுரன்ஸ் மூலம் சில விசேட பாலிஸிகள் கிடைக்கும். உதாரணமாக:

1) தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் மற்றும்
2) கிராமிய விபத்து இன்ஷுரன்ஸ் பாலிஸி

இந்த இன்ஷுரன்ஸ் பாலிஸிகளின் நோக்கம்— துன்பத்திற்கு உள்ளாக்கும் விபத்தினால் மரணம் நேர்ந்தாலோ, செயல்பட முடியாமல் உடல் ஊனமுற்றாலோ பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்குவதாகும்.



இன்ஷுரன்ஸ்	ஆண்டு பிரீமியம் தொகை	
எருமை/பசு	ஐ.ஆர்.டி.பி 2 ரூ. 25 பைசா	(மற்றவை) 4.00 ரூ.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ்	நபருக்கு 12 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 15,000 ரூ.
கிராமிய விபத்து இன்ஷுரன்ஸ்	நபருக்கு 5 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 6,000 ரூ.
விவசாய பம்பு செட்		
i) மின் சக்தியால் இயங்குவது	50 முதல் 190 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொருத்து)	
ii) டீசலினால் இயங்குவது	70 முதல் 230 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொருத்து)	
முட்டை இடும் கோழி	ஐ.ஆர்.டி.பி. ஒரு குஞ்சிற்கு 80 பைசா (1 நாள் முதல் 72 வாரம் வரை)	(மற்றவை) 1.20 முதல் 1.50 ரூ. வரை (வயதுக்குத் தக்கபடி)
பிராய்லர் குஞ்சு	ஒரு குஞ்சிற்கு 25 பைசா (1 நாள் முதல் 8 வாரம் வரை)	

தி ஓரியண்டல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஓரியண்டல் ஹவுஸ், ஏ-25/27, ஆஸஃப் அலி ரோடு, புதுதில்லி-110 002

Advtg. Integrated/OIC-Tam/7589



வண்ணப்படம்: எம். கே. ராமமூர்த்தி.

ஆலம்பூண்டி அபூர்வ சகோதரர்கள்!

"இங்கே வெள்ளைக்காரங்க இருக்காங்களாமே, அவங்க வீடு எங்கேங்க?" — செஞ்சியிலிருந்து திருவண்ணாமலை செல்லும் பாதையில், ஒன்பதாவது கி. மீட்டரில் இருக்கும் ஆலம்பூண்டி கிராமத்தில் இறங்கி, ஒரு பெட்டிக்கடைக்காரரிடம் கேட்டோம்.

"இந்தத் தெருவுலயே போங்க... கோடில போய்ப் பீச்சாங்கைப் பக்கம் திரும்புங்க.. அக்ரஹாரம் வரும். அதன் கோடில ஒரு புள்ளையார் கோயில் தெரியும். அதுக்குப் பக்கத்திலதாங்க வெள்ளைக்காரங்க இருக்காங்க..."

அவர் கூறியபடியே போனோம்.

வாசலில் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கதவு பாதி திறந்திருந்தது. தட்டினோம்.

"சார்... உள்ளே வரலாமா?" — நாங்கள் ஆங்கிலத்தில் கேட்டோம்.

"கொஞ்சம் பொறுங்கள். இதோ வந்துவிடுகிறேன்!" — அழகான தமிழில் குரல் வந்தது.

நாங்கள் ஆச்சரியத்தோடு காத்திருந்த போது, மேலே பனியனும் இடுப்பில் லுங்கியுமாக அவர் வந்தார்.

"வணக்கம்! என் பெயர் அருள். உள்ளே வாருங்கள் பேசுவோம்." — சிரிக்கும் முகத்தோடு இரண்டு கைகளையும் கூப்பி வணங்கினார்.



• சாந்திதாஸ்

உள்ளே சென்று அமர்ந்தோம். எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

"இதற்காகவா நீங்கள் சென்னையிலிருந்து வருகிறீர்கள்! ஆச்சர்யமாக இருக்கிறது. நல்லது. சாப்பிட்டீர்களா?" — அவர் தமிழிலேயே பேசினார்.


"இல்லை. எனினும் அவசரமில்லை."

"அது எப்படி? இருங்கள் முதலில் காப்பி போட்டுத் தருகிறேன். பிறகு அரிசியை உலையில் போட்டு விட்டு வருகிறேன். பிறகு பேசுவோம். பாலில்லாக் காப்பிதான். பரவாயில்லையா?" — நாங்கள் என்ன சொல்லியும் கேளாமல் காப்பி போட்டுக் கொடுத்தார். அரிசியையும் உலையில் போட்டு விட்டுத்தான் வந்தார். பேசினார்.

"நான் பிரஞ்சுக்காரன். இங்கே வந்து என் பெயரை அருள் என்று வைத்துக் கொண்டேன். இன்னொருவர் சாந்திதாஸ். அவர் பெல்ஜியத்துக்காரர். இன்னொருவர் மைக்கேல். அவரும் பிரஞ்சுக்காரர்தான். அவர்கள் இருவரும் இப்போது செஞ்சிக்குச் சமையல் சாமான்கள் வாங்கி வரச் சென்றிருக்கிறார்கள். வந்து விடுவார்கள். நாங்கள் இந்த ஊருக்கு வந்து இன்றோடு இருபத்தைந்து ஆண்டுகள் முடிவடைகின்றன. அதைக் கொண்டாடும் வகையில் நாளைக்குப் பத்துப் பதினைந்து கிராமவாசிகளுக்கு ஒரு சிறு விருந்து கொடுக்கப் போகிறோம். நீங்களும் நாளை வரை தங்க முடிந்தால் மிகுந்த சந்தோஷமடைவோம்... நல்லது. வேறென்ன தகவல்கள் வேண்டும்?"

"நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்?"

"தொழுநோயாளிகளுக்குச் சேவை செய்வதற்காக. விரிவாகச் சொல்கிறேன்... எங்கள் நாட்டில் சார்ல்ஸ் (முழுப் பெயர்: **(Charles de Foucauld)** என்று ஒருவர் இருந்தார். அவர் இறைவனைத் தேடிக் கண்டடையும் முயற்சியில் ஈடுபட்டார். இறைவன் ஏழைகளின் மத்தியில்தான் இருக்கிறார். அதனால்தான் பாலஸ்தீனத்திலுள்ள நாசரேத் என்ற ஊரில் இறை மகனான ஏசுபிரான் முப்பதாண்டு காலம் ஒரு சாதாரணத் தச்சுத் தொழிலாளியாக வாழ்ந்தார். எனவே நாமும் ஏழைகளோடு ஏழைகளாக



* அருள்: கைப்புண்ணுக்குச் சிகிச்சை.

வாழ்ந்து அவர்களோடு நமது வாழ்க்கையை ஐக்கியப்படுத்திக் கொண்டால்தான் இறைவனைத் தரிசிக்க முடியும் என்பதைச் சகோதரர் சார்ல்ஸ் உணர்ந்தார். அதன்படியே அவர் நாசரேத் சென்று முஸ்லீம்கள் மத்தியில் வாழ்ந்தார். மத வேறுபாடுகளை மறந்து அவரவரும் ஒருவருக்கொருவர் மனித நேயத்தோடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று — அதற்கு ஓர் உதாரணமாகவே திகழ்ந்தார்.

''ஆயினும் அவர் உயிரோடு இருக்கும் வரை அவரது வழிமுறையைப் பின்பற்றி யாரும் வாழ முன்வரவில்லை. 1916—ல் அவரது மறைவிற்குப் பிறகுதான் அவரது வழிமுறை சிலரைக் கவர்ந்தது. அவரைப் பின்பற்றுபவர்களை ஒருங்கிணைத்து 'ஏசுவின் சிறிய சகோதரர்கள்' என்று ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. லண்டனில் அதன் தலைமையிடம் அமைக்கப்பட்டது. அதைச் சார்ந்தவர்கள்தான் நாங்கள்.

''இந்தியாவுக்கு — அதுவும் ஆலம்பூண்டிக்கு நாங்கள் எப்படி வந்தோம் என்பதும் சுவாரஸ்யமானது. எங்கள் மூவரில் மைக்கேல் என்பவர் 1962—ல் இந்தியாவுக்கு ஒரு பயணியாக வந்தார். அப்போது, இங்கே அருகிலுள்ள மழவந்தாங்கலில் தொழுநோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கென்றே ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தி மருத்துவமனை நடத்தி வரும் ஜெகதீசன் என்ற காந்தியவாதியைச் சந்தித்தார். இருவரும் பேசிக் கொண்ட போது, சகோதரர் சார்ல்ஸின் வழிமுறைகளும், காந்தியின் வழிமுறைகளும் ஒன்றாக இருப்பதை உணர்ந்தார் மைக்கேல். அந்த அடிப்படையில்தான் நாங்கள் 1964—ல் இங்கு வந்தோம்.


''எங்கள் கொள்கைகளுக்கான தலைமையிடம் லண்டனில் இருந்தாலும் பொருளாதார ரீதியாக எங்களுக்கு அதனோடு எந்தத் தொடர்பும் இல்லை. நாங்கள் இங்கே வேலை செய்கிறோம். அதற்கு இங்கே சம்பளம் தருகிறார்கள். அந்தச் சம்பளத்தைக் கொண்டு நாங்கள் எங்களின் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி



* மைக்கேல்

தண்ணீர் பிடித்துக் கொண்டு வருகிறார்கள்...





கும்பகோணத்திலுள்ள ஒரு கடையில் காணப்படும் வாசகம்:

''விலை மலிவு என்று தரம் குறைந்த ஒரு பொருளை வாங்குவது, நேரத்தைச் சேமிப்பதற்காகக் கடிகாரத்தை நிறுத்துவது போன்றதாகும்.''

— தேனி. என். செல்வராஜன்.

செய்து கொள்கிறோம். அவ்வளவுதான்.''

''உங்களுக்கு இங்கே யார் சம்பளம் தருகிறார்கள்?''

''ஜெகதீசன் ஏற்படுத்தியுள்ள டிரஸ்ட்தான். சுற்று வட்டாரக் கிராமங்களுக்குச் சென்று தொழுநோயாளிகளைக் கவனிக்க டிரஸ்டிலேயே ஆளுக்கொரு சைக்கிளும் தந்திருக்கிறார்கள்.''

''உங்கள் அமைப்பைச் சார்ந்தவர்கள் இந்தியாவில் வேறு எங்காவது இருக்கிறார்களா?''

''ஆலம்பூண்டி. அடுத்தது ஹைதராபாத்தான். அங்கு நான்கு பேர் இருக்கிறார்கள்.''

''இப்போது இங்கு தொழுநோயாளர்களின் எண்ணிக்கை எப்படியிருக்கிறது?''

''நாங்கள் வந்த போது இருந்ததை விட இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது. அதனால், இப்போது தொழுநோய்க்கு மட்டுமின்றிச் சிறு சிறு வியாதிகள், காயங்கள் போன்றவற்றுக்கும் மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் இங்கு வறட்சி காரணமாக விவசாய வேலைகளும் அதை நம்பியிருக்கும் தொழிலாளர்களும் வெகுவாகப் பாதிப்புக்குள்ளானதால், இப்போது அவர்களுக்கெல்லாம் கைத்தறி நெசவு கற்றுத் தந்து கொண்டிருக்கிறோம். தொழுநோயாளிகளுக்குச் சேவை செய்வதற்காக மட்டுமே நாங்கள் வரவில்லை. ஏழைகளோடு வாழ்ந்து — அவர்களின் எல்லாக் கஷ்டங்களையும் அனுபவித்து அதன் மூலம் இறைவனைத் தரிசனம் செய்வதற்காகத்தானே வந்திருக்கிறோம். சொல்லப் போனால், எங்களுக்கும் தொழுநோய் வர வேண்டும். அப்போதுதான் அவர்கள் சமூகத்தில் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை அனுபவபூர்வமாகத் தெரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறோம்.''

''ஆரம்பத்தில் உங்களின் வருகை என்பது, ஏதோ மத மாற்றத்திற்குத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்ற உணர்வைக் கிராம மக்களுக்கு ஏற்படுத்தியிருக்குமல்லவா?''

''அப்படியோர் உணர்வை ஏற்படுத்தவில்லை. காரணம், எங்கள் நோக்கம் சேவையே தவிர, மத போதனை அல்ல. நாங்கள் யாரிடமும் ஒருபோதும் மத போதனை செய்ததேயில்லை. எனவே எங்களை இந்த மக்கள் எந்தவிதமான சந்தேகமும் கொள்ளாமல் ஏற்றுக் கொண்டு தங்களில் ஒருவராக்கிக் கொண்டார்கள்.''

''உங்கள் வழியைப் பின்பற்றும் பெண்களும் இருக்கிறார்களா?''

''ஆங்... சொல்ல மறந்து விட்டேன். மன்னியுங்கள். பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் 'ஏசுவின் சிறிய சகோதரிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தியாவில் பெங்களூர், திருவனந்தபுரம் ஆகிய இரண்டு இடங்களில் இருக்கிறார்கள்.''

''நாங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே செஞ்சிக்குச் சென்றிருந்த சாந்திதாஸ், மைக்கேல் ஆகிய இருவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களும் அழகான தமிழிலேயே பேசினார்கள்.

இதற்கிடையில் அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி வந்தார். அவர்கள் மூவரையும் தம் வீட்டிற்குச் சாப்பிட அழைத்தார்.

''அம்மா, எங்களுக்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து நாங்கள் சாப்பிடுவதுதான் மரியாதையாக இருக்கும்'' என்றார் சாந்திதாஸ்.

''பொன்னி அரிசி போட்டு ஆக்கியிருக்கேன். ஒருத்தராவது வந்து சாப்பிடுங்கய்யா...'' என்றார் அவர் விடாப்பிடியாக.

மைக்கேல் எங்களோடு சேர்ந்து சாப்பிட இயலாமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அந்தப் பெண்மணியின் வீட்டிற்குச் சாப்பிடச் சென்றார்.

நாங்கள் இங்கே சாப்பிட அமர்ந்தோம்.

''வீட்டுக்கு வந்த விருந்தாளிகளுக்கு வீட்டுப் பெண்கள் பரிமாறுவதுதான் மரியாதை. ஆனால், சகோதரர்களான எங்கள் வீட்டில் பெண்கள் எப்படி இருப்பார்கள்! எனவே, எங்களை மன்னியுங்கள்...'' என்றார் சகோதரர் சாந்திதாஸ்.

சாப்பிட்டு முடித்ததும், சகோதரர் அருள் பக்கெட்டுகளை எடுத்துக் கொண்டு தண்ணீர் பிடித்து வரச் சென்றார். அதற்கிடையில் முன்னாள் ராணுவத்தினரான ஒரு பெரியவர் தமது பென்ஷன் விஷயமாக ஆங்கிலத்தில் வந்திருந்த கடிதத்தின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்வதற்காகச் சாந்திதாஸைத் தேடி வந்தார். பொறுமையாக அவருக்குத் தமிழில் விளக்கினார் சாந்திதாஸ். இவரும் பிறகு தண்ணீர் பிடித்து வரச் சென்றார்.

தண்ணீர் பிடித்து முடித்த அருள் உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆலம்பூண்டியிலுள்ள மருந்தகத்திற்குச் சென்றார்.

நாங்களும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம். புறப்பட்ட போது, ஏதோ நமது சொந்த வீட்டிலிருந்து நமது சொந்த ஜனங்களைப் பிரிந்து வெளியூருக்குப் புறப்படுவது போல் இருந்தது எங்களுக்கு!

— இளங்கோவன்

படங்கள்: யோகா



"என் கண்மணியின் மிருதுவான சருமத்திற்கு நான் ஜான்ஸன்ஸ் பேபி சோப் ஒன்றையே நம்புகிறேன்."



வேறு எந்த சோப்பிலும்
ஜான்ஸன்ஸ் பேபி ஆயில் கிடையாது

குழந்தைப் பராமரிப்பில் தலைமுறை தலைமுறையான நிறுவனம்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

OBM/4681/TAM

வெற்றிக்குப் போடும் வேஷங்கள்...

சந்துரு ஒரு வேலையில்லாப் பட்டதாரி. இருப்பினும் அவன் ரொம்ப சந்தோஷமாயிருந்தான். காரணம், அவன் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்ப்பித்தன் ஜெயித்து மந்திரியாகவும் ஆகிவிட்டதுதான். இனி தனக்கு எப்படியும் அவர் வேலை வாங்கித் தந்து விடுவார் என்கிற சந்தோஷம் அவன் உடலெங்கும் பரவித் துள்ளச் செய்தது!

தமிழ்ப்பித்தனுடைய கட்சித் தலைவர் ஒரு நாள் மாடங்குளத்தில் பேசும் போது, இளைஞர்களையெல்லாம் கவர்ந்து இழுப்பது போல் அற்புதமாகப் பேசினார். அதைக் கேட்டதிலிருந்து சந்துருவுக்கு அரசியலில் ஆர்வம் வந்துவிட்டது. அதன் காரணமாகத்தான் தமிழ்ப்பித்தனை ஆதரித்துத் தேர்தல் வேலைகளைச் செய்தான் சந்துரு.

முதலில் தமிழ்ப்பித்தன் மாடங்குளம் தொகுதியில் போட்டியிடவே ரொம்பவும் பயந்தார். காரணம், அவருடைய அக்காவின் கணவர் எதிர்க் கட்சியின் சார்பில் அங்கு போட்டியிட்டதுதான். இருப்பினும் சந்துரு போன்ற இளைஞர்களின் தீவிரத் தேர்தல் பிரசாரத்தில் நம்பிக்கை வைத்துப் போட்டியிட்டு இப்போது வெற்றி பெற்றதோடு அமைச்சராகவும் ஆகிவிட்டார். இனியென்ன கவலை?

இப்படி நினைத்துச் சந்தோஷப்பட்ட போதுதான் சந்துருவின் நண்பன் கோபால் வந்தான். "எப்படியோ கஷ்டப்பட்டுத் தமிழ்ப்பித்தனை மந்திரியாக்கிட்டீங்க. இனி அவர் எங்கே உங்களையெல்லாம் திரும்பிப் பார்க்கப் போறாரு?" என்று கிண்டலாய்க் கேட்டான்.

"டேய்... அப்படிப் பேசாதே. தொண்டர்களை மதிக்கிற கட்சியடா எங்கள் கட்சி..." — சந்துருவுக்கு ஆவேசமே வந்துவிட்டது.

"அரசியல்வாதிங்களை மட்டும் என்னைக்கும் நம்பக் கூடாதுடா..." — கோபால் விடவில்லை.

"பாரு... கூடிய சீக்கிரம் எனக்கு கவர்மெண்ட்லே நல்ல வேலை கிடைக்கப் போவுது. போன முறை அமைச்சர் நம் ஊருக்கு வந்தபோது போய்ப் பார்த்துப் பேசினேன். எந்த வேலைக்காவது அப்ளிகேஷன் போட்டுட்டு, ஒரு காப்பியைத் தமக்கு அனுப்பி வைக்கச் சொன்னார். உடனே எனக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்யறதாகவும் சொல்லியிருக்காருடா... அதன்படி செய்துட்டும் வந்திருக்கேண்டா..."

"சொன்னபடி நடந்தாச் சரி..." என்று கோபால் சொல்லிக் கொண்டிருந்தபோதே, "என்னப்பா பெரிய கம்பெனியிலே வேலை கிடைக்கப் போகுதாமே உனக்கு" என்று சொல்லிக் கொண்டே வந்தார் சந்துரு வீட்டுப் பக்கத்து வீட்டுக்காரர்.

"ஆமாம் சார். கவர்மெண்ட்ல நல்ல ஆபீஸர் வேலை கிடைக்கப் போகிறது..." என்று ரொம்பவும் பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

வேலைக்கான இண்டர்வியூ நடந்தது. அதற்கு முன்பே அமைச்சரைப் பார்த்து விட்டு வந்திருந்தான் சந்துரு. 'உனக்குத்தான் அந்த வேலை... அது உறுதி...' என்று அமைச்சரும் சந்துருவிடம் உறுதியாகச் சொல்லியிருந்தார்.

இருந்தபோதிலும் இண்டர்வியூ முடிந்து பல நாட்களாகியும் ஆர்டர் வந்தபாடில்லை. எனவே அந்த ஆபீஸுக்கு நேரிலேயே சென்று விசாரித்து வரலாமென்று சென்றான்.

"பதினைந்தாம் தேதி இண்டர்வியூ நடந்ததே. அதில் யாருக்கு சார் வேலை கிடைச்சிருக்கு?" அப்பாவியாக விசாரித்தான்.

"அமைச்சரோட சிபாரிசுக்குத்தான்."


உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே, "யாரு சார் அந்தச் சிபாரிசு...?" என்றான்.

"அது வேறே யாருமில்லே, அமைச்சரோட அக்கா மகன்தான். அவரு எதிர்க் கட்சியில் இருந்தாக் கூட — இவரை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தாலும் உறவை எப்படி ஒதுக்கிட முடியும்?" — அந்தக் கிளார்க் நமுட்டுச் சிரிப்புடன் சொன்னார்.

சந்துருவுக்குத் தலை சுற்றியது. அமைச்சர் தேர்தலுக்கு முன்பு ஊழியர் கூட்டத்தில் பேசும் போது, 'எனக்கு உடன் பிறந்த சொந்தங்கள் நீங்கள்தான்; கட்சித் தொண்டர்கள்தான்! அதைத் தவிர எனக்கு வேறு உறவோ சொந்தமோ கிடையாது. உங்களுடைய கடுமையான முயற்சியில்தான் இருக்கிறது நம்முடைய வெற்றி...' என்று பேசியது வெற்றிக் கனி பறிக்கப் போட்ட வேஷம்தானா?

சந்துரு இப்போதுதான் தெளிவாகச் சிந்திக்க ஆரம்பித்தான்!

சிநேகிதா



இன்று நான் சூப்பர்ஸ்டார் இல்லை...



பிளாட்பாரம் முழுவதும் நிரம்பிப் போயிருந்தது. சூப்பர் ஸ்டார் அரவிந்த் வெளிப்புறப் படப்பிடிப்பிற்காகச் செல்கிறான் என்றால் சும்மாவா! அவன் இப்படி ரயிலில் போகப் போவதை ரகசியமாக வைத்திருந்தும் எப்படியோ விஷயம் வெளியில் தெரிந்து இப்படி கூட்டம் கூடி விட்டது.



எத்தனையோ ஜோடிக் கண்கள் அவனை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தன. அவனின் முகதரிசனம் ஒருமுறை கிட்டாதா என்று ஜனங்கள் அலைமோதி ஒருவரை ஒருவர் நெட்டித் தள்ளினர். பூமாலைகள், கரகோஷம், ஆரவாரம், பாராட்டு... அப்பப்பா, கடைசியாய் ரயில் புறப்படும் விநாடிதான் அவன் ஏ.சி. பெட்டிக்குள் நிம்மதியுடன் நுழைந்தான். 'அப்பாடா' என்று உட்கார்ந்தான். கண்களை மூடிக் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தான். ஆரவாரங்களைக் கேட்டு மனம் இன்னும் ஆரவாரமாய் இருந்தது. படிப்படியாய் மனம் அமைதியடைந்தது. ஒன்றுமே செய்யாமல் வெறுமனே ஸீட்டில் சாய்ந்து காலை நீட்டி உட்கார்ந்தான். ரயில் வேகமெடுத்துப் போகத் தொடங்கியது.

இருபது நிமிடங்களுக்குப் பின் அவன் மெதுவாகக் கண் விழித்தான். எதிர்ச் சீட்டில் அழகான, இளமையான பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவன் திடுக்கிட்டான். அவளை மறுபடியும் கூர்ந்தான். இயற்கை அழகோடிருந்தாள். படித்த களை இருந்தது. மெல்லிய தேகம். கூந்தல் அடர்த்தியைத் தாங்க முடியாதோ என்று நினைக்க வைக்கிற மெல்லிசான இடை. அதிக நிறமில்லை. ஆனாலும் ஒரு ஜொலிப்பு உடலெங்கும் தெரிந்தது. ஸிம்பிளாக உடை அணிந்திருந்தாள். அதுவே விசேஷமாகத் தெரிகிற மாதிரியான உடற்கட்டைப் பெற்றிருந்தாள். பக்கவாட்டில் தெரிந்ததால் அவள் மூக்கின் அழகு அயர வைத்தது. மூக்குத்தி அணிந்திருந்தாள். அதன் மினுக்கலில் கவிதை வெளிச்சங்கள்... கண்களில் எக்கச்சக்க அமைதி! அழகான அமைதி. மிருதுவான அமைதி. இதழ்கள் மிகவும் மெல்லிசாக இருந்தன. அதில் பனியின் மினுமினுப்பு உட்கார்ந்திருந்ததால் அழகாயிருந்தன. உலகத்து அழுக்கு என் மேல் படியவேயில்லை என்பது போன்ற ஸ்படிக முகத்தோற்றம்...

அட! அரவிந்த் வியந்து கொண்டான். இப்படி யாரையும் அவன் மனசுக்குள் அளந்தது இல்லை. அந்த அளவுக்கு நேரமும் இருந்ததில்லை. சூப்பர் ஸ்டார் என்பதால் அந்த சினிமாவின் போதையில், அவனைச் சிந்திக்க விடாமல் எல்லோரும் அவன் மேல் பாய்ந்து விடுவார்கள். இவளானால் அவன் ஒருவன், — அதுவும் இத்தனை பிரபலமானவன் — இருப்பதைக் கூட உணராதவளாய்த் தன் போக்கில் இருக்கிறாளே! பார்க்கலாம், எவ்வளவு நேரம் இருக்கிறாள் என்று!

ரயில் லயத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. வெளிச்சம் மங்கத் தொடங்கி விட்டது. வானத்தில் கருமை உட்காரத் தொடங்கியது. வானத்தில் நட்சத்திரங்களே இல்லாமல் முழுக் கறுப்பு. நிழலாய் மரங்களும், வயல்களும் பின்நோக்கி விரைந்தன. அவன்

சங்கரி அப்பன்

இலேசாய் அவளை நோட்டமிட்டான். அவள் நிமிராமல் எதையோ படித்துக் கொண்டிருந்தாள்.

அவனுள் ஒரு கோபம் எட்டிப் பார்த்தது. 'ஏய் இங்கே பாருடி... என்னைப் பார்க்கத் துடிக்கிற ஜனங்கள் எத்தனை பேர் தெரியுமா? அவர்களுக்கெல்லாம் கிடைக்காத பாக்கியம் உனக்குக் கிடைச்சிருக்கு. என்ன செருக்கு உனக்கு! என்னைக் கண்டு கொள்ளாதவள் போல் என்ன நடிப்பு!' என்று உள்ளுக்குள் பொருமித் தீர்த்தான்.

அவள் கவனத்தைக் கவர்ந்து அவளைத் தன்னுடன் பேச வைத்து விட வேண்டும் என்ற வெறி அவனுக்கு ஏற்பட்டது. எழுந்தான். சத்தமாய் சூட்கேசைக் குடைந்தான். அமர்ந்தான். மீண்டும் எழுந்தான். டாய்லெட் சென்றான். வந்தான். ப்பா... சோம்பல் முறித்தான். சத்தமாய்க் கொட்டாவி விட்டான். அவள் அப்பொழுதும் பேசாமலிருந்தாள். 'ம்.. செவிடோ என்னவோ' என்று பற்களைக் கடித்துக் கொண்டான்.

எப்படியும் ஒழியட்டும்! பேசா விட்டால் என்ன, என்று முடிவெடுத்து அமைதியாக உட்கார முயன்றான். ஐந்து நிமிஷம் கழித்து மீண்டும் அதே தவிப்பு வந்தது. ஏன் பேச மாட்டேன் என்கிறாள்? அதற்கு மேல் தாங்காதவனாய் வெடித்தான்.

''என்னைத் தெரியுதா உங்களுக்கு?''

கேள்வி தூக்கிப் போட நிமிர்ந்தாள். அவன் பேசுவான் என்று எதிர்பார்க்காத சின்ன அதிர்ச்சியில் மிரண்டாள். பின் மெல்லச் சிரித்தாள். அப்போதும் பேசவில்லை.

''ஆயிரம் ஆயிரம் ரசிகர்கள் என் முக தரிசனம் கிடைக்காதான்னு ஏங்கித் தவம் கிடக்கறாங்க. ஒரு மணி நேரமா உங்கள் முன்னாலேயே அமர்ந்திருக்கேன். ஒரு தரம் கூட என்னைப் பார்க்கலையே...'' என்று படபடவென்று கேட்டான்.

அவள் மிருதுவாய்ப் புன்னகை செய்தாள். அவனுக்கு எரிச்சல் வந்தது. திமிர் பிடித்தவள்தான். சந்தேகமேயில்லை!

''உங்ககிட்டே ஜனங்க எதை ரசிக்கறாங்க? எதுக்கு மேலே விழறாங்க?'' என்றாள்.

குரல் இனிமையாக இருந்தது. அவன் திடுக்கிட்டுப் போனான். இப்படி ஒரு கேள்வியா?

''என் நடிப்பை ரசிக்கறாங்க... அப்படி அற்புதமா நடிச்ச என்னை நேரில் பார்த்தவுடன் அந்த சந்தோஷத்தில் மேலே விழுந்து தங்கள் அபிமானத்தைக் காட்றாங்க...

''அது.. தப்புங்க... இந்த ஜனங்க மோசம்.

''இதிலென்ன தப்பு?'' என்றான் வெடுக்கென்று. பொறாமை பிடித்தவள் போலிருக்கிறது என்று அவனுக்குத் தோன்றியது.

அவள் நிமிர்ந்து நன்றாக அவனை நோக்கி உட்கார்ந்து கொண்டாள். நினைப்பதை எப்படிச் சொல்வது என்று தெளிவு படுத்திக் கொள்பவள் போல் ஒரு விநாடி சிந்தித்தாள். அப்புறம் சொன்னாள்...

''உங்களுக்குப் புரியும்படி எனக்குச் சொல்ல வருகிறதோ என்னவோ... முயற்சி பண்றேன். சிறப்பா நடிக்கிறீங்க. நீங்க நடிச்ச பல கேரக்டர்கள் மனசிலே எப்பொழுதும் நிற்கிற மாதிரி அமைஞ்சிருக்கு. அந்த ரசிப்பு, உங்க பட கேரக்டரோடு ஒன்றிப் போய், அதோடு நின்று போய் விட வேண்டும். அதை விட்டுட்டுத் தனி மனிதனாய் வெளியே உங்களைப் பார்க்கிற போது தொந்தரவுபடுத்துவது ஏனோ எனக்குச் சம்மதமில்லை...'' நிறுத்தினாள்.

அவன் வியப்புடன் நிமிர்ந்தான். இவள் பார்க்கிற கோணம் புதுசாய்த் தெரிகிறதே? அவன் உணர்வுகள் மென்மைப்பட்டன. மெல்லியதாய்க் கேட்டான்.

''இன்னும் புரியும்படி சொல்லுங்களேன்.''

''நடிகர் அரவிந்த்குமார் என்பது வேறு. தனி மனிதனான அரவிந்த் வேறு. திரையில் ரசித்து விட்டு — பாராட்டி விட்டு அமைதியாய்ப் போய் விட வேண்டும். மேலும் நான் ரசிப்பது திரையில் காணும் உங்கள் கேரக்டர்களை. எனக்குப் பரிச்சயமில்லாத தனி மனிதனான அரவிந்த் குமாரிடத்தில் எனக்கு ரசிப்பு இல்லை. அந்த வகையில் நீங்கள் எனக்கு அறிமுகமில்லாதவர். அதனால்தான் அமைதியாக இருந்தேன்...'' என்று முடித்தாள்.

''கரெக்ட்தான்... ஆனால் ஒரு சக பிரயாணியாக நினைத்து என்னிடம் பேசியிருக்கலாமில்லையா?''

''பேசியிருக்கலாம். திரும்பத் திரும்ப போர் கேள்விகளைக் கேட்டுக் கஷ்டப் படுத்தி, உங்களுக்குக் கிடைக்கிற அபூர்வமான தனிமைச் சுதந்திரத்தைக் கெடுக்க இஷ்டப்படாமல்தான் பேசாமல் இருந்தேன்...''

எதிராளியின் மன உணர்வுகளுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கும் இப்படிப்பட்ட அபூர்வ கேரக்டரை அவன் சந்தித்ததேயில்லை. அவன் மனநிலையைப் பற்றித் துளிக்கூட உணராமல் தங்கள் எண்ணங்களை மட்டுமே பூர்த்தி செய்து கொள்கிற தயாரிப்பாளர்களை, பேட்டியாளர்களை, ரசிகர்களை மட்டுமே இது வரை அவன் சந்தித்திருக்கிறான். ஒரு நூறு ரூபாய் நோட்டையொன்றை உருவி, அவளிடம் நீட்டினான். அவள் திடுக்கிட்டாள்.

''உங்க ஆட்டோகிராஃப் வேணும் மேடம்.''

''நான் சாதாரண மனுஷி... என்னிடம் போய்...'' அவள் சிரித்துக் கொண்டே கையெழுத்திட்டாள்.

''என்னை மனுஷனாக மதித்துப் புரிந்து கொண்ட உங்க உயர்ந்த மனசுக்கு நான் பரம ரசிகனாகி விட்டேன்...''

அவள் என்ன பெயர் எழுதினாள் என்று கூட அவன் பார்க்கவில்லை. அது தேவையில்லை. அது முக்கியமில்லை. அந்த நோட்டைப் பார்க்கும் போது அந்த அற்புத மனசு ஞாபகத்திற்கு வரும். அதுவே போதும்! சுதந்திரக் காற்றுப் போல் விலங்கு உடைந்து போன மனத்துடன் நிம்மதியாகப் படுத்தான்.


"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷிஃப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL
கோத்ரெஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் - நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்


POND'S
POND'S Sandal Talc
POND'S Sandal Talc
பொன் நகைகள் மின்னிட... சந்தன நறுமணம் கமழ்ந்திட...
இனிய உணர்வுகள் மனதில் மலர்ந்திடும் கணங்கள். உங்கள் மேனியில் பொன் நகைகள் மின்னிட, தூய சந்தனத்தின் நறுமணம் கமழ்ந்திட இதுவரை அனுபவித்தறியா உணர்வுகளால் உள்ளம் பூரிக்கிறது; பெண்மை உங்களிடம் பூரண பொலிவு பெறுகிறது.
அரிய நறுமணம். மதிப்பில் பொன்னைப் போல் உயர்ந்தது.
பாண்ட்ஸ் சாண்டல் டால்க்

HTA 7023



அத்தியாயம் 43
"புலி எங்கே?"

ஆதித்த கரிகாலர் எப்பேர்ப்பட்ட ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டார் என்பதை வந்தியத்தேவன் கவனித்தான். கண்மூடித் திறக்கும் நேரத்தில் குதிரையைச் செலுத்திக் கொண்டு வந்து பன்றியின்மீது தன் கையிலிருந்த வேலைச் செலுத்தினான். வேல் பன்றியின் முதுகுத்தோலின் மீது மேலாகக் குத்தியது. பன்றி உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு திரும்பியது. அந்த வேகத்தில் வந்தியத்தேவன் கையில் பிடித்திருந்த வேலின் பிடி நழுவி விட்டது. பன்றியின் முதுகில் இலேசாகச் சென்றிருந்த வேல் நழுவிக் கீழே விழுந்தது.

பன்றி இப்போது வந்தியத்தேவன் பக்கம் திரும்பி ஓடி வந்தது. அவன் தன் அபாயகரமான நிலையை உணர்ந்தான். பன்றியின் தாக்குதலுக்கு அவனுடைய குதிரையினால் ஈடு கொடுக்க முடியாது. கையில் வேலும் இல்லை. இளவரசரோ இன்னமும் குதிரையின் கீழிருந்து வெளிப்படுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார். தான் குதிரை மேலிருந்தபடி ஏதாவது ஒரு மரத்தின் மேல் தாவி ஏறிக் கொண்டால்தான் தப்பிப் பிழைக்கலாம். சீச்சீ! எத்தனையோ அபாயங்களுக்குத் தப்பி வந்து கடைசியில் கேவலம் ஒரு காட்டுப் பன்றியினாலேயா கொல்லப்பட வேண்டும்?......

நல்ல வேளையாக, அருகாமையிலேயே தாழ்ந்து படர்ந்த மரம் ஒன்று இருந்தது. வந்தியத் தேவன் குதிரை மீதிருந்து பாய்ந்து மரத்தின் கிளை ஒன்றைத் தாவிப் பிடித்துக் கொண்டான். கால் முதல் தோள் வரையில் அவனுடைய பலத்தை முழுதும் பிரயோகித்து எழும்பிக் கிளை மீது ஏறிக் கொண்டான். அதே சமயத்தில் பன்றி அவனுடைய குதிரையை முட்டியது. குதிரை தட்டுத்

அமரர் கல்கி

தடுமாறி விழப் பார்த்துச் சமாளித்துக் கொண்டு அப்பால் ஓடியது.

கரிகாலர் இன்னமும் குதிரையின் அடியில் கிடந்தார். வந்தியத்தேவன் மரக்கிளை மீது இருந்தான். காட்டுப் பன்றி இருவருக்கும் நடுவில் நின்று இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தது.

இரண்டு எதிரிகளில் யாரைத் தாக்கலாம் என்று அந்தக் காட்டுப் பன்றி யோசனை செய்கிறது என்பதை வந்தியத்தேவன் அறிந்தான். இளவரசர் இன்னும் குதிரைக்கு அடியிலிருந்து விடுவித்துக் கொண்டு வெளி வந்த பாடில்லை. வெளி வந்து விட்ட போதிலும் பன்றியின் தாக்குதலை அவரால் அச்சமயம் சமாளிக்க முடியுமா என்பது சந்தேகந்தான். அவர் கையில் உடனே பிரயோகிக்கக் கூடிய ஆயுதம் இல்லை. வில்லை வளைத்து அம்பு விடவேண்டும். குதிரைக்கு அடியில் விழுந்து அகப்பட்டுக் கொண்டதில் அவருக்குப் பலமான காயம் பட்டிருந்தாலும் பட்டிருக்கலாம். எப்படியும் இளவரசருக்குச் சிறிது சாவகாசம் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இவ்வளவையும் மின்னல் மின்னும் நேரத்தில் வந்தியத்தேவன் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தான். தான் ஏறியிருந்த மரக்கிளையைப் பலமாக உலுக்கி ஆட்டிக் கொண்டே ''ஆகா ஊகூ'' என்று பெரிதாகச் சத்தமிட்டான்.

அவனுடைய யுக்தி பலித்தது. பன்றி மூர்க்காவேசத்துடன் அவன் ஏறியிருந்த மரத்தை நோக்கிப் பாய்ந்து வந்தது.

''வரட்டும்; வரட்டும். வந்து மரத்தின் பேரில் முட்டிக் கொள்ளட்டும்'' என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே, அவன் ஏறி உட்கார்ந்து உலுக்கிய மரக்கிளை மடமட வென்று முறிந்தது. கடவுளே! இது என்ன ஆபத்து? — கிளையுடன் தரையில் விழுந்தால்? அடுத்த நிமிடமே பன்றியின் கோரப் பற்கள் அவனைச் சின்னாபின்னமாகக் கிழித்து விடும். வேறு கிளை ஒன்றைத் தாவிப் பிடித்துக் கொண்டால் தான் பிழைக்கலாம். அப்படித் தாவிப் பிடிக்க முயன்றான். பிடிக்க முயன்ற கிளை சற்றுத் தூரத்தில் இருந்தபடியால் ஒரு கை மட்டுந்தான் பிடித்தது. பிடித்த கிளை மெல்லியதாயிருந்தபடியால் வளைந்து கொடுத்தது. கைப்பிடி நழுவத் தொடங்கியது. கால்கள் ஊசலாடின! சரி! கீழே விழ வேண்டியதுதான். உடனே மரணந்தான்! சந்தேகமில்லை. ஏதோ, கடைசி கடைசியாக ஆதித்த கரிகாலரைக் காப்பாற்ற முடிந்தது அல்லவா? இளையபிராட்டி இதை அறியும்போது மகிழ்ச்சி அடைவாள் அல்லவா? தன்னுடைய மரணத்துக்காக ஒரு துளி கண்ணீர் விடுவாள் அல்லவா?.....

ஏதோ ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது! அதே சமயத்தில் கைப்பிடியும் நழுவி விட்டது! வந்தியத்தேவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். தடால் என்று கீழே விழுந்தான். விழும் போதே நினைவை இழந்தான்!

வந்தியத்தேவன் நினைவு வந்து கண் விழித்துப் பார்த்தபோது ஆதித்த கரிகாலர் அவன் முகத்தில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். சட்டென்று நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து, ''இளவரசே! பிழைத்திருக்கிறீர்களா?'' என்றான்.

''ஆமாம்; உன்னுடைய தயவினால் இன்னும் பிழைத்திருக்கிறேன்'' என்றார் ஆதித்த கரிகாலர்.

''காட்டுப் பன்றி என்ன ஆயிற்று?'' என்று கேட்டான்.

''அதோ!'' என்று இளவரசர் சுட்டிக் காட்டிய இடத்தில், காட்டுப் பன்றி செத்துக் கிடந்தது.

வந்தியத்தேவன் அதைச் சற்று உற்றுப் பார்த்துவிட்டு, ''அரசே! இவ்வளவு சின்ன உருவமுள்ள பிராணி என்ன பாடு படுத்தி விட்டது? கந்தமாறன் காட்டுப் பன்றியைக் குறித்துச் சொன்னது அவ்வளவும் உண்மைதான். கடைசியில் அதை எப்படித்தான் கொன்றீர்கள்?'' என்று கேட்டான்.

''நான் கொல்லவில்லை. உன்னு

டைய வேலும் நீயுமாகச் சேர்ந்து தான் கொன்றீர்கள்!'' என்றார் இளவரசர்.

வந்தியத் தேவன் அதன் பொருள் விளங்காதவனைப் போல் இளவரசரின் முகத்தைப் பார்த்தான்.

''என்னுடைய வேலைத் தாங்கள் நன்றாக உபயோகப் படுத்தியிருக்கிறீர்கள்! ஆனால் நான் ஒன்றும் செய்ய வில்லையே! ஆபத்தான சமயத்தில் தங்களுக்கு உதவி செய்ய முடியாதவனாகி விட்டேனே?'' என்றான்.

''நீ மரக் கிளையைப் பிடித்து உலுக்கிச் சத்தமிட்டாய் அல்லவா? அப்போது நான் குதிரை அடியிலிருந்து வெளிவந்து உன் வேலை எடுத்துக் கொண்டேன். என் மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த கோபத்தையெல்லாம், பாவம், இந்தப் பன்றியின் பேரில் பிரயோகித்தேன். வேலினால் குத்தப் பட்டதும் அது பயங்கரமாகச் சத்தமிட்டது. என் காதே செவிடாகிவிடும் போலிருந்தது. ஆனால் வேலினால் மட்டும் அது சாகவில்லை. நீ மரக் கிளையிலிருந்து நழுவி அதன் பேரில் விழுந்தாய்; அந்த அதிர்ச்சியினால் தான் செத்தது!'' என்று கரிகாலர் சொல்லி விட்டுச் சிரித்தார். வந்தியத்தேவனும் அதை நினைத்து நினைத்துச் சிரித்தான். உடம்பைத் தடவிப் பார்த்துக் கொண்டு ''பன்றியின் மேல் விழுந்ததினாலே தான், காயம் படாமல் தப்பினேன் போலிருக்கிறது. மகா விஷ்ணு வராக அவதாரம் எடுத்து இரணியாட்சனைக் கொன்றார் என்பதை இனி என்னால் நம்ப முடியும்! அப்பா! எவ்வளவு மூர்க்கமான பிராணி?'' என்றான்.

''இந்தச் சிறு காட்டுப் பன்றியைப் பார்த்து விட்டு வராகாவதாரத்தை மதிப்பிடாதே, தம்பி! வடக்கே விந்திய மலையைச் சேர்ந்த காடுகளிலே தலையிலே ஒற்றைக் கொம்பு உள்ள பன்றி ஒன்று இருக்கிறதாம். ஏறக்குறைய யானை அவ்வளவு பெரிதாயிருக்குமாம். அந்த மாதிரி பன்றியாயிருந்து, நீ ஏறியிருந்த மரத்தை முட்டியிருந்தால், மரம் என்ன பாடு பட்டிருக்கும் என்று யோசித்துப் பார்!'' என்றார் இளவரசர்.

''மரம் அடியோடு முறிந்து விழுந்திருக்கும். தாங்கள் எறிந்த வேலும் முறிந்திருக்கும். நம் கதி அதோகதியாகியிருக்கும். சோழ குலத்தின் எதிரிகளுக்கு வேலை மிச்சமாகப் போயிருக்கும்'' என்றான் வந்தியத் தேவன்.

''தம்பி! உண்மையைச் சொல்லு! என் குதிரை தடுமாறி விழுந்தவுடனே நீ வேலை எறிந்தாயே? அந்தக் காட்டுப் பன்றியின் மேல் எறிந்தாயா? என்பேரில் எறிந்தாயா?'' என்று ஆதித்த கரிகாலர் கேட்டார்.

வந்தியத் தேவன் ஆத்திரத்துடன் ''ஐயா! உண்மையாகவே தாங்கள் இந்தக் கேள்வி கேட்கிறீர்களா? அப்படித் தாங்கள் சந்தேகப்படுவதாயிருந்தால் பன்றியைக் கொன்று என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அவசியம் இல்லையே?'' என்றான்.

''ஆமாம், ஆமாம். உன் பேரில் சந்தேகப்படக் கூடாதுதான். நீ மரக் கிளையை ஆட்டிக் கொண்டு கூச்சல் போட்டிரா விட்டால் எனக்கே அந்தப் பன்றி யமனாக இருந்திருக்கும். ஆனாலும் நீ வேலை எறிந்தபோது ஒருகணம் எனக்கு அத்தகைய சந்தேகம் உண்டாயிற்று. இப்போதெல்லாம் எனக்கு எதைப் பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் வீண் சந்தேகம் தோன்றுகிறது. யமன் என்னைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறான் என்ற பிரமையைப் போக்கிக் கொள்ளவே முடியவில்லை. யமன் இந்தப் பன்றியின் உருவத்தில் என்னைக் கொல்ல வந்ததாகவும் எண்ணினேன்.....''

''அப்படியானால் மிக நல்லதாய்ப் போயிற்று. அரசே! தங்களைத் தொடர்ந்து வந்த யமன் செத்து ஒழிந்தான். இனி என்ன கவலை? கந்தமாறனோடு நாம் போட்டியிட்ட பந்தயத்திலும் ஜயித்து விட்டோம். பன்றியை இழுத்துக்கொண்டு போக வேண்டியது தானே? புறப்படலாம் அல்லவா?'' என்றான் வல்லவரையன்.

''புறப்பட வேண்டியதுதான்! ஆனால் அவசரம் என்ன? சற்று இங்கே தங்கிக் களைப்பு ஆறி விட்டுப் போகலாம்'' என்றார் இளவரசர்.

''தாங்கள் களைப்படைந்ததாகச் சொல்வதை இப்போதுதான் முதன் முதலாகக் கேட்கிறேன். ஆம், குதிரையின் அடியில் சிக்கி ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிருப்பீர்கள்.''

''அது ஒன்றுமில்லை. உடலின் களைப்பைக் காட்டிலும் உள்ளத்தின் களைப்புத்தான் அதிகமாயிருக்கிறது. வந்த வழியாகவே அவ்வளவு தூரமும் காட்டு வழியில் திரும்பிப் போக வேண்டுமா? மறுபடியும் அந்த மூடர்களுடன் சேர்ந்தல்லவா பிரயாணம் செய்ய வேண்டி வரும்? அதைக் காட்டிலும் இந்த ஏரியைக் கடந்து போய் விட்டால் என்ன?''

''கடவுளே! இந்தச் சமுத்திரம் போன்ற ஏரியை நீந்திக் கடக்க வேண்டும் என்றா சொல்கிறீர்கள்? பன்றியிடமிருந்து என்னைத் தப்ப வைத்து ஏரியில் மூழ்கடித்துக் கொல்ல வேண்டும் என்று உத்தேசமா?'' என்றான் வந்தியத்தேவன்.

''உனக்கு நீந்தத் தெரியாது என்பது நினை




விருக்கிறது. என்னால் கூட இவ்வளவு பெரிய ஏரியை நீந்திக் கடக்க முடியாது. ஒரு படகு கிடைத்தால் காரியம் சுலபமாகி விடும். சற்று முன் ஒரு படகு பார்த்தோமே, அது எங்கேயாவது சமீபத்தில் கரையோரமாகத்தானே தங்கியிருக்கும்? அதைத் தேடிப் பிடித்தால் என்ன?''

''குதிரைகளின் கதி என்ன ஆவது? காட்டு மிருகங்களுக்கு உணவாகட்டும் என்று விட்டு விட்டுப் போய் விடலாமா?'' என்றான் வந்தியத்தேவன்.

உடனே ஏதோ ஞாபகம் வந்து திடுக்கிட்டவன் போல் துள்ளிக் குதித்து எழுந்து ''ஐயா! புலி எங்கே?'' என்று கேட்டான்.

''நானும் அதை மறந்து விட்டேன். பக்கத்தில் எங்கேயாவது மறைந்திருக்கப் போகிறது. யமன் பன்றி ரூபத்தில் வராமல் ஒருவேளை புலி ரூபத்திலும் என்னைத் தொடரலாம் அல்லவா?'' என்றார் இளவரசர்.

இருவரும் சுற்று முற்றும் உற்றுப்



பார்க்கலானார்கள். சிறிது நேரம் பார்த்த பிறகு வந்தியத் தேவன் ''அதோ!'' என்று சுட்டிக் காட்டினான்.

ஏரியில் தண்ணீர் கொண்டு வந்து சேர்த்த அந்த வாய்க்கால் வடக்கே போகப் போகக் குறுகலாகிக் கொண்டு சென்றது. அவ்விதம் குறுகலாகியிருந்த இடத்தில் வாய்க்காலின் மீது ஒரு பெரிய மரம் விழுந்து இரு கரைகளையும் தொட்டுக் கொண்டிருந்தது. புலி அந்த மரப் பாலத்தின் மீது மெல்ல ஊர்ந்து சென்று அக்கரையை நெருங்கிக் கொண்டிருந்ததை இரண்டு பேரும் கவனித்தார்கள். இரண்டு பேருடைய மனத்திலும் ஒரே எண்ணம் உதித்தது.

''ஆகா! படகிலே வந்த பெண்கள்!'' என்று இருவரும் ஏக காலத்தில் வாய் விட்டுக் கூறினார்கள்.

பின்னர், ''இந்த வாய்க்காலை அடுத்துள்ள தீவின் கரையிலேதான் அந்தப் பெண்கள் இறங்கியிருக்க வேண்டும்'' என்றான் வல்லவரையன்.

''காயம்பட்ட சிறுத்தை மிக அபாயகரமானது'' என்றார் இளவரசர்.

''பன்றியுடன் புலியையும் கொன்று எடுத்துப் போகத்தான் வேண்டும். இந்த வாய்க்காலை எப்படித் தாண்டுவது? குதிரைகள் மரப் பாலத்தின்மேல் போக முடியாதே?''

''தண்ணீர் கொஞ்சமாகத்தான் இருக்கும். இறங்கிப் போகலாம்.''

கரிகாலரின் குதிரையும் அதற்குள் எழுந்து வந்தியத்தேவன் குதிரைக்கு அருகே போய் நின்று கொண்டிருந்தது. எஜமானர்கள் அந்தரங்கம் பேசியது போல் அவையும் தங்களுக்குச் சற்று முன் நேர்ந்த அபாயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டன போலும்.

இருவரும் தத்தம் குதிரைமீது தாவி ஏறினார்கள். வாய்க்காலில் குதிரைகளை இறக்கினார்கள்.

வாய்க்காலில் தண்ணீர் அதிகமாக இல்லைதான். ஆனால் சேறும் உளையும் அதிகமாயிருந்தன. குதிரைகள் தட்டுத் தடுமாறித் தத்தளித்துச் சென்றன.

கோடிக்கரைப் புதை சேற்றுக் குழிகளை நினைத்துக் கொண்டு வந்தியத் தேவன் ''இந்தச் சேறு ஒன்றும் பிரமாதமில்லை'' என்று தைரிய மடைந்தான். அதைப் பற்றிக் கரிகாலருக்குச் சொல்லவும் தொடங்கினான்.

''நண்ப! வெளியிலுள்ள சேற்றைப் பற்றிச் சொல்லப் போய் விட்டாயே? மனிதர்களுடைய உள்ளத்தில் உள்ள சேற்றைக் குறித்து என்ன கருதுகிறாய்? ஒரு தடவை தீய எண்ணமாகிற சேற்றில் இறங்குகிறவர்கள் மீண்டு கரை ஏறுவது எவ்வளவு கடினம் தெரியுமா?'' என்று கரிகாலர் கேட்டார். இளவரசரின் உள்ளம் உண்மையில் சேறு போலக் குழம்பியிருக்கிறது என்று வந்தியத் தேவன் எண்ணிக் கொண்டான்.

குதிரைகள் மிகப் பிரயாசையுடன் அக்கரையை அடைந்தன. காட்டுக்குள்ளே மிக ஜாக்கிரதையுடன் நாலாபுறமும் உற்றுப் பார்த்துக் கொண்டு இருவரும் சென்றார்கள்.

கரிகாலரின் கையில் வில்லும் அம்பும் தயாராயிருந்தன.

வந்தியத்தேவன் தன் வேலையும் புலியின் பேரில் எறிவதற்கு ஆயத்தமாக வைத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று, காட்டில் சாதாரணமாகக் கேட்கும் சத்தங்களை அடக்கிக் கொண்டு ஒரு பெண்ணின் 'கிறீச்' என்ற குரல், ''அம்மா! அம்மா! புலி!'' என்று கதறுவது கேட்டது.

மணிமேகலை மரக்கிளையின் மீது சிறுத்தையைப் பார்த்த அதே சமயத்தில் வஸந்த மண்டபத்தில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த தோழிப் பெண் ஒருத்தியும் அந்தப் புலியைப் பார்த்துவிட்டு அவ்விதம் அலறினாள்.

அந்தக் குரல் இரு நண்பர்களின் செவிகளிலும் விழுந்து ரோமாஞ்சனத்தை உண்டு பண்ணியது.

குதிரைகளை வேகமாகச் செலுத்திக் கொண்டு குரல் வந்த திசையை நோக்கி அவர்கள் சென்றார்கள்.

ஏரிக் கரையின் ஒரு திருப்பம் திரும்பியதும் அவர்கள் கண்ட காட்சி இருவரையும் திடுக்கிட்டுத் திகில் கொள்ளும்படி செய்து விட்டது.

நந்தினியும் மணிமேகலையும் படித்

துறையில் குளிப்பதற்காக இறங்கிக் கொண்டிருந்த சமயத்தில், அருகில் சாய்ந்திருந்த மரக்கிளை ஒன்றின் மீது சிறுத்தை சிறிது சிறிதாக ஊர்ந்து மேலேறிக் கொண்டிருந்தது.

பன்றியோடு போட்ட சண்டையில் நன்றாக அடிபட்டுக் காயமுற்றிருந்த அந்தச் சிறுத்தை அப்போது தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலையில் இருந்தது.

ஆனால் இது அந்தப் புலியைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க வில்லை.

அடுத்த கணம் சிறுத்தை தண்ணீரில் நின்ற பெண்களின் மீது பாயப் போகிறதென்று கரிகாலரும் வந்தியத் தேவனும் எண்ணினார்கள்.

வந்தியத்தேவன் வேலை உபயோகிக்கத் தயங்கினான். வேல் தவறிப் பெண்களின் மீது விழுந்து விட்டால் என்ன செய்வது என்று பயந்தான்.

கரிகாலருக்கு அத்தகைய தயக்கம் ஒன்றும் ஏற்படவில்லை. வளைத்திருந்த வில்லில் அம்பைக் கோத்து நன்றாகக் குறி பார்த்து இழுத்து விட்டார்.

அம்பு விர்ரென்று சென்று சிறுத்தையின் அடி வயிற்றில் பாய்ந்தது.

சிறுத்தை பயங்கரமாக உறுமிக் கொண்டு அப்பாலிருந்த பெண்களின் மீது பாய்ந்தது.

அடுத்த கணத்தில் என்ன நேர்ந்தது என்பதைத் தெளிவாகப் பார்க்க முடியாதபடி ஒரே குழப்பமாகி விட்டது.

சிறுத்தையும் பெண்கள் இருவரும் திடீரென்று மறைந்து விட்டார்கள்.

சில கண நேரம் கழித்து மூவரும் வெவ்வேறு இடத்தில் தண்ணீருக்குள்ளிருந்து வெளியே தலையை நீட்டினார்கள்.

ஏரியின் நீரோடு இரத்தம் கலந்து செக்கச் செவேலென்று ஆயிற்று.

அத்தியாயம் 44
காதலும் பழியும்

இரு நண்பர்களும் மேற் கூறியவற்றையெல்லாம் திகிலுடன் பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள். குதிரைகள் மீதிருந்து குதித்தார்கள். தண்ணீர்க் கரையோரம் பாய்ந்து வந்தார்கள்.

இதற்குள் சிறுத்தை தண்ணீரிலே சிறிது தூரம் சென்று விட்டது! அது மிதந்த விதத்தைப் பார்த்தால் அது ஒரு வழியாகப் பிராணனை விட்டு விட்டது என்று தோன்றியது.

பெண்மணிகள் இருவரும் புலியினால் எவ்வளவு காயப்படுத்தப் பட்டார்கள் என்பது ஒன்றும் தெரிய வில்லை.


இருவரும் தண்ணீரில் குதித்துப் பெண்மணிகளை நோக்கிச் சென்றார்கள்.

முதலில் வந்தியத்தேவன் மணிமேகலையை அணுகிச் சென்றான். ஏனெனில் நந்தினியை நெருங்குவதற்கு அவனுக்கு அச்சமாக இருந்தது.

மணிமேகலைக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை. புலி விழுந்த வேகத்தில் அவளும் தண்ணீரில் விழுந்து முழுகியதில் சிறிது மூச்சுத் திணறியதைத் தவிர வேறொன்றும் அவளுக்கு நேரவில்லை.

வந்தியத்தேவன் தன் அருகில் வருவதைப் பார்த்ததும் அவள் எல்லையில்லாத உள்ளக் கிளர்ச்சி அடைந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கரிகாலர் வந்தியத் தேவனுடைய கையைப் பிடித்து நிறுத்தி நந்தினியின் பக்கம் அனுப்பி விட்டுத் தன்னை நோக்கி வருவதை அவள் அறியவில்லை. இரண்டு கைகளினாலும் கரிகாலர் அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டு படித்துறைப் படிகளில் ஏறி மேலே போய்ச் சேர்ந்து தரையில் மெதுவாக அவளை வைக்கும் வரையில் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை. மூக்கில் சுவாசம் வருகிறதா என்று கரிகாலர் விரலை வைத்துப் பார்த்தபோதுதான் கண்களை மெள்ள மெள்ளத் திறந்தாள். திறக்கும்போதே வந்தியத் தேவனிடம் தன் கரை காணாக் காதலைத் தெரி



விக்கும் பொருட்டு, அன்பும் ஆர்வமும் ததும்பிய நோக்குடன் பார்த்தாள். அவளுடைய கண்ணின் முன் தெரிந்தவர் இளவரசர் கரிகாலர் என்று தெரிந்ததும் துள்ளி எழுந்து அப்பால் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவளுடைய முகத்தில் அச்சமயம் தோன்றிய ஏமாற்றத்தைக் கவனித்த கரிகாலர் கலீர் என்று சிரித்தார்.

"மணிமேகலை! இது என்ன துள்ளல்? என்னைக் கண்டு இவ்வளவு அருவருப்பு ஏன்?" என்றார்.

"ஐயா! வேற்று மனிதர் கைபட்டால் பெண்களுக்குக் கூச்சமாயிராதா?" என்றாள் மணிமேகலை.

"பெண்ணே! என்னை வேற்று மனிதனாக்கி விட்டாயா? எனக்கும் உனக்கும் கலியாணம் செய்து வைக்க ஏகப் பிரயத்தனம் நடக்கிறதே?" என்றார் கரிகாலர்.

"சுவாமி! அந்தப் பிரயத்தனம் பலித்த பிறகுதானே சொந்தமாக முடியும்? அதுவரையில் தாங்கள் வேற்று மனிதர்தானே?" என்றாள் மணிமேகலை.

"ஆனால் அது உனக்கு இஷ்டமா என்பதை நீ சொல்லலாம் அல்லவா?"

கடம்பூர் இளவரசி சற்றுயோசித்துவிட்டு, "ஐயா! தாங்கள் சோழ குலத் தோன்றல்; எல்லாம் அறிந்த புத்திமான். சிறு பெண்ணாகிய என்னிடம் இவ்விதம் பேசலாமா? என் தந்தையிடமல்லவா கேட்க வேண்டும்?" என்றாள்.

"பெண்ணே! உன் தந்தை சம்மதித்தால் நீ சம்மதிப்பாயா?"

"என் தந்தை சம்மதித்த பிறகு அவர் கேட்டால் சொல்லுவேன். தங்களிடம் இதைப் பற்றிப் பேசவே எனக்குக் கூச்சமாயிருக்கிறது. புலி என்னைக் கொல்லாமலும் நான் தண்ணீரில் முழுகிப் போகாமலும் என்னைக் காப்பாற்றினீர்கள். அதனால் தங்களிடம் எனக்கு ஏற்பட்டுள்ள நன்றி காரணமாக இத்தனை நேரமும் பொறுமையாக இருக்கிறேன்......"

கரிகாலர் சிரித்துவிட்டு, "மணிமேகலை! நீ வெகு கெட்டிக்காரி; மிக அழுத்தமானவள். ஆனாலும் ஏமாந்து போனாய்! அதற்காக என்னை ஏமாற்றப் பார்க்க வேண்டாம்!" என்றார்.

"ஐயா! இது என்ன வார்த்தை? தங்களை இந்த அறியாப் பெண் ஏமாற்றுவதா? எதற்காக? எந்த முறையில்?"

"வீணாக ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிறாய்? எனக்குப் பதிலாக வந்தியத்தேவன் உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து கரை சேர்த்திருந்தால் இவ்வளவு கடூரமாகப் பேசுவாயா? வந்தியத்தேவன் என்று நினைத்துத்தானே நீ கண்ணை மூடிக் கொண்டாய்? அதே எண்ணத்துடனே தான் கண்ணைத் திறந்தும் பார்த்தாய்! பாவம்! ஏமாந்து போனாய்!" என்றார் கரிகாலர்.

மணிமேகலை வெட்கத்துடனே சிறிது பீதியும் அடைந்தாள். பின்னர் தைரியப்படுத்திக் கொண்டு, "அரசே! தங்களுக்குத்தான் என் மனம் தெரிந்திருக்கிறதே! அப்படியிருக்கும்போது, இந்தப் பேதைப் பெண்ணை எதற்காகச் சோதிக்கிறீர்கள்?" என்றாள்.

"மணிமேகலை! உன் மனம் எனக்குத் தெரிந்திருக்கிறது. அதுபோலவே வல்லவரையனுடைய மனமும் எனக்குத் தெரிந்திருக்கிறது. உன்னுடைய பரிசுத்தமான அன்புக்கு அவன் பாத்திரன் அல்லவே என்றுதான் யோசிக்கிறேன். அதோ பார்! இளையராணி நந்தினியும் வந்தியத்தேவனும் சல்லாபம் செய்வதை! நந்தினியின் முகத்தில் குடிகொண்டிருக்கும் குதூகலத்தைப் பார்!" என்றார்.

மணிமேகலை அவர் காட்டிய திசையைப் பார்த்தாள். அந்தக் கணத்தில் அசூயை என்னும் விஷம் அவளுடைய பால் போன்ற நெஞ்சில் ஏறிவிட்டது.


கண்ணழகு காட்டிடும்
காவியச் சோலை
பெண்ணழகைக் கூட்டிடும்
சரிதா சேலை
SARITA
FABRICS
BOMBAY-1
SAREES, DRESS MATERIALS, PUNJABI SUITS,
100% POLYESTER DHOTIS.
எல்லா முன்னணிக் கடைகளிலும் கிடைக்கிறது
ISKRA/SF/C14

அதேசமயத்தில் வந்தியத்தேவனும் நந்தினியும் பேசிக் கொண்டிருந்தார்கள். நந்தினியின் தோள் ஒன்றில் புலி நகம் பட்டு இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

மணிமேகலையைப் போல் நந்தினி கண்ணைமூடிக்கொள்ளவும்இல்லை. வந்தியத்தேவன் கைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள அவசரப்படவும் இல்லை. வந்தியத்தேவனோ, தன் கையைச் சுட்டுக் கொண்டிருந்த நெருப்புத் தணலைக் கீழே போடுவது போல் அவசரமாக இளையராணியைக் கரையில் இறக்கி விட்டான். தண்ணீரில் மூழ்கி இருந்த போதிலும் நந்தினியின் உடம்பு உண்மையிலேயே சுட்டுக் கொண்டிருந்தது.

வந்தியத்தேவன் உள்ளத்தில் இனந் தெரியாத பீதி குடி கொண்டது. அவன் உடம்பு பதறியது.

நந்தினி புன்னகையுடன், "ஐயா! ஏன் இவ்வளவு பதற்றம்? என்னைப் புலி என்று நினைத்துக் கொண்டீரா? அல்லது புலியைக் காக்க நினைத்துத் தவறாக என்னைக் கரை சேர்த்து விட்டதற்காக வருத்தப்படுகிறீரா?" என்றாள்.

"அம்மணி! இவ்வளவு கொடூரமான வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம். தங்களைத் தொட்டு எடுத்து வரும்படி நேர்ந்து விட்டதை நினைத்து நெஞ்சு சிறிது கலக்கம் அடைந்தது......"

"குற்றம் உள்ள நெஞ்சு அல்லவா? அதனால் கலங்குகிறது!"

"தேவி! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே!"

"குற்றம் செய்யவில்லையா? தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு என் உதவியை நாடினீர். முத்திரை மோதிரத்தைக் கொடுத்து உதவினேன். பிறகு என் அந்தப்புரத்தில் திருட்டுத்தனமாகப் பிரவேசித்தீர். அப்போதும் உமக்குத் தீங்கு நேராமல் காப்பாற்றினேன். அதற்குக் கைம்மாறு என்ன செய்தீர்? எனக்குத் தெரியாமல், என்னிடம் சொல்லிக் கொள்ளாமல், திருடனைப் போல் தப்பி ஓடிப் போனீர். பழையாறை இளையபிராட்டியைச் சந்தித்த பிறகு என்னிடம் திரும்பி வருவதாகச் சொன்னீர். அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இவையெல்லாம் குற்றமல்லவா?"



"அந்தக் குற்றங்களை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவை ஒவ்வொன்றுக்கும் காரணம் இருக்கிறது. நான் பிறரிடம் சேவகம் செய்பவன். ஆதித்த கரிகாலருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டவன். இதைத் தாங்கள் எண்ணிப் பார்த்தால் என் பேரில் குற்றம் சாட்ட மாட்டீர்கள்......"

"ஆமாம்; புலியின் வாயிலிருந்து ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்றால் கூடக் கரிகாலரின் கட்டளை உமக்கு வேண்டும். தண்ணீரில் முழுகும் பெண்ணைக் கரை சேர்ப்பதற்கும் அவருடைய அனுமதி வேண்டும். நான் கவனித்துக் கொண்டுதானிருந்தேன். அடடா! மணிமேகலையைக் காப்பாற்றுவதில் இளவரசர் எத்தனை பரபரப்புக் காட்டினார்? நான் நீரில் முழுகிச் செத்துப் போயிருந்தால் சந்தோஷப்பட்டிருப்பார். அவருடைய மனத்தை அறியாமல் நீர் என்னைக் கரை சேர்த்து விட்டீர்......"

"அம்மணி! அவ்வாறு சொல்ல வேண்டாம்! தாங்கள் ஓலை அனுப்பியபடியால்தான் கரிகாலர் காஞ்சியிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறார்......"

"ஆனால் அவர் இங்கு வராமல் தடை செய்வதற்காக நீர் அவசர அவசரமாக ஓடிவந்தீர். இளையபிராட்டியின் செய்தியுடன் வந்தீர். ஆனால் உம்முடைய முயற்சி பலிக்கவில்லை. என்னுடைய காரியத்தில் நீர் தலையிடுவதற்குச் செய்யும் முயற்சியெல்லாம் இவ்வாறுதான் தோற்றுப் போகும்!"

நந்தினியின் இந்த வார்த்தைகள் வந்தியத்தேவனின் மனக் குழப்பத்தை அதிகமாக்கின. அந்த வார்த்தைகளின் உட்கருத்தை நந்தினியின் முகபாவத்திலிருந்து தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவளை உற்றுப் பார்த்தான். ஆனால் நந்தினியின் முகம் எவ்வித மாறுதலும் இன்றி வழக்கம் போலப் புன்னகை பூத்து விளங்கியது.

நந்தினி தொடர்ந்து, "உம்முடைய குற்றத்தை உம்முடைய முகத் தோற்றமே ஒப்புக் கொள்கிறது. அமாவாசை இராத்திரி பள்ளிப்படைக்கு அருகில் நீர் என் வசம் அகப்பட்டீர். என் ஆட்களிடம் ஒரு சமிக்ஞை செய்திருந்தால் போதும், உம்மைக் கொன்றிருப்பார்கள். அப்போதும் உம் உயிரைக் காப்பாற்றி அனுப்பினேன். அதற்குக் கூட உமக்கு நன்றி இல்லை. உம்மைப் போல் நன்றி கெட்ட மனிதரை இந்த உலகத்தில் நான் பார்த்ததேயில்லை..."

"தேவி! என் மனத்தில் தங்களிடம் பரிபூரண நன்றி குடி கொண்டிருக்கிறது. சத்தியமாகச் சொல்கிறேன்."

"ஆனால் இந்த ஊருக்கு நாம் வந்து இத்தனை நாளாகியும் உமது நன்றியைத் தெரிவிப்பதற்கு நீர் ஒரு முயற்சியும் செய்யவில்லையே? உமது வார்த்தையை நான் எப்படி நம்புவது?"

"தங்களைத் தனியாகச் சந்திக்கும் போது தெரிவித்துக் கொள்ளலாம் என்றிருந்தேன். அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை..."

"சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ள நீர் ஒருவித முயற்சியும் செய்யவில்லை. முகத் தோற்றத்தினால், கண் பார்வையினால் ஒரு குறிப்பு வெளியிடக் கூடவில்லை. ஏன்? இத்தனை நாளாக என் பக்கம் நீர் ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்கக் கூடவில்லை..."

"தேவி! தாங்கள் சோழ நாட்டுத் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரின் தர்மபத்தினி..."

"அதாவது கிழவனைக் கலியா



அருள்வாக்கு

அவதாரங்களுக்குள் ஒன்று உசத்தி ஒன்று தாழ்த்தி என்று கிடையாது. காவேரியில் எங்கு குளித்தாலும் காவேரிதானே? ஆனாலும் அதுவே மைசூர் ராஜ்யத்திலிருந்து தமிழ் தேசத்தைத் தொடுகிற இடத்தில் மேகெதாடு என்கிற இடத்தில் ஓர் ஆடு தாண்டுகிற அளவுக்குக் குறுகலாக இருக்கிறது. (கன்னட பாஷையில் 'மேகெ' என்றால் மேஷம். அதாவது ஆடு. தாடு என்றால் தாண்டுவது.) ஸ்ரீரங்கத்துக்கு வந்து சேர்கிற போதோ, "அகண்ட காவேரி" என்று ஒரு கரையிலிருந்து எதிர்க்கரை தெரியாமல் ஒரே பிரவாஹமாயிருக்கிறது. இப்படி ஒரே பகவான்தான் தசாவதாரமும் பண்ணினான் என்றாலும் ஒவ்வொன்றிலும் தன் சக்தியை ஒரே மாதிரிக் காட்டாமல் வித்தியாசமாகக் காட்டுகிறான். நரஸிம்ஹ மூர்த்தி அவதாரம் ரொம்பவும் ஸ்வல்ப காலமே இருந்தது. ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியாக வந்தபோது மனுஷ்யர் மாதிரியே பிறந்து வளர்ந்து அநேக வருஷங்கள் லோகத்திலிருந்தார். தெய்வ சக்தியை எல்லாம் அடக்கிக் கொண்டு, எல்லா ஜனங்களிலும் தான் ஒருத்தன் என்று காண்பித்தார். ஸத்ய தர்மங்களில் அவர்களுக்கெல்லாம் முன்னோடியான பரமசிரேஷ்டனானாலும் மஹாவீர தீர பராக்ரமனான போதிலும் மனுஷ்யர்களில் ஒருத்தன்தான் என்று காட்டி விட்டுப் போனார். ராவண ஸம்ஹாரத்துக்குப் பின் ஸீதை அக்னிப் பிரவேசம் செய்தபோது தேவர்களெல்லோரும் வந்து, "நீ நாராயணன் இல்லையா? ஸீதை ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி இல்லையா?" என்று ஞாபகப்படுத்தியபோது அவர், "ஆத்மானம் மாநுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம்" — 'நான் தசரதன் பிள்ளையான மனுஷ்ய ராமன் என்றே என்னை வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



கண்ணகி தன் கணவன் கொலையுண்டதும் வெகுண்டு எழுந்து, நீதி கேட்டுப் பின் மதுரையையே எரித்தாளே. ஏன் அப்படிச் சீதை செய்யவில்லை?

சீதையின் மனநிலையைக் கம்பன் கூறுகிறார்: "இந்த இலங்கை மக்களை என் சொல்லினாலே சுடுவேன். அதாவது என் சொல்லே போதும் இலங்கை பற்றியெரியும். ஆனால் என் மணாளன், கோதண்டராமன் இருக்கிறானே அவன் மதிப்பு என்ன ஆகும்? அவன் வில்லின் திறமை மாசுபடும் அல்லவா? அந்தத் தூயவனுக்கு என்னால் இழுக்கு ஏற்படலாமா? ஆகவே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன் என்று கூடக் கூறவில்லை, விசி எறிந்து விட்டேன்!' என்று கூறுகிறாள் சீதை!

"தூயவன் வில்லிற்கு மாசு என்று விசினேன்!"

—திருப்பரங்குன்றம் விழாவில் கேட்டு இன்புற்று எழுதியவர்: டி. எஸ். கண்ணன்.

ணம் செய்து கொண்டவள் என்று என்னைப் பரிகசிக்கிறீர்; இல்லையா?"

"ஐயோ! தங்களை நான் பரிகசித்தால் கொடிய நரகத்துக்குப் போவேன்......"

"வேண்டாம், வேண்டாம்! எது எப்படியிருந்தாலும் சரி, பழுவேட்டரையரின் 'தர்மபத்தினி' என்று என்னைக் குறிப்பிட வேண்டாம். நான் அவருடைய மனைவியே அல்ல...."

"ஐயோ! இது என்ன சொல்லுகிறீர்கள்?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். பலவந்தமாக ஒரு பெண்ணைப் பிடித்துக் கொண்டு வந்து வைத்திருந்தால், அவள் மனைவி ஆகி விடுவாளா?"

"தேவி! தாங்கள் தமிழ் நாட்டுப் பெண் குலத்தில் வந்தவர். பெண் குலத்தின் தர்மத்துக்கு மாறாகத் தாங்கள் எதுவும் செய்ய மாட்டீர்கள்!"

"பெண் குலத்தின் தர்மத்தை நான் அறிந்துதானிருக்கிறேன். பழந் தமிழ் நாட்டுப் பெண்கள் மனத்தினால் யாரைக் காதலித்தார்களோ, அவரையே கணவனாகக் கொண்டார்கள், பலவந்த மணத்துக்கு அவர்கள் உடன்படுவதில்லை!"

"ஆனால் தாங்கள்.....?"

"நீர் சொல்லப் போவது எனக்குத் தெரியும். பழுவேட்டரையருடைய பலவந்த மணத்துக்கு நான் எப்படி உடன்பட்டேன் என்று கேட்கிறீர். ஒரு முக்கிய நோக்கத்துக்காகவே உடன்பட்டேன். பழந்தமிழ் நாட்டுப் பெண்களுக்கு மற்றொரு சிறப்பியல்பும் உண்டு. அவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பழிக்குப் பழி வாங்கியே தீர்வார்கள். ஐயா! நீர் எனது காதல் நிறைவேறுவதற்குத்தான் உதவி செய்யவில்லை. என் விரோதிகள் மீது பழி வாங்குவதற்காகவாவது உதவி செய்வீரா?"

கடைசியாக நந்தினி கூறிய மொழிகள் ஏககாலத்தில் வந்தியத்தேவனுடைய நெஞ்சை வஜ்ராயுதத்தினால் பிளப்பது போலவும் அவன் தலையில் திடீரென்று பேரிடி விழுவது போலவும் அவனைத் திணறித் திண்டாடச் செய்தன.

"தேவி! தேவி! இது என்ன?...... காதலாவது? பழியாவது? எனக்கும் தங்கள் காதலுக்கும் என்ன சம்பந்தம்? காதலுக்கும் பழி வாங்குவதற்கும் என்ன சம்பந்தம்?......"

"சம்பந்தம் உண்டு. ஆனால் அதைப் பற்றிச் சொல்வதற்கு இப்போது நேரம் இல்லை. அதோ இளவரசரும் மணிமேகலையும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நாளை நள்ளிரவு நேரத்தில் நான் இருக்கும் அறைக்குத் தனியாக வந்தால் சொல்லுகிறேன்......"

"அது எப்படிச் சாத்தியம், தேவி! தாங்கள் அந்தப்புரத்தில் இருக்கிறீர்கள். நான் எப்படி அங்கே இரவில் தனியாக வர முடியும்?"

"அதே அந்தப்புர அறையிலிருந்து ஒரு நாள் நீர் யாரும் அறியாமல் தப்பித்துக் கொண்டு செல்லவில்லையா? போன வழியாகவே அங்கே திரும்பி வரலாம் அல்லவா? உமக்கு மனம் மட்டும் இருந்தால்......"

வந்தியத்தேவனுடைய திகைப்பு இப்போது பரிபூரணமாகி விட்டது.

ஆனால் நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. எப்போதும் போலப் புன்னகை தவழ்ந்தது.

(தொடரும்)

PARRY'S PAGE



பாரீஸ் மிட்டாய்கள் மற்றும் பிஸ்கட்டுகள் அனைவரும் விரும்புவது



பாம்பை ஆட்டி வைப்பது எப்படி?

பாம்பாட்டி, மகுடி ஊதி, இசைக்கேற்ப பாம்பை ஆட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். உண்மை என்னவென்றால், பாம்பிற்கு மகுடி இசை கேட்காது. ஏன், எதுவுமே கேட்காது. காரணம், பாம்புகளுக்கு காது கேட்காது. பாம்பாட்டி மகுடி ஊதும்போது காலால் தரையைத் தட்டிக் கொண்டே, மகுடியைச் சுழற்றிக் கொண்டேயிருப்பார். தட்டுவதனால் ஏற்படும் அதிர்ச்சிக்கேற்ப பாம்பு ஆடுவதுடன் சுற்றி சுற்றி வரும் மகுடியைப் பார்த்து அது சுழன்று ஆடுகிறது.



Fig: 3



Fig: 2

காகித பொம்மை நடன நிகழ்ச்சி

Fig: 1



இதோ ஒரு பென்சில் மேஜிக்!

ஒரு பெரிய கண்ணாடி டம்ளரில் தண்ணீரை ஊற்றுங்கள். ஒரு பென்சிலை டம்ளருக்குப் பின்னால் வைத்துவிட்டு, தண்ணீர் வழியாகப் பாருங்கள். அங்கு இரண்டு பென்சில்கள் தெரியும். வலது கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் இடதுபக்க பென்சில் மறைந்துவிடும். இடது கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் வலது பக்க பென்சில் மாயமாய்ப் போய்விடும்.

இதற்கு காரணம், ரிஃப்ரெக்ஷன் என்னும் ஒளி விலகல் (ஒளி விலகல் பற்றி பௌதிக பாடத்தில் நீங்கள் படித்திருக்கலாம். கண்ணாடி, தண்ணீர் போன்றவற்றின் வழியாக ஒளி செல்லும் போது திசை மாறுதல் அடைகிறது. இதுவே ஒளிவிலகல் என்பதாகும்). நீங்கள் ஒரு மேஜிக் நிபுணர் என்று உங்கள் நண்பர்களிடம் பெருமை அடித்துக்கொள்ளலாம்.




THE KING OF SWEETS

CUT AND KEEP

HTA 7245

தொலைந்த சாவி

கதை: மீ.ரெங்கநாதன் படம்: கலா



18

சுக போகத் தீவுகள்

"விஷம், நெருப்பு, சிங்கம், பாம்பு இவை நான்கும் எந்த அளவில் இருந்தாலும், தன் காரியத்தைச் செய்தே தீரும் என்று ஒரு பழைய சுலோகம் சொல்கிறது. அதோடு, அரசியலையும் சேர்த்துக் கொள்ள வேணும், கண்ணா! தாலுக்கா செயலாளரா இருந்தா என்ன, மாவட்டச் செயலாளரா இருந்தா என்ன, அல்லது அமைச்சராவே இருந்தாத்தான் என்ன! அவனவன் சக்திக்கு ஏற்ப அவனவனும் சுரண்டத்தான் செய்வான்."

ஆராவமுது செல்லமாகத் தன் ஜிப்பா பாக்கெட்டிலிருந்து, குமிழ் மாதிரி சின்னப் பொடி டப்பியை எடுத்தார். டப்பியைத் தலையில் தட்டித் திறந்து, பொடியை எடுத்து, ஒரு மலரை முகர்வது போலத் தம் நாசிக்குள் செலுத்திக் கொண்டார். கைக் குட்டையால் மூக்கை நன்கு துடைத்துக் கொண்டார்.

"நம் நாட்டிலே யோக்கியனா இருக்கிறதே, ஒன்று ஆச்சரியமாகக் கருதப்படுது, அல்லது அப்பாவித்தனமாகக் கருதப்படுது. ஒரு மனுஷன் யோக்கியனா இருக்கிறதே இயல்பான விஷயமாகக் கருதப்படாத ஒரு சமூகத்திலே, யோக்கியர்கள் எப்படி உருவாக முடியும்? சொல்லு கண்ணா..."

கண்ணா என்று அழைக்கப்பட்ட கிருஷ்ணமூர்த்தி, ஆராவமுதின் பேச்சிலேயே லயித்துப் போய் அமர்ந்திருந்தான். எதைச் சொன்னாலும், அதைச் சக்கர வியூகமாக மாற்றிப் பேசும் அந்தப் பெரிய மனிதரின் அப்போதைய வருகையின் நோக்கம் என்னவாக இருக்கும் என்று மனசுக்குள் கேட்டுக் கொண்டான் அவன். சுமார் இரண்டு மணி நேரமாக அவர் அவன் முன் அமர்ந்திருந்தார். அவரை எழுந்து போகச் சொல்ல அவனால் முடியாது. ஏனெனில் அவர் முதல்வர் மற்றும் கட்சியின் மேல் மட்டத் தலைவர் பலருக்கும் ஜோசியர். ஜோசியர் என்ற ஒற்றைச் சொல்லில், ஆராவமுதைக் குறுக்கி விடுவதும் சரியல்ல. பகுத்தறிவுப் பாரம்பரியத்தில் வந்த ஒவ்வொருவருக்கும், கல்யாணம் முதலிய சுப மற்றும் அசுப காரியங்களுக்கு நாள் நேரம் பார்த்துச் சொல்வது அன்னியில், அவர்கள் வீட்டுப் பையன்கள், பெண்களுக்குப் பொருந்துகிற பெண் மற்றும் வரன் பார்த்து ஏற்பாடு செய்தல், தலைவர்களின் பினாமிகளின் பெயர்களில் இருக்கிற சொத்துக்கள் நிலங்களாக இருக்கும் பட்சத்தில், விவசாய வேலைகளைக் கவனித்தல், வீடுகளாக இருக்கும் பட்சத்தில் குடியிருப்பவர்களிடம் வாடகை வசூலித்தல், சினிமாத் தியேட்டர்களாக இருக்கும் பட்சத்தில், வசூல், படமாற்றம் குறித்து மானேஜர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல், கட்சிச் செலவுகளுக்கு ஆன பணத்தை, பணத்தைக் கொடுத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து சூட்கேசில் கொண்டு வந்து உரிய இடத்தில் சேர்த்தல் முதலான பல காரியங்களையும் ஆராவமுது செய்து கொண்டிருந்தார்.

பிரபஞ்சன்

ஆகவே, அவரைப் போகச் சொல்லக் கிருஷ்ணமூர்த்தியால் முடியாது. அத்துடன் அவர், மிகுந்த திட்டங்களோடு வந்திருப்பதும் அவனுக்குத் தெரிந்தது. ஆராவமுது சொன்னார். அவர் முகம் கடுமையானது.

"எனவே மிக முக்கியமான பீடத்தில், விதி உங்களை இப்போது உட்கார்த்தி வைத்திருக்கிறது. ஆறு கோடித் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகிற, அமைச்சரவைப் பட்டியலை நீங்கள்தான் தயார் செய்யப் போகிறீர்கள். உங்களுக்குத் துணை அல்லது உதவி அல்லது வருமானம் செய்து வைப்பது என் கடமை. முதல்வரிடமும் பேசி விட்டுத்தான் வருகிறேன்."

முதல்வர் என்றதும் நிமிர்ந்து அமர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி.

"முதல்வர் என்ன சொன்னார்?"

"சரியான ஆட்களைத் தெரிவு செய்யணும் என்றார். நீங்களாக எதையாவது சொல்லி அவர் சுதந்திரத்தில் குறுக்கிடக் கூடாது என்றும் என்னிடம் சொன்னார்"— பட்டும் படாமல் நமுட்டுச் சிரிப்புடன் சொன்னார் அவர்.

"இதுதானே வேணாம். என்னையே ஆழம் பார்க்கிறீர்கள். இந்தாருங்கள் இந்தப் பட்டியலைப் பாருங்கள்" என்றபடி தன் பிரீப்கேஸைத் திறந்து ஒரு பேப்பரை எடுத்து அவர் முன் வைத்தான் கிருஷ்ணமூர்த்தி.

ஒரு பருந்தின் பார்வையாக அந்தப் பட்டியலைப் பார்த்தார் ஆராவமுது. தன் பருத்த உடம்பை ஒருமுறை அசைத்து விட்டு, தம் வழுக்கைத் தலையைத் தடவி விட்டுக் கொண்டார் அவர்.

"முதல்வர் மூன்று இடங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்றார். மதுரை, கோவை மற்றும் தஞ்சாவூர். இந்த மாவட்டத்து அமைச்சர்கள் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள்."

"அந்த மூன்று மாவட்டத்துக்கும் மூன்று அமைச்சர்களை நான் தெரிவு செய்திருக்கிறேன். பட்டியலைப் பார்த்தீர்கள் அல்லவா?"

"பார்த்தேன். மதுரைக்குச் சொக்கநாதனைப் போட்டிருக்கிறீர்கள்."

''ஆமாம். முதல்வருக்கு அவர் மிகவும் வேண்டியவர் ஆயிற்றே. தவிரவும், கட்சி தொடங்கும் முன்னால் இருந்தே, சொக்க நாதன் தலைவருடன் இருப்பவர் ஆயிற்றே. அவரை முதல்வருக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்...''

''முதல்வருக்குப் பிடிக்கும். ஆனால்...''

''ஆனால்...?''

''முதல்வரின் சம்சாரத்துக்கு அவரைப் பிடிக்காது...''

கிருஷ்ணமூர்த்தி மிகவும் குழம்பிப் போனான். இப்படி ஒரு புதிய பூதம் புறப்படும் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும். அரசியலில், அந்த அம்மை யாரும் பங்கு கொண்டு, பகடைக் காய் நகர்த்துவதை அவன் அறியாதது எவ்வளவு பெரிய துரதிருஷ்டம்?

''கண்ணா... அரசியலை நீங்கள் முதல்வர் அறையோடு மட்டும் நிறுத்திக் கொள்கிறீர்கள். அம்மையாரின் சமையல் அறை வரை நீங்கள் போக வேண்டும் இளைஞரே! அரசியலின் முகம் நாற்பத்தேழுக்குப் பிறகு மாறி விட்டதை நீங்கள் ஏன் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை? சுதந்திரத்துக்கு முன் அரசியல் ஒரு தொண்டு. புனித கைங்கர்யம். அந்தக் காலத்து அரசியல்வாதிகளுக்கு தேச மாதா, தெய்வ மாதா. தேசத்தைத் தெய்வமாகக் கண்ட ஒரு பாரம்பரியம் நமக்கு உண்டு. சுதந்திரத்துக்குப் பிறகு அரசியல் ஒரு நல்ல தொழில். பட்டணத்தில் பால் வியாபாரம், சாராய வியாபாரம், பள்ளிக்கூட வியாபாரம் செழித்து வளர்வது போல் அரசியல் தொழிலும் செழித்து வளர்கிறது. எப்போது ஒரு காரியம் தொழிலாகப் பரிணமிக்கிறதோ, அப்போது அதற்கென்று சில வழிமுறைகள் ஏற்பட்டு விடுகின்றன. அதில் ஒன்றுதான், சாம்ராஜ்ய அரசியல், சமையல் அறைக்குப் போய் இருப்பதும்...''

''புரிகிறது... அப்படியானால் யாரைப் போடுவது?''

''அம்மாவைப் பாருங்கள். அவர் வழி சொல்வார். எனக்கென்னமோ, மயில் சாமியைத்தான் அந்த அம்மாள் அமைச்சராகப் போடும் என்று நினைக்கிறேன்.''

''மயில்சாமி, முதல்வரின் தோப்புக் குத்தகைக்காரர் அல்லவா? அவரா அமைச்சர்?''

''ஏன்? குத்தகைப் பணத்தை மிகவும் ஒழுங்காகக் கொடுக்கிறவர் ஆயிற்றே அவர். செய்யும் தொழிலில் கறாராக இருப்பது, அவர் பிற தொழிலுக்குத் தகுதியுடை



யவர் என்பதைப் புலப்படுத்தவில்லையா?''

''இப்படி ஒரு 'ஆங்கிள்' அந்த விஷயத்துக்கு இருப்பது இப்போதான் எனக்குத் தெரிகிறது.''

மூத்தாய்ப்பாக ஆராவமுது சொன்னார். ''ஆகவே, மயில்சாமியையே போட்டு விடுங்கள்.''

''சரி, கோவைக்கு யாரைப் போடலாம் என்று நீங்களே சொல்லி விடுங்கள்.''

''பார்த்தீர்களா? இதுதானே வேண்டாம் என்கிறது. என்ன இருந்தாலும் நான் ஒரு ஜோஸ்யக்கா'ரன்தானே. ஏதோ எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன். அது உங்கள் கருத்தாக இருந்த போதும், என் வயதை உத்தேசித்து ஏதோ புதிதாகக் கேட்பது போல கேட்கிறீர்கள். அது உங்கள் பெருந்தன்மை. அதற்கு மேல் நான் இடம் எடுத்துக் கொள்ளக் கூடாது. பழமொழி சொல்வார்களே. ஏதோ ஒரு மிருகம், கிட்டே வா என்றால், எட்டி முகத்தை நக்குமாமே. அது மாதிரி நடந்துக்கலாமா, நான்.''

ஆராவமுது அடக்கத்தால் இதைச் சொல்லி விடவில்லை. அடக்கமும் அவருக்கு உரிய குணம் என்று நம்பவும் முடியாது. கிருஷ்ணமூர்த்தி அவர் தாடையைப் பிடித்துக் கெஞ்ச வேண்டும் என்று அவர் எதிர் பார்த்தார் என்பதே உண்மை.

''நீங்கள் அப்படியெல்லாம் சொல்லி விடக் கூடாது... எதையோ மனசுக்குள் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள்.''

''இல்லை கண்ணா. கோவையைப் பிரதிநிதித்வப்படுத்தப் போவது யாரு?''

''பழனிச்சாமிதான்.''

''நல்ல சாய்ஸ்...'' என்றவர் எதையோ யோசித்தார்.

''என்ன யோசனை...''

''நீங்கள் சொன்ன ஆள் நல்ல பையன் தான். இருந்தாலும்...''

''சொல்லுங்கள்.''

''அந்தப் பையன் ஒரு கம்யூனிஸ்ட் மாதிரி பேசுவானாமே... நல்லமுத்துக் கவுண்டருக்கு அவரைப் பிடிக்காதே...''

''நல்ல முத்துக் கவுண்டர் யார்?''

''சுருக்கமாகச் சொன்னால், முதலமைச்சரின் பணப் பெட்டி. தேர்தல் என்று வந்தால், அல்லது பணத் தேவைக்குப் பெட்டி பெட்டியாகப் பணம் தருபவர் அவர். அவருக்குப் பிடிக்காத ஒன்று மேலிடத்துக்குப் பிடிக்காதே...''

கிருஷ்ணமூர்த்திக்குச் சொர சொரவென்று வந்தது.

''அப்படியானால்?''

''முகமது மியானைப் போடுங்கள்.''

''அவர் யாரென்றே எனக்குத் தெரியாதே...''

''பக்கத்து வீட்டுக் காரராலும் கூட அறியப்படாதவர்கள் எல்லாம், கட்சித் தலைவராய், மந்திரியாக ஆவதில்லையா? மியானைக் கவுண்டருக்குப் பிடிக்கும். மியான் மந்திரியாவது, கவுண்டரே மந்திரியாவது போல. தவிரவும், சென்னையிலேயே கவுண்டருக்குப் பதினைந்து வீடுகள் இருக்கின்றன.''

''இருக்கட்டுமே. அதனால் நமக்

கென்ன?''

''புரியாமல் பேசாதீர்கள். அதில், அடையாறில், கடலைப் பார்த்துக் கொண்டு இருக்கிற ஒரு பெரிய பங்களா உங்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கும். இப்போது அந்த வீட்டை ஷூட்டிங்குக்கு வாடகைக்கு விடுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும் நாற்பது பெரிய ரூபாய்க்குத் தேறும்.''

''அவ்வளவு பெரிய வீட்டை அன்பளிப்பாகப் பெற்றால், அதற்கு நிகராக நாம் ஏதாவது செய்ய வேண்டுமே...''

ஆராவமுது கை தட்டினார்.

''இப்போதான் நீங்கள் அரசியல்வாதியாகி இருக்கிறீர்கள். என் வாழ்த்துக்கள்.''

அவரே தொடர்ந்தார்.

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். அவரே விதைப்பார். அவரே அறுப்பார். அவர் ஆளை அமைச்சரவையில் போட்டு விடுங்கள். அது போதும் அவருக்கு.

''சரி. அப்படியே செய்வோம். தஞ்சாவூரையும் முடித்து விடுங்கள், நீங்களே.''

''இதுதானே வேணாம். நான் என்னத்தைச் சொல்றது? கட்சியோட கலை இலக்கியப் பிரிவுச் செயலாளர் செண்பகா, முனிரத்தினத்தைப் போட வேண்டும் என்கிறார். இப்போது, செண்பகா, முதல்வரோட ரொம்ப மரியாதைக்கும் நெருக்கத்துக்கும் உரியவங்கன்னுதான் உங்களுக்குத் தெரியுமே. நீங்க ஒன்று செய்யுங்க. தஞ்சை மாவட்டத்துக்குச் செண்பகா பெயரையே போட்டுடுங்க. முதல்வர் அந்த அம்மாவுக்கு மந்திரி சபையிலே பதவி கொடுக்க விரும்பலை. அவர் முனிரத்தினத்தைத்தான் போடுவார். ஆனா, செண்பகாவோட பெயரைச் சிபாரிசு செய்யறதின் மூலமாக, நீங்க செண்பகா, மற்றும் முதல்வர் இரண்டு பேரோட மரியாதையையும் அடைஞ்சிடுவீங்க. அது பெரிய லாபம் உங்களுக்கு. பணம், மரியாதை இரண்டையும் எப்போ வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். முதல்வர் மனசில் இடம் பிடிப்பதுதான் இப்போதைக்கு மிகவும் முக்கியம்.

''நீங்கள் சொல்வது மிகவும் சரி.''

கிருஷ்ணமூர்த்தி அவர் சொன்ன பெயர்களையே எழுதிப் பட்டியலை முடித்தான்.

ஆராவமுதுவும் அவனும் காப்பி அருந்தினார்கள். அவன் கேட்டான்.

''ஒரு விஷயம்!''

''கேளுங்கோ...''

''இந்தப் பட்டியலில் இந்தப் பெயர்களைச் சேர்ப்பதில் உங்களுக்கு என்ன லாபம்?''

ஆராவமுது அரைக் கண்ணை மூடித் தவம் செய்பவர் போன்று அமர்ந்திருந்தார்.

''என் பெண்கள் இரண்டு பேரையும் கரை ஏற்றி விடுவேன்.''

''புரியவில்லை.''

''ஒவ்வொருத்திக்கும் ஒரு லட்ச ரூபாய் செலவு செய்து கல்யாணம் முடிப்பேன்.''

''புரியவில்லை''

''கவுண்டர், மற்றும் இரண்டு புதிய நான் சொன்ன மந்திரிகளும் பணம் கொடுப்பார்கள். பேரமும் அப்படித்தான்.''

''முதல்வர் ஒத்துக் கொண்டால் சரி. பட்டியலில் பெயரை மாற்றினால்...?''

''அவரை அவர்கள் ஏற்கெனவே சந்தித்து, எல்லாம் முடிந்து விட்டது.''

''எனக்கு வீடு மட்டும். அப்படித்தானே? எனக்கு அது போதும்...''

''வீடு.. அப்புறம் விநோதினி...''

''சார். உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''முதல்வர் சொன்னார்.''

''முதல்வர்...''

''ஆம். அவர் விநோதினியை அரசியலுக்கு அழைத்தார். அவள் மறுத்து விட்டாள். 'அரசியல் பிடிக்காது. எனக்கு கிருஷ்ணமூர்த்தியைப் பிடிக்கும்' என்று அவள் அவரிடம் சொல்லியிருக்கிறாள்.''

விநோதினி நினைவு வந்ததும் அவன் உணர்ச்சிவயப்பட்டான்.

''நான் டில்லி போக வேண்டும்.''

''நாளை போவதாகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதே...''

''யார், யார்?''

''முதல்வரும், நீங்களும்...''

கிருஷ்ணமூர்த்தி ஆச்சர்யத்தில் ஆழ்ந்தான்.

(தொடரும்)



கல்லறையருகே ஒரு பெண் அழுது அரற்றிக் கொண்டிருப்பதைக் கண்டார் கன்ஃப்யூஷியஸ். ''உனது பெரும் அழுகை துன்பத்திற்கு மேல் துன்பம் அநுபவித்தவருடையதைப் போல் இருக்கிறதே'' என்றார். ''உண்மைதான், ஒரு முறை எனது மாமனார் இதே இடத்தில் ஒரு புலியால் கொல்லப்பட்டார். எனது கணவரும் கொல்லப்பட்டார். எனது மகனும் அதுபோன்றே இறந்தான்,'' என்றாள் அவள்.

''பின் நீ ஏன் இந்த இடத்தை விட்டுச் செல்லாமல் இருக்கிறாய்?''

''இங்கு கொடுங்கோலாட்சி செய்யும் அரசாங்கம் ஏதுமில்லை. அதனால்தான்!''

கன்ஃப்யூஷியஸ் சீடர்களிடம் சொன்னார்: 'குழந்தைகளே, இதை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள்: கொடுங்கோலாட்சி புலியைவிடப் பயங்கரமானது!'

— பெர்ட்ரண்ட் ரஸ்ஸலின் 'அதிகாரம் (Power)' எனும் நூலிலிருந்து.

— க. நஞ்சுண்டேஸ்வரன்.

இப்பொழுது **ஸெரிலாக்®**

நன்மைகள் அடங்கிய காய்கறிகளுடன்





உங்கள் குழந்தைக்கு ஸெரிலாக் அனுகூலம் அளிக்க இன்னுமோர் வழி



இதோ புதிய செரிலாக் வெஜிடெபிள்-கேரட் மற்றும் டொமேட்டோவின் நன்மைகள் நிறைந்தது. இப்பொழுது நீங்கள் குழந்தையின் வளரும் ருசிகேற்ப வெவ்வேறு விதத்தில் அளிக்கலாம்.

செரிலாக் வெஜிடெபிள்லில் எல்லா செரிலாக் அனுகூலங்களும் அடங்கியுள்ளது—ஒவ்வொரு ஊட்டத்திலும் முழுமையான போஷாக்கு, தரமான மற்றும் உடனடி தயாரிக்கும் வசதி ஆகிய எல்லா அனுகூலங்களும் நிறைந்தது. நான்கு மாதங்களிலிருந்து உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. இதுவே அவனுக்கு செரிலாக் அனுகூலங்களின் புகட்ட உகந்த வேளை. நான்கு மாதங்களிலிருந்து செரிலாக் வீட் கொடுக்க ஆரம்பியுங்கள். ஆறு மாதங்களிலிருந்து புதிய செரிலாக் வெஜிடெபிள் அல்லது செரிலாக் ஆப்பிள் அல்லது செரிலாக் ஆரஞ்சு—உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி கொடுங்கள்.

சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கவும், உங்கள் குழந்தைக்கு சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும், டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தவறாது பின்பற்றுங்கள்.

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

Nestlé

R.K. SWAMY/TSL/5461 TAM



Enterprise/GS/153Tm

நெத்தி அடி



மே ஒன்று தொழிலாளர் தின விடுமுறையன்று செய்தித்தாளில் இப்படியொரு விளம்பரம் வந்தது. எங்கள் 'நெத்தியடி' படத்தைப் பார்ப்பதற்காகக் கல்லூரிகளுக்கும், பள்ளிக் கூடங்களுக்கும் விடுமுறை அளித்ததற்கு நன்றி...! இந்தக் குறும்புத் தனம் படம் நெடுக விரவியிருக்கிறது.

படம் திறந்ததுமே பாண்டியராஜன் கோஷ்டி ஊரையே துவம்சம் பண்ணிப் புரட்டிப் போட்டுக் கொண்டு அப்படி எங்கே ஓட்ட ஓட்டமாய் ஓடுகிறார்கள் என்றால், அறுந்து ஓடும் ஒரு பட்டத்தைத் துரத்திக் கொண்டு! ஏகக் கலகலப்பு, கை தட்டல், ஆரவாரம்! இதே டைப் காட்சி ஏற்கெனவே வேறு படத்தில் பார்த்து ரசித்தாயிற்று. இதைச் சொல்லப் போனால் அப்புறம், 'மூந்தா நாள் கத்தரிக்காய் சாம்பார் வச்சேன்; நல்லாருக்குன்னீங்க. நேத்து கத்தரிக்காய் பொரியல் செய்தேன்; நல்லாருக்குன்னீங்க. இன்னிக்குக் கத்தரிக்கா கூட்டு போட்டா முகத்தைச் சுளிக்கறீங்களே!' என்று குறைபட்டுக் கொண்ட குடும்பத் தலைவி கதை ஆகிவிடும்!

எண்பத்தைந்து வயதுக் கிழவி இறந்தால் அதைக் கல்யாணச் சாவு என்று ஒரு மரியாதைக்குச் சொல்கிறதுதான். அதற்காக அந்தச் சாவைக் கல்யாணக் கலகலப்போடு அநியாயத்துக்கு அப்படியா அமர்க்களப் படுத்த வேண்டும்?

பணத்தையெல்லாம் சினிமா பார்ப்பதில் வேட்டு விட்டுத் தந்தையிடம் வகையாக மாட்டிக் கொள்ள, பாண்டியராஜன் திருதிருவென்று விழித்துச் சமாளிப்பது தனி முத்திரை.

பாண்டியராஜனின் தந்தை ஜனகராஜ். கல்யாண சமையலில் ஹெட் குக். வித்தியாசமான பாத்திரம். சரக்கு மாஸ்டர் வேலை இல்லாத நேரமெல்லாம் உள்ளுக்குச் சரக்கு இறக்கிக் கொண்டு உதறிக் கொண்டிருப்பார். 'வேணா... வீட்லதான் நான் அப்பன், நீ புள்ளை. இங்கே நான் மாஸ்டர், நீ தொழிலாளி. புரியுதா?' என்று அவர் நீட்டி நெளித்து அதிகாரம் பண்ணுவது படா தோரணைதான்.

இளமைக்கு ஒரு வைஷ்ணவி — சரி. கொஞ்சத்துக்குக் கொஞ்சம் ப்ரஸன்ன வதனமாய் இருந்தால் குடியா மூழுகி விடும்? காரெக்டர் அப்படி என்பதெல்லாம் நொண்டிச் சமாதானம்.

சிறப்புத் தோற்றமாம் அமலாவுக்கு. சந்தேகமில்லை. அமலா தலையீட்டுக்குப் பிறகு அந்தஸ்து உயரவில்லையோ? அமலா தனியாகப் போய் வைஷ்ணவியை நோட்டம் பார்க்க, பின்னவர் பாய்ந்து வந்து பிடித்து உலுக்கியதும் அப்பாவி முழியிலிருந்து அதிர்ச்சிக்குத் தாவி அறை வாங்கிக் கொண்டு திரும்பி வந்து பாண்டியராஜனிடம் அமலா ரசபாவத்துடன் நடந்ததை விவரிப்பதுடன், 'ஆமா, நீங்க எதுக்குங்க தனியாப் போனீங்க?' என்றதும், 'உன் லவர் நன்னா இருக்கானான்னு பார்க்கத்தான்,' என்று கான்வென்ட்தனமாய்ச் சொல்வது ஜோர்.

சும்மா சொல்லக் கூடாது. மூஞ்சியைப் பாறையாய் வைத்துக் கொண்டு ஆஜானுபாகுவாய்த் தலை காட்டியிருக்கிறாரே, அந்தப் பண்ணையார் சுவடு பதித்திருக்கிறார். பணக்காரனாய் இருக்கானேன்னுதான் இத்தனை பணிஞ்சு போனேன். இத பாருடி, மாடு இளைச்சாலும் கொம்பு இளைக்காது,' என்று சாதாரணமாய்த்தான் சொல்கிறார் அவர். புயலுக்கு முந்தின புழுக்கம் அது என்பதை என்னமாய்க் காட்டி விட்டார்?

செந்திலுக்கு இவ்வளதான் இடம் என்று சும்மா அரசியல் வேஷம் கட்டி ஒதுக்கி விட்டது என்னவோ போலிருக்கிறது. ஆனாலும் இதுபோதும் என்றும் தோன்றுகிறது.

இசையமைப்பு அசப்பில் ராகதேவன் கைவரிசை போலிருந்தாலும், அதையும் மிஞ்சிய ஒரு ஜிஞ்சாமிர்தம் செவியில் பாய்ந்து மனசுக்குள் வடு பதிக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இசை: பாண்டியராஜன்!

இந்தப் பூஞ்சை உருவத்துக்குள் இத்தனை சாமர்த்தியங்கள் எப்படி ஒளிந்திருக்கின்றன!

— பி. எஸ். எஸ்.

நீங்கள் கேட்டவை — தராசு



கலைஞரின் 100 நாள்

* தேவிகா பித்தன், நரிப்பாளையம்.

? "பழையக் குருடி, கதவைத் திறடி" — பொருத்தமான அரசியல் சம்பவம் கூற முடியுமா?"

! உக்கும் — இதுகூடத் தெரியாதாக்கும்... சட்டசபைக்குப் பிரிந்தவர்கள், நாடாளுமன்றத்துக்கு இணைவதைத்தானே சொல்கிறீர்கள்!

* ந. க. பரமசிவம், சென்னை — 7.

? வீட்டுக்கு வீடு வாசல்படி — உதாரணம்?

! இ. காங்கிரஸில் மாநிலத்துக்கு மாநிலம் உட்கட்சிப் பூசல்!

* கு. ம. க., சீர்காழி.

? மூன்று முதல்வர்களோடு நடித்த மனோரமா பற்றி?

! அது வாய்ப்பு; ஆயிரம் படங்களில் ஆச்சி நடித்தது சிறப்பு!

* பாக்யமுத்து, திருச்சி — 20.

? கலைஞரின் நூறு நாள் சாதனைகள் எப்படி?

! அறுபது சதம் சாதனை; நாற்பது சதம் வேதனை!

* மணிவண்ணன், திருவில்லிபுத்தூர்.

? எங்கள் ஊர் (அரசு) பொது நூலகத்தில் எக்ஸ்பிரஸ், தினமலர் பத்திரிகைகள் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது. அரசின் செயலைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

! அல்பம்!

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? அமைச்சர் தம்மை அறிமுகம் செய்து கொண்ட பிறகும் பெனாசிருக்கு அவரை அடையாளம் தெரியவில்லையாமே?

! பதில் 1: தாயாரை அமைச்சராக்கியது போல் மேலும் உறவினர்களை அமைச்சரவைக்குள் கொண்டு வந்தால் இந்தச் சங்கடம் இல்லை. பதில் 2: அமைச்சரவைக் கூட்டங்களே நடப்பதில்லையோ? நடந்திருந்தால் அடையாளம் புரிந்திருக்குமே! பதில் 3: மேற்படி அமைச்சரின் பெயரையே பத்திரிகைகளில் தாம் பார்த்ததில்லை என்றும் கூறியிருக்கிறார் பெனாசிர். அதனால் அவர் இன்னும் சிறப்பாகப் பணியாற்றி, மக்கள் கவனத்தைக் கவர வேண்டும் என்பதை உணர்த்த இப்படிக் குத்திக் காட்டியிருக்கலாம். (பொருத்தமான பதிலை 'டிக்' செய்யவும்.)

* என். அசோக், வேதாரண்யம்.

? 'விலைபோகும் அரசியல்வாதிகளை விடக் கழுதைகளே மேல்' என்று பூட்டாசிங் கூறியுள்ளாரே!

! அவரே ஊழல் அரக்கனிடம் விலை போய் விட்டதாகத்தானே இப்போது குற்றச்சாட்டு!

* எம். எம். கோபால், பம்பாய். *

? வாழப்பாடி எத்தனை காலம் தாக்குப் பிடிப்பார்?

! 'கருணாநிதி ஜெயிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மூப்பனார் சூழ்ச்சி செய்து, ஜெயலலிதாவுடன் கூட்டணி வேண்டாம் என்பதில் பிடிவாதமாக இருந்தார்' என்று ராஜீவிடம் வத்தி வைக்கிற பேர்வழிகள் காங்கிரஸில் இருக்கும் வரை, வாழப்பாடிக்கும் ஆபத்து வெகு தூரத்தில் இல்லை!

* ஜி. இந்திரா, திருச்சி.

? '143 காங்கிரஸ் எம். எல். ஏக்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் பகவத் ஜா ஆசாத்தின் அரசு கலைக்கப்படாத போது, கர்நாடகாவில் பொம்மை அரசைக் கலைத்தது என்ன நியாயம்?' என்று தேவிலால் கேட்டிருக்கிறாரே?

! 'மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்!



சாதனைகள் எப்படி?

* கே. வி. நாதன், நெய்வேலி.

? நக்ஸல்பாரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள அனைவருக்கும் ஆயுதம் தரப்படும் என்று என். டி. ஆர். கூறுகிறாரே?

! எம். ஜி. ஆர். 'கத்தி வைத்துக் கொள்ளுங்கள்' என்றார். சௌத்திரி 'துப்பாக்கி ஏந்துங்கள்' என்றார். என். டி. ஆர். இன்னும் ஒரு படி மேலே போய், 'அரசே, மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கும்' என்கிறார். மூடத்தனத்தின் உச்ச கட்டம்! நக்ஸல் பாரிகள் ஆயுதங்களைத் துறக்கும் வகையில் அவர்களை வழிக்குக் கொண்டுவரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டுமேயன்றி, தற்காப்பு என்ற பெயரில் வன்முறையைத் தூண்டி விடுவதா அரசின் வேலை!

* எம். என். எடிசன், வள்ளியூர்.

? அண்மையில் நீர் வருந்தும்படி நடந்த நிகழ்ச்சி?

! தேசிய மீனவர் பேரணியில் இரு கோஷ்டிகளிடையே பூசல் ஏற்பட்டிருக்கலாம். அந்தச் சந்தடி சாக்கில் பத்திரிகை நிருபர்களையும் புகைப்படக்காரர்களையும் போலீஸார் தாக்கியது வேதனை.

* க. சரவணகுமார், தூத்துக்குடி.

? ஹெல்மெட் அணியும் விதியை அரசு கைவிட்டிருக்கிறதே?

! 1. தனி நபர் உரிமைகளில் தலையிடுவதாக அரசு கருதியிருக்கலாம். 2. ஹெல்மெட் தயாரிப்பாளர் யார் மீதோ கோபம் கொண்டு செய்த காரியமாக இருக்கலாம். 3. ஹெல்மெட் அணிவதால் சிலருக்கு ஏற்படும் உடல் கோளாறுகளைக் கருதிச் சட்டத்தை ரத்துச் செய்திருக்கலாம். எப்படியானாலும் ஹெல்மெட்டைத் தூக்கிப் போட்டு விடாதீர்கள்! மதுவிலக்கு உண்டு—இல்லை; உண்டு—இல்லை என்பது போல் ஹெல்மெட் விதி உண்டு என்ற காலம் மீண்டும் வரலாம்!

* டி. சிவப்பிரகாசம், மேட்டுப்பாளையம்.

? காளிமுத்து அ. தி. மு. க. வில் சேரப் போகிறாராமே?

! சேர்ந்தே விட்டார்! அதிகமாகத் திட்டி முட்டிக்கால்போட்டவர்களின் கழகம்தானே இன்றைய அ. தி. மு. க.

* சுந்தர் சுந்தரி, கோவை.

? சிவாஜி எம். எல். சி. ஆவாரா?

! தி. மு. க. வுடன் கூட்டணிக்கு முதல் படியாக ஜனதா தளத்துடன் சேரத் தீர்மானித்தபின், எம். எல். சி. பதவி என்பது குறைந்தபட்சப் பரிசு ஆயிற்றே!

* சசிகலா, சென்னை.

? ஆந்திரா காங்கிரஸ் தலைவராகச் சென்னா ரெட்டி நியமிக்கப்பட்டிருக்கிறாரே?

! முன்பு தாறுமாறாக ஏசியவர்களை இன்று மன்னித்து ஏற்றுப் பதவிப் பரிசு வழங்குவதுதான் இப்போதைய ஃபாஷன் போலும்! ராஜீவின் சிந்தனையில் ஏகப்பட்ட குழப்பம் நிலவுவதற்கு மீண்டும் ஓர் உதாரணம். அவர், தன்னம்பிக்கை இழந்திருப்பதன் அடையாளம்.

* பத்ம சிவாஜி, நீடாமங்கலம்.


? விதியை மதியால் வெல்ல முடியுமா?

! விடுமுறை மலரைப் பாருங்கள். கீரன் அழகாகச் சொல்லியிருக்கிறார்!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

எம். எம். கோபால்,

பி. வி. எம். அறை,
டெலிஃபோன் எக்ஸ்சேஞ்ச்,
பம்பாய் — 400 018.



என் உயிர்க்

அத்தியாயம் 4
குயில் குப்பத்தில்
தஞ்சமடைந்த மயில்!

"தே! ஒத்தும்மே. நான் வந்த விசயமே வேறே அஆம்... த... இப்ப ஜிப்பால்லாம் போட்டுக்கினு உள்ளாற வந்தாரே ஒருத்தரு அவுரை வெளியக் கூப்பிடுமே... ஐயே... தே... கூப்பிடுங்கறேன் சொம்மா அடிச்சி பார்த்துகினுகிறியே... இன்னா?"

தருமன் ஏதாவது ஏடாகூடமாய்ச் செய்யு முன் அந்த உருண்டை உருவம் உள்ளே சென்று, அப்போதுதான் மூடிற்கு வந்திருந்த அந்த ஜிப்பாக்காரரை இழுக்காத குறையாக அழைத்து வந்தாள்.

"ஏய்! நீயா! நான்தான் உனக்கு டூ பிஃப்டி குடுத்துட்டேனிழ்மே! அப்புறம் என்னா இங்க தகமூாரு... போலீஸைக் கூப்பிடு வேன் ஜாக்கிழதை." என்று குமறியவாறே அவிழவிருந்த வேட்டியைத் தேடிப் பிடிக்க அவர் முயன்றார்.

"தா... சார்... போலீசைக் கிலீசைக் கூப் பிட்டு, இருக்கற எடம் தெரியாம நீ மாட்டிக் கப் போறே... நீ எனக்கு டூ பிப்டி தர்றேன்னு சொன்னது வாஸ்தவந்தான். ஆனா நீ எனக் குக் குடுத்தது... பிப்டி... இன்னா மூயிக் கிறே...? அம்பது ருவா... குடுத்துக்கறே... இந்தா மிச்ச சில்லறையைப் புடி... தரும னுக்குப் பேசனதுக்கு மேலே துட்டு வாங்கிப் பயக்கமில்லே சார்..." சொல்லிவிட்டு வேகமாய் வெளியேறினான் தருமன்.

தனக்குத்தானே விசிலடித்தவாறு வண் டியை மிதித்தான். அன்று மாலை தன் கட்சி யைச் சேர்ந்த 'குற்றாலம் குமரேசன்' மாங் கொல்லையில் 'மீட்டிங்' பேசவிருப்பது சட் டென்று ஞாபகம் வந்தவனாய் வண்டியை மாங்கொல்லை நோக்கி ஓடித்தான்.

சென்ற மூன்று வாரங்களில்...

குயில் குப்பம் —

அனாதையாக வந்த தருமனைப் பொன்னம் மாக்கா எடுத்து வளர்க்கிறாள். சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தருமன், தனது அரசியல் தலைவனுக்காகத் தீக்குளிக்கவும் தயாராக இருப்பவன். அதற்காகப் போலீஸார் அவனை இதர கட்சிக்காரர்களோடு சேர்த்து 'ரவுண்ட்-அப்' செய்து கொண்டு போய் "பாடம் கற்பித்து" அனுப்புகிறார்கள்.

ஒருநாள் தனது ரிக்ஷாவில் ஒரு சவாரி ஏற்றிச் செல்கிறான். ஒரு வீட்டின் முன் இறங்கிய அவர், போதையில் ஐம்பது ரூபாய் நோட்டை இவன் கரத் தில் திணித்துவிட்டுச் செல்ல, தருமன் அவசரமாய்ச் சென்று அந்த வீட்டின் கதவைத் தட்டுகிறான். கத வைத் திறந்த நடுத்தர வயது மாது ஒருத்தி, "இப்பத் தான்யா உள்ளே ஒரு பார்ட்டி போயிருக்கு! அரை மணி கழிச்சு வா! கஸ்டமரை ரெடி பண்றேன்!" என்கிறாள்.

திகைத்து நிற்கிறான் தருமன்.

தருமன் எந்த நிமிடமும் வீட்டிற்கு வரலாம் வந்தவுடன் அவனை 'சூளைமேடு சுப்பராயன்' வீட்டிற்குப் பெண் பார்க்க அழைத்துச் செல்ல வேண்டும் என்று பொன் னம்மா அவசர அவசரமாகத் தருமனுக்காக வாங்கி வைத்திருந்த புது வேட்டி — புதுச் சட்டையுடன் காத்திருக்க...

தருமன் மாங்கொல்லையில் மைக்டெஸ்ட் டிங்கின் அலறலுக்கும் கைதட்டல்களுக்கும், விசில்களுக்கும் நடுவே பெண் பார்க்கச் செல்லும் படலத்தைச் சுத்தமாய் மறந்தவ னாய்த் தன் கட்சித் தோழரின் வருகைக் காக ஆவலோடு காத்திருந்தான்.

காத்திருந்து காத்திருந்து கடுப்படைந்த பொன்னம்மாள் 'பங்கி முருகேசை' அழைத்து விஷயத்தைப் புட்டுப் புட்டு வைத்து, தருமன் எங்கிருந்தாலும் தன் வீட் டில் இன்னும் அரை மணி நேரத்திற்குள் இருக்க வேண்டும் என்று எச்சரித்து அனுப்பி னாள்.

கழுதை கெட்டால் குட்டிச் சுவர், தருமன் கெட்டால் அவனது கட்சி மீட்டிங் என்று நன்கறிந்திருந்த 'பங்கி முருகேச' நேரே மாங்கொல்லையை அடைந்தான்...

மாங்கொல்லையில் 'குற்றாலம் கும ரேசன்' உரையாற்றுமுன் அந்த வட்டத்தைச் சார்ந்த யாரோ ஓர் உறுப்பினர் எதிர்க்கட்சி யினரை ஏசுவதே அரசியல் எனக் கருதி அதைச் செயலாற்றுவதில், ஒரு கோர்வை யின்றி, மாறி மாறி வாக்கியங்களைத் துப் பிக் கொண்டும், சோடாவைக் குடித்துக் கொண்டும் இருக்க... திடீரென்று ஒருவன் அவரை இடைமறித்து அவர் கையில் ஒரு துண்டுக் காகிதத்தைச் செருகினான். சிறிது நேரம் அதை உற்றுப் பார்த்துவிட்டு அவர், "நமது கட்சியைச் சேர்ந்த 82 — வது வட்ட கழக உறுப்பினர் தருமன் அவர்கள் எங்கிருந் தாலும் உடனே மேடைக்குப் பின்புறம் வர வும்" என்று குரல் கொடுத்தார்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த தருமன் தன்னை எதற்கு அழைக்கிறார்கள் எனக் குழம்பிய வனாய்க் கும்பலை விலக்கியவாறே மேடைக்குப் பின்புறம் செல்ல, அங்கு 'பங்கி' முருகேசைக் கண்டு ஆச்சரியப்பட் டான்.

"இன்னா 'பங்கி' இம்மாந் தூரம்... குத்தா லம் குமரேச பேச்சைக் கேட்க வந்தியா? வா... வா... முன்னாலேயே எடம் புட்சி வெச்சிக்கிறேன். போய்க் குந்திக்கலாம். தோ இப்போ வந்துருவாரு..." என்று மேலே ஏதும் பேசுமுன், முருகேச அவன் வாய் பொத்தி, "பேமானியாட்டம் இங்க

தோழன்

பாரதிராஜா



குந்திக்கினுங்கிறீயேடா, சோமாறி! ஊட்டாண்ட யக்கா உனக்காகக் காத்துக்கினுக்கிதுடா, கைதே... த்தா... இன்னாத்துக்குன்னு கேப்பியே.... கேளு... மூதேவி! இன்னிக்கி சாயங்காலம் சூளைமேடு சுப்பராயன் பொண்ணைப் பாக்கப் போலாம்னு பெரிசா யக்கா வாண்ட சொல்லிக்கினு இங்க மீட்டிங்குலே இன்னா கோட்டையையா புடிக்கிறே? பேமானி! ரிச்சாவை மொதல்ல எடுறா ஊட்டாண்ட போவோம்,'' என்று கத்த, சட்டென்று ஞாபகம் வந்தவனாய், தருமன் தன் தலையில் தட்டிக் கொண்டான். பங்கி முருகேசை ஏற்றிக் கொண்டு ரிக்ஷாவைக் குயில் குப்பம் நோக்கி விரைவாகச் செலுத்தினான்.

தருமன், 'பங்கி முருகேசுடன்' குடிசையில் நுழைந்த மறுநிமிடம் பொன்னம்மா, "எங்கேடா போய் தொலைஞ்சிருந்தே? எத்தினி தபா சொல்லியிருந்தேன், உன் கைலே! அப்பிடி இன்னாடா பெரிசா கலீக்டர் பொயப்பு பாக்கறே. பொண்ணு பாக்கற அன்னிக்கிக் கூட நேரத்துக்கு ஊட்டுக்கு வர முடியாமா?'' என்று நெருப்பாய் எரிய, 'பங்கி' முருகேசு தன் பங்குக்குக் கொஞ்சம் எண்ணெய் சேர்த்தான்,

''அது கிஞ்சுது போ... அவனை இன்னா நான் இஸ்டாண்டு மேலே இருந்து கூட்டிகினு வர்றேன்னு நெனச்சியா நீயி...? கர்மாந்தரம்! மாங்கொல்லையிலே குந்திக்கினு, மீட்டிங் கேட்டுக்கினு, பிகில் அடிச்சுகினு இருந்துது. அப்பாலே நான் தான் என் ரெக்கமன்டேசனை ஊஸ் பண்ணி, கும்பல்லே இருந்து தனியா கௌபிக்கினு வந்தேன். தலையைச் சொறிஞ்சிகினு நிக்கறான் பாரு... கேளேன் அவனையே, டுபாகூரு!''

''எத்தினி தபா சொன்னாலும் புத்தி மாற மாட்டேங்குதேடா..! மைக் செட்டைப் பார்த்தா போதும்; பேமானி இன்னா வேலையா இருந்தாலும் சரி அத்தை அப்பிடியே மறந்துட்டு பெராக்கு பாக்கறத்துக்கு நின்னுகிது. இத்தை வச்சுக்கினு இன்னாடா பண்றது நான்...? தே...தூ! சொறிஞ்சிகினு நிக்காத. போ! போய் இத்தையெல்லாம் அவுத்து கெடாசிட்டு, புச்சா வாங்கி வெச்சிக்கிறேன் பாரு சட்டையும் வேட்டியும்... அத்தை மாட்டிக்கினு கௌம்புடா! நேரமாவுது! இவனைக் கண்ணாலம் கட்டிக்கினு அந்தப் பொண்ணு இன்னா லோல் படப் போவுதோ... டேய் முருகேசு! மல்லிகா கெயம்பிட்டாளா பாருடா. அவ நாலு மணிக்கு ஆரம்பிச்சா ஆறு வரைக்கும் பவுடரு பூசுவா! போய் அவளைக் கூட்டிகினு வா; கெயம்புவோம் நேரத்தோட.'' பொன்னம்மா முடிக்க தருமன் துப்புறவாகி உடை மாறியிருந்தான்....

சூளைமேடு சுப்பராயன் வீட்டில் தருமன், பொன்னம்மா, 'பங்கி' முருகேசு, அவன் மனைவி மல்லிகா முதலியோர் தரையில் விரிக்கப் பட்டிருந்த பாயில் அமர்ந்திருக்க, சுப்பராயன் தன் பங்கிற்கு எதிர் வரிசையில் அவனது பங்காளிகளுடன் அமர்ந்திருந்தான். இரு சாராரும் தங்கள் வீட்டுப் பராக்கிரமங்களைப் பற்றி அலசி விட்டுப் பின் பெண் பார்க்கும் படலத்தை ஒரு சடங்காகத் தொடங்கினர்.

''பொன்னம்மாக்கா, பொண்ணை வரச் சொல்லுங்க.... எங்கனாச்சும் கண்ணுக்கு ஆப்புடாதான்னு தேடுது பாரு! என்றவாறே முருகேசு தருமனை இடிக்க,

''தே யக்கா சொம்மா இரு...'' தருமன் கூனிக் குறுகி வளைந்து நெளிந்து ஓடியாத குறையாக வெட்கப்பட்டான்.

''டேய் நல்லா டக்கரா குந்து.... பொண்ணு என்னை மாப்பிள்ளைன்னு நெனச்சிக்கப் போவுது! அப்புறம் மல்லிகா நம்மளை பீஸ் பீஸாக்கிடுவா!'' 'பங்கி முருகேசு' தருமன் காதில் கிசுகிசுக்க.... உஷாரானவனாய், தருமன் நெஞ்சு நிமிர்த்தி ஒரு மாப்பிள்ளைத் தோரணைக்கு வந்தான்.

''யம்மா 'ஜரோஜா,' எல்லாருக்கும் 'கூல் டிங்சு' எடுத்துக்கினு வாம்மா'' தந்தை சுப்பராயன் கூவிய குரலுக்குப் பெண் 'ஜரோஜா' ஒரு புதிய எவர்சில்வர் தாம்பாளத் தட்டில் நீர்த்துப் போன வெளிர் மஞ்சள் நிறத்தில் ''இஸ்ட்ரா'' போட்ட கிளாசுகளை ஏந்தி வந்தாள்.

ஜரோஜா கிளாசுகளை ஏந்தி நடந்து வந்ததிலிருந்தும் அதை மாப்பிள்ளை வீட்டாரிடம் கொடுக்கும் சாக்கில் மாப்பிள்ளையைக் கண்களை உயர்த்தி வெட்டிய விதத்திலிருந்தும், அவள் ஏராளமான தமிழ்ப் படங்கள் பார்த்திருந்தது உறுதியாயிற்று.

''இன்னாடா, பொண்ணு எப்படி? உனுக்குப் புடிச்சிக்கிதாடா...?''

''தே. யக்கா! நீ பாத்து ஆரைச் சொல்றியோ, அத்துங் கயுத்துலே தாலி கட்றேன்னுக்கறேன் இல்லே! அப்பாலே இன்னா? எனக்கு எல்லாம் ஓ.கே..! ஆனா தலைவரு தேதி குடுத்து, அவரு தலைமையில் தான் கண்ணாலங்கற மேட்டரை மட்டும் அவங்களாண்ட கண்டிசனா சொல்லிடு.''

''தே... நான் கூட குந்தினுகிறேன்..., எனக்கு ஒரு 'ரெஸ்பேட்டு' இல்லாமே இன்னாவோ சந்தேகமா பேசறியே..? உனக்கு எப்பவும் நெக்கலு சாஸ்தி...த்தா... நான் தலைவரு கைலே பேசி, தேதி 'பிக்ஸ்' பண்றேன். அந்த மேட்டரை என் கைலே வுடு. பொண்ணு புடிச்சிக்கிதா அத்தை மட்டும் என்னான்டை சொல்லு!''

'பங்கி முருகேசு,' வார்த்தையை மதித்துத் தருமன் ''தலைவரு தேதி ஓ.கேன்னா நமக்குப் பொண்ணு ஓ.கேப்பா!'' என்றான்.

'பங்கி முருகேசு' பொன்னம்மாவிடம் ஏதோ கிசுகிசுக்க அவள் ஜரோஜாவை அழைத்து அவள் நெற்றியில் 'பொட்டு' வைத்து, வாங்கி வந்திருந்த வெற்றிலை, பாக்கு, பழம் முதலியவற்றைப் பெண் வீட்டார் கையில் கொடுத்துப் பெண் பார்க்கும் படலத்தை இனிதே முடித்து, திருமணத் தேதியைத் தெரிவித்துப் பின்னர் சொல்லி



அனுப்புவதாகக் கூறி, விடை பெற்றாள்.

வானம் சுத்தமாகத் தார் பூசப்பட்டிருந்தது அதில் உலா வந்த நிலாப் பெண்ணைக் கவர ஏகப்பட்ட நட்சத்திர வாலிபர்கள் கண் சிமிட்டி 'சுவ் மசிங்' செய்து கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் குயில் குப்பத்தின் ஒரு மூலையில் எப்பொழுதும் ஒரு கூட்டம் இருக்கும். அன்றைய வேலைகளை முடித்துவிட்ட நிம்மதியில் சத்தைகளையும், குப்பைகூளங்களையும் கூட்டி தீ மூட்டிவிட்டு அதைச் சுற்றி வட்டமாக அமர்ந்து தென்னை ஓலையில் செய்யப்பட்ட 'சிம்லி'யில் கஞ்சா வலித்துக் கொண்டிருக்கும் ஒரு 'ஜமா'. குறைந்த செலவில் குப்பத்து குடி மக்களுக்கு நிறைவான போதை அளிக்கும் 'கஞ்சா'. அவர்கள் பாஷையில் 'ராஜ போதை.'

ராஜ போதைக்கு ஆட்பட்ட ஒரு 'பெரிசு', போகு வருவோர் பேரையெல்லாம் வைத்து,

''அ சால்ப் பண்ணி சமுக்கப் பண்ணி அமுக்க வந்த நடேசா...
உன் டமுக்கத்தான் கீய்க்கப் போறன் டா.''

என்று பாடிக் கொண்டிருக்க, 'பங்கி முருகேசு' உசுப்பியதால், பக்திப் பெருக்கெடுத்துப் பிள்ளையார் மீது பாட ஆரம்பித்தான்.

''ஆனை அடி அதிரசங்கள் ஆயிரம்;
குதிரை அடி கொழுக்கட்டைகள் ஆயிரம்;
சாலை வினாயகரே! சப்புரானிப்
புள்ளையாரே! உனக்கு அத்தனையும்
நான் படைச்சேனே; — ஆனா
எருக்கம் பூவை நான் மறந்தேனே!''

இவ்வாறு பாடியவாறே உணர்ச்சி வேகத்தில் எழுந்து ஆடவும் ஆரம்பிக்கக் கூடியிருந்த 'ஜமா', விசிலடித்து அவரைக் குஷிப் படுத்திக் கொண்டிருந்தது.

திடீரென்று குயில் குப்பமே எதிரொலிக்கும் வகையில் ஒரு நாலைந்து பேர்... ''ஏய்! தருமன் ஒரு பொண்ணை இசுத்துக்கினு வந்துட்டான்! தருமன் ஒரு பொண்ணை இசுத்துக்கினு வந்துட்டான்!'' என்று கூவியவாறே குப்பத்திற்குள் ஓடி வர, தருமன் தன் ரிக்ஷாவின் பின்னால் குந்தியிருந்த ஒரு பெண்ணுடன் குப்பத்திற்குள் நுழைந்தான்...

சற்று நேரத்திற்கெல்லாம் குப்பம் முழுவதும் கூடியிருக்க, பரவலான வெளிச்சம் வீசிக் கொண்டிருந்த நிலவொளியில், அவர்களுக்கு நடுநாயகமாகத் துடைத்து வைத்த வெள்ளிக் குத்து விளக்கு போல ஒரு பெண், கலங்கிய கண்களுடன் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

குப்பத்திலிருந்தவர்கள் அனைவரும் ஆளுக்கு ஆள், ''நாட்டுப்பொறம்!''; ''தே அய்வுது மே''; ''இன்னா மேட்டருன்னு பிரியலியே''; ''இன்னா அய்கா கீது மே... பாவம்!'' என்று சளசளத்தவாறு இருந்தனர்.

பொன்னம்மா வாய் திறக்கச் சட்டென்று அங்கு அமைதி நிலவியது.

''உம் பேரு இன்னா?''

மௌனம்.

''சர்தான் அத்தைச் சொல்ல வாணா... இன்னா ஊரு? அத்தையாச்சும் சொல்லு!''

மௌனம்.

''அட இன்னாடா இது... தர்மா! ரெயில்வே இஷ்டேசன்லேருந்து கூட்டிக்கினு வர்றியே, உன் கையேயாச்சும் எத்தையாச்சும் சொல்லுச்சா?''

''சொல்லியிருந்தா இங்கே இன்னாத் துக்குமே இட்டுகினு வர்றேன்? வெள்ளாட்டியா நீ? சொம்மா கூவாம பாலிசா கேளு, சொல்லும்!''

''த... இங்க பாரும்மே... நாங்க இங்க காசுக்கு வாய்க்கப் படலே. ஆனா, ஒருத்தருக்கொருத்தரு நெறியா ஆசை வெச்சுக்கினுகிறோம்...காசு வரும்போவும்மே..ஆனா எங்கள மாதிரி மனுசாளுங்களைப் பாக்க முடியாது... உனுக்கு இன்னா கஷ்டங்கறதை வாய் தொறந்து எங்க கைலே தெகிரியமா சொல்லு. அப்பாலே ஆவ வேண்டியதை நாங்க பாத்துக்கறோம்! இங்க உனுக்கு ஒரு டேஞ்சரும் வராது... சொல்லு!''

இத்தனை கேள்விகளுக்கும் பதிலாகக் கலங்கிய அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் மட்டுமே உதிர்ந்தது.

''அட, அய்வாத மே... அப்பாலே எங்களுக்கு மனசு பேஜாரா பூடும்!''

''தே! அய்வுட்டும் வுடு... அப்பத்தாமே அது மனசுலேகீற பாரம் எறங்கும்!''

குயில் குப்பத்தில் தஞ்சமடைந்திருந்த அந்தப் பெண்ணுக்கு அவர்கள் தேற்றும் குரல்கள் மெல்லத் தேய்ந்து போக, அவள் தன் நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்ட ஆரம்பித்தாள்.

(தொடரும்)

அடுத்த இதழில்...

அரசியலில் ராதிகா தாக்குப் பிடிப்பாரா..?

—சிறப்புப் பேட்டி



இறுதி ஊர்வலம்

சுதாகர்

"தம்பி எப்ப வந்தாப்பல?''

''நேத்திக்குத்தான்.

''எங்கே இங்கன?''

''சும்மா செங்கிப்பட்டி போவலாம் னுட்டு.''

''எங்க மூங்கில் கடைக்கா?''

''ஆமா தம்பி! கொசத் தெருவில் அம்மாசி அப்பா இறந்துட்டாரு — அதான் மூங்கிலும், பூவும் வாங்கியார வந்தேன். அப்ப நா வரட்டுங்களா?''

நான் தலையாட்டினேன். முத்து வேகமாக மூங்கில் கடையை நோக்கிச் சென்றான். இந்த முத்துவுக்கு இதுதான் வேலை. பாடை கட்டி அலங்கரிப்பது. இறந்தவர்களின் இறுதி ஊர்வலத்தை அழகாகப் பிறர் கண்ணுக்குத் தெரிய வைக்கும் அற்புத கலைஞன்.

முத்து தனிக் கட்டை தான். அவனுக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லை. அவன் இதுவரைக்கும் எந்த ஊருக்கும் சென்றதை நான் கண்டதில்லை. ஒரு முறை வல்லம் ஸ்ரீராம் தியேட்டருக்கு அருகே பார்த்திருக்கிறேன். அதற்காகத் திருமலை சமுத்திரத்தில் இருந்து 0.50 பைசா கொடுத்து நாப்பத்தியேழில் வந்திருக்க வேண்டும். அதுதான் நான் அவனை ஊருக்கு வெளியே பார்த்தது. மற்றப்படி திருமலை சமுத்திரத்தில் தான் அவன் வாசம். யாரிடமும் அவ்வளவு அந்நியோன்யமாகப் பேசமாட்டான்.

ஊரில் பிணம் விழுந்தால் முத்துவைத் தான் கூப்பிடுவார்கள். சிறு வயது முதல் இன்றிருக்கும் என் இருபத்திரண்டு வயது வாழ்க்கையில் நான் கண்ட சாவுகளில் முழுவதும் முத்துவின் அலங்காரப் பாடைகளை நான் பார்த்திருக்கிறேன். முத்து பாடை கட்டும் அழகை நான் கிட்ட இருந்து பார்க்கும் தருணம், செட்டியார் வீட்டு ஆச்சி இறந்த பொழுதுதான் வாய்த்தது. ஆச்சி எங்கள் வீட்டுக்கும் மூன்றாவது வீடு. செட்டியார் நல்ல வசதி. இறந்த தம் சுமங்கலி மனைவியைத் தடபுடலாக எடுக்க ஏற்பாடு செய்தார். நானும் அல்போன்சும்தான் போய் முத்துவைக் கூட்டிவந்தோம். ஆச்சியின் தூரத்து உறவினர்தான் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தார். செட்டியாரும் அவர் பிள்ளைகளும் ஆச்சியின் அருகில் அமர்ந்து அழுது கொண்டிருந்தனர்.

முத்துவை அவர் அழைத்தார்.

"பெரமாதமாக இருக்கணும் அலங்காரம்.... என்னா தெரியுதா?" என்றார்.

''முத்துவுக்கு அதெல்லாம் தெரியும், நாம சொல்ல வேண்டியதில்லை'' என்றார் தனபால்.

முத்து தலையை மட்டும் ஆட்டினான். அரைமணி நேரத்தில், இரண்டு ஆட்கள் மூங்கில் கழிகளை எடுத்துக் கொண்டு வர முத்து முன்னால் பூக்கூடையுடன் வந்தான். செட்டியார் வீட்டுக்கருகில் சற்றுத்தள்ளி அவற்றைப் போட்டான். எந்த ஒரு சப்தத்



தையும் கேட்காதவன் மாதிரி முத்து தன் வேலைகளை ஆரம்பித்தான்.

மரணத்தின் உச்ச நிலை இதுதான் என்றும், இதுதான் பிரிவின் நிஜம் என்றும் அழுகைக் குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தன. ஆச்சியிடம் பித்தளைப்பாத்திரம் அடகு வைத்தவர்கள் கூட வந்து நின்று அழுது கொண்டிருந்தார்கள்.

முத்து இதையெல்லாம் கவனிக்காதது போல்தான் இருப்பான். அன்றைக்கும் அப்படித்தான் இருந்தான். நல்ல பெரிய உருட்டு மூங்கில் இரண்டை எடுத்து நீளவாக்கில் வைத்தான். பக்கத்தில் இரண்டு கழிகளையும் சற்றுத் தள்ளி வைத்து, சற்றுத் தூரம் நின்று அகலம் போதுமா என்று பார்த்தான். சின்னச் சின்ன குறுக்குக் கழிகளை அந்த இரண்டு கழிகளின் குறுக்கிலும் வைத்தான். ஒரு ஆள் இவன் கழிகளை வைக்க, வைக்க, கயிற்றால் கட்டிக்கொண்டிருந்தான். வில்லாக வளையக் கூடிய இளமூங்கில்களை வைத்து இரு முனைகளிலும் வைத்துக் கட்டினான். அப்படி இப்படி என்று கண்ட இடத்தில் குச்சிகளை வைத்து ஒரு வில் பாடையை உருவாக்கினான். அவன் செய்வது முதலில் ஓர் ஒழுங்கு இல்லாமல் இருப்பது போல்தான் தோன்றியது. ஆனால் சில விநாடிகளில் எல்லாம் சரியாக இருக்க வேண்டிய இடத்தில் இருந்து, ஒரு வடிவம் பெற்றுவிட்டது. வாழை நார்ப்பாடைகளை எடுத்துச் சற்று அகலமாகக் கிழித்துக் கொண்டு அந்த மூங்கில் பிளாச்சுகளின் சந்தில் வைத்துக் கட்டினான். பூக்களைச் சின்னச் சின்னக் குச்சிகளில் கட்டி, அந்த வாழைப்பட்டையில் குத்தி, பூ அலங்காரம் செய்ய ஆரம்பித்தான். அடுத்த முக்கால் மணி நேரத்தில் அழகிய தேர்ப் பாடையை உருவாக்கி இருந்தான்.

நாலரை மணிக்கு ஆச்சியை எடுத்தார்கள். ஆச்சியின் மகன்களும், மகளும் கீழே விழுந்து புரண்டனர், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதார்கள். செட்டியார் ஈர வேட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு அழுதுகொண்டே சென்றார். தூக்கிச் செல்லப்படும்ஆச்சியின் பாடையை முத்து பார்த்தான். அவனாகவே தலையாட்டிக் கொண்டான். யாரோ அவனைக் கூப்பிட்டார்கள். பணம் குடுக்கத்தானிருக்கும். ஆச்சியின் பாடையைப் பற்றியே எல்லோரும் மூன்று நாளைக்குப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இன்று அம்மாசியின் பாடையைக் கூட அழகாகத்தான் கட்டுவான் முத்து என்று நான் எண்ணியபடி செங்கிப்பட்டிக்கு பஸ் ஏறினேன். இன்னும் ஒரு மாத காலம் இங்கு இருக்க வேண்டும். பின்புதான் கல்லூரி திறக்கிறது.கடைசிவருஷமாதலால்நன்றாகப் படிக்க வேண்டும் என்று எண்ணினேன். அரியர்ஸ் விழத்தான் செய்கிறது. செங்கிப்பட்டிக்குப் போய், இரவு எட்டு மணிக்குத்தான் திரும்பினேன். வந்தவுடன் அம்மா சொன்னாள்.

''இன்றைக்கு நீ அம்மாசி பாடையைப் பார்க்கலியே! அப்பா,என்ன பூவு,என்னா அலங்காரம், அப்படி ஒரு அளகான பாடைடா'' என்றாள்.

''ஆரு முத்துதானே கட்டினது?''

''பின்னே யாரு?'' என்றுகூறிக்கொண்டே நடையில் நுழைந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து நான் வெளி வாசத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

துபாய்க்காரர் பையன் ஓடி வந்தான். நான் அவனை நிறுத்தினேன்.

''ஏண்டா இப்படி ஓடியாரே?''

''ஒண்ணு தெரியுமா?'' மூச்சை நன்றாக இழுத்துக் கொண்டான். ''என்ன?''

''முத்து செத்துட்டான்.''

நான் டபக்கென்று திண்ணையில் இருந்து கீழே குதித்தேன். உள்ளே இருந்து அடக் கடவுளே! என்று அம்மா சொல்லிக் கொண்டு வெளியே வந்தாள்.

''நல்லாத்தானே இருந்தான்?''

''திடீர்னு இப்படி ஆயிடுத்து!''

நிஜம்தான்! முத்து செத்துவிட்டான். கீழத் தெருவின் முதல் வீடுதான் அவன் வீடு. ஓலைபோட்டு வேய்ந்திருக்கும். மக்கள் கும்பலாகச் சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு வெள்ளைத் துணியால் முத்துவின் உடலை மூடி இருந்தார்கள். முகம் தெரிந்தது. எப்பொழுதும் யாரிடமும் பேசாத அந்த இறுக்கமான தோற்றத்துடன் தான் இருந்தான். எல்லோரும் கலைந்தார்கள். முத்துவுக்குச் சொந்தம் என்று யாருமே இல்லைதான். யாரிடம் என்ன சொல்வது என்று எல்லோருக்கும் சந்தேகம்.

''சரி, சரி ஆளை எடுக்கத் தயார் பண்ணுங்க.''

''பக்கத்து ஊருல பாடை கட்டுற ஆள் யாராச்சும் இருந்தா கூட்டியாங்கப்பா.''

''ஆரு சொல்றது? ராமசாமியா? சரிதான் துட்டு எவன் நீட்டுறது?''

ஒதுங்கி, ஒதுங்கியே வாழ்ந்த இந்த முத்துவுக்கு மரண நிலை வந்ததும் மக்கள் அவனை எடுக்க முன்வரவில்லை.

''ஆளு நேத்திக்கே போயிருக்கணும், உடம்பெல்லாம் உப்பிக்கிச்சு. ஆரும் இல்லைன்னு முனிசிபாலிட்டிக்கிட்டச் சொல்லி இருக்கோம். அவுங்க வந்து எடுத்துப்புடுவாங்க. பேசாம இருங்க!'' என்றார் சுப்பு சாமி. இந்த வட்டாரத்தில் கொஞ்சம் பெரிய கை.

பன்னிரண்டு மணி அளவில் முனிசிபாலிட்டி பிண வண்டி வந்தது. பத்து நபரிடம் கையெழுத்து வாங்கினார்கள். முத்துவுக்கு யாரும் இல்லை என்கின்ற சாட்சியத்துக்காக! முனிசிபாலிட்டி ஆளிடம் இருபத்து ஐந்து ரூபாய் நீட்டப்பட்டது — வெட்டியான் செலவுக்காக. வந்திருந்த ஆட்கள், தலையில் ஒருவரும் காலில் ஒருவரும் பிடித்து வண்டியில் வைத்துக் கொண்டு போனார்கள். இந்த ஊரில், இறந்தவர்களுக்கெல்லாம் பாடை கட்டியவனின் இறுதி ஊர்வலத்தை எல்லோரும் பார்த்தார்கள்.....


.....எந்த வித அழுகையும், அலங்காரமும் இல்லாமல் சென்று கொண்டிருந்த அந்தக் கலைஞனின் இறுதி ஊர்வலத்தைப் பார்க்கச் சகியாமல், மனம் கனத்துப் போய் முகத்தைத் திருப்பிக்கொண்டேன் நான்.



''இது என்ன கம்ப்யூட்டர்... கல்யாண வீட்டுல...?''
''யார் யார் 'மொய்' எழுதலேங்கறதை உடனே கண்டுபிடிச்சுச் சொல்லிடுமாம்!''
— காஞ்சி எஸ். சிவபாதன்.

"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ் மேன் தான் எவ்வளவு நல்லவர், என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா கம்பானி, பம்பாய்



வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச்சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்.

அவர் பேச்சில்தன்னம்பிக்கை தொனிக்கும் – இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றி வாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப் பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, சூழ்நிலை அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.

செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன: யூரோக்ளீன் – அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்யூம் க்ளீனரை விட சிறந்தது. மற்றும் அக்வாகார்ட் – நீர் பைப்பிலேயே பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரோக்ளீன் – உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்று விடும். அக்வாகார்ட் – ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால், கிருமிகள் அற்ற பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு, சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய கீழ்க்காணும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது இம் முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ், பி.ஓ. பாக்ஸ் 936, ஜி.பி.ஓ. பம்பாய்- 400 001.

யூரோக்ளீன்

அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம் – வேக்யூம் க்ளீனரை விட சிறந்தது.

அக்வாகார்ட்

நீர் பைப்பில் பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்

நவீன முறை சுத்தம் சுகாதாரத்தின் முன்னோடிகள்.

87/EFL/552-tm

அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி-1989



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 விதம்	ரூ.	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும்பிரசுரமானதில்லைஎன்றும்உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.


- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலைஒட்டியசுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.



விளையாட்டரங்கம். குளிர்மாலை.
குருவின் கோபம். உடலில் வலி.
வியர்வை. கண்ணீர். காயங்கள்.

பின்பு அரங்க முழுதும் கைதட்டல்.
குளிர்ந்தது நெஞ்சம்.



Artificially flavoured. Contains no fruit juice or fruit pulp.



நடந்து கொண்டே சிரிக்கின்றேன்!

ஆட்டோ டிரைவரும் அரசியல்வாதிதான்!

பெங்களூரில் ஆட்டோவில் பயணம் செய்பவர்களுக்குச் சென்னையில் பயணம் செய்வது நிச்சயம் புது அனுபவமாயிருக்கும். அங்கெல்லாம் ஆட்டோ ஓட்டுநர்கள் 'ரேட்' பேசாதா மௌனிகள். 'மேலே போட்டுக் கொடுங்கள்' என்று வாய் விட்டு, கை நீட்டிக் கேட்காத தன்மானிகள். மீட்டர் 2 ரூபாய் 60 பைசா காட்டும். நாம் மூன்று ரூபாய் கொடுத்தால், சில்லறைகள் நிரம்பி வழியும் பையிலிருந்து 40 பைசா எடுத்துக் கொடுத்து விட்டுப் பறந்து விடுவார்கள். டிப்ஸுக்கெல்லாம் காத்திருக்க மாட்டார்கள். '40 பைசா சில்லறை இல்லை சார்' என்று சாமர்த்தியமாகக் கூற மாட்டார்கள்!

நம்ம ஊரிலோ, மீட்டர் காட்டும் தொகையைக் கொடுத்தால், சர்வ அலட்சியமாக, நம் மூஞ்சியில் திருப்பி அடிக்காத குறையாக அதைப் பெற்றுக் கொள்வார்கள். நோட்டாகக் கொடுத்து விட்டாலோ, பாக்கி சில்லறை முழுசாக வந்து சேராது. ''எட்டணாவா இல்லே. ஒரு ரூபாய் நோட்டு இல்லே. இருபத்தஞ்சு பைசா இல்லே'' என்று கூறி, அவருக்கு என்ன இஷ்டமோ அதைக் கொடுத்து விட்டுப் போய் விடுவார். ''சில்லறை இருக்கிறது'' என்று நாம் எடுத்துக் கொடுக்கப் போனாலோ, ''அட என்ன சார், இவ்வளவு கறாரா இருக்கீங்க. ஐம்பது பைசாவைக் கணக்குப் பார்த்து வாங்கிக்கணுமா?'' என்று நம்மை ஒரு அல்பமாகத் தூக்கி எறிந்து பேசி விடுவார்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். மினிமம் (மூன்று ரூபாய்) சவாரி என்றால் ''வராது சார்'' என்பார்கள். பிரயாணிகளை எடை போட்டு ''நாலு ரூபா தரீங்களா?'' ''அஞ்சு ரூபா ஆவும். இஷ்டமா?'' என்று பேரம் பேசி, அது படிந்தால்தான் வண்டியையே ஸ்டார்ட் செய்வார்கள்!

''ராத்திரி சவாரி சார், பார்த்துப் போட்டுக் குடுங்க.''

''என்னப்பா, மணி எட்டரை கூட ஆகலையே...'' என்று நாம் கூறி விடக் கூடாது!

''நீங்க ஊருக்குப் புச்சா? எட்டு மணிக்கே மீட்டருக்கு மேலே போட்டுக் குடுக்கணும்னு சாருக்குத் தெரியாதா? எல்லாம் தெரிஞ்ச மாதிரி 'கப்'புன்னு ஏறி குந்திகினியே'' என்று நம்மை முட்டாளாக்கி விடுவார்.

வளவளக்காரர், வண்டி புறப்பட்டதுமே முணுமுணுக்க ஆரம்பித்து விடுவார்.

''பெட்ரோல் விலை ஏறிடுச்சு தெரியுமா? இதுலே 'எம்ட்டி ரன்' வேறே. ஓனருக்கு 70 ரூபா குடுக்கணும் சார். பெட்ரோல் நான்தான் போடணும். மைனர் ரிப்பேருகளை என் செலவிலேயே பார்க்கணும்.. ஊர்லே வண்டிங்க மானாவாரியா ஓட ஆரம்பிச்சுடுச்சு... முப்பது ரூபா கூட சம்பாதிக்கலே. எங்க கஷ்டம் உங்களுக்குத் தெரியாது'' என்று தொடங்கி, அவருடைய குடும்ப நிலைமையைக் கண்ணீர்க் கதையாகச் சொல்ல ஆரம்பித்து விடுவார்.



மெரீனா


பதிலுக்கு நம்ம குடும்ப 'கஸ்'டத்தை அவரிடம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? கேட்டதை 'அழுது' விட்டு, அழாத குறையாக வீட்டுக்குள் நுழைய வேண்டியதுதான்!

ஆட்டோ ஓட்டுநர்கள், பாசஞ்சர்களை பல வழிகளில் கசக்கிப் பிழிவது, போலீஸ் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சருக்குத் தெரியாது என்றா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நன்றாகத் தெரியும்! அதனால்தான் அமைச்சர் சுப்புலக்ஷ்மி ஜகதீசன் "பெண்களை ஆட்டோ டிரைவர்களாக்கப் போகிறேன்" என்று சட்ட மன்றத்தில் பேசியிருக்கிறார். இந்தத் திட்டம் அமலுக்கு வந்தால் ஓவர் ஸ்பீட் மற்றும், பல குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் விட ஓவர் லோட் செய்வது ஆகிய குற்றங்கள் குறைந்து விடுமாம்! 'பெண் டிரைவர்களால் ஸ்டெப்னி மாற்ற முடியுமா? இரவு நேரத்தில் பயணியை ஏற்றிக் கொண்டு திருவான்மியூர், திருவொற்றியூர் என்று போக முடியுமா?' என்பது பற்றியெல்லாம் அவர் கண்டு கொள்ளவில்லை. எது நமக்கு வசதியோ, அனுகூலமோ அதைப் பற்றி மட்டும் எண்ணுவதுதானே மனித இயல்பு? மேலும் ஆட்டோ ஓட்டுனர்கள் இப்படி அடாவடித்தனமாக நம்மிடம் பணம் பறிப்பதற்கான காரணத்தை முதல்வரே விளக்கியிருக்கிறார், தெரியுமா?

ஆட்டோ ரிக்ஷா ஓட்ட வேண்டுமென்றால் அதற்குப் பர்மிட் வாங்க ரூ. 500 கட்ட வேண்டும். ஆனால், இது சாதாரணமானவர்களுக்குக் கிடைக்க விடாமல், பணம் படைத்த 'சிலர்' செய்து விடுகிறார்களாம். எப்படி? சினிமா தியேட்டர்களில் முன்கூட்டியே டிக்கெட்டுகளை வாங்கிப் பின்னர் பிளாக் மார்க்கெட்டில் விற்பது போல், பணத்தைக் கொட்டி பர்மிட்டுகளை முடக்கி விடுவது. பிறகு? பெர்மிட்டை பல மடங்கு அதிக விலைக்கு விற்பது. இத்துடன் ஆட்டோவின் விலையும் சேர்ந்து மொத்த முதலீடு 60,000 முதல் 80,000 வரை ஆகி விடுகிறதாம். இந்தப் பணத்தை மறுபடி சம்பாதிக்கத்தான் ஓட்டுநர்கள் பிரயாணிகளிடம் பல வழிகளில் அதிகப்படியான பணம் பறிக்கிறார்களாம்! 'தேர்தலில் அதிகப் பணத்தைச் செலவழித்து விட்டு, அதை சம்பாதிக்கத்தான், அரசியல்வாதிகள் அதிகாரத்தைத் தவறான வழிகளில் பயன்படுத்துகிறார்கள்' என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது அல்லவா? அதைப் போலத்தான் இதுவும்!

இந்த ரகசியத்தைக் கூறிய முதலமைச்சர், இந்தத் தீய பழக்கத்துக்கு முடிவு கட்டும் வகையில், மோசடியாக பர்மிட்டுகளை முடக்கி வைத்திருப்பவர்களைக் கண்டுபிடித்து அவற்றை ரத்து செய்ய வழிவகைகளை ஆராயப் போவதாகவும், ஏழை எளியவர்கள் ஆட்டோ ரிக்ஷாவைச் சொந்தமாகப் பெற அரசு அவர்களுக்குப் பல வழிகளில் உதவப் போவதாகவும் கூறியிருக்கிறார். திட்டத்தின் தொடக்க விழாவும் ஏக பப்ளிசிடியோடு நடந்து முடிந்து விட்டது.

எனவே, இனி ஓட்டுநர்கள் அதிகப்படியாகப் பணம் கேட்டால், முதலமைச்சருக்கு ஒரு மனு எழுதிப் போட்டு விட்டு, ஆட்டோ ஸ்டாண்டிலேயே நம்பிக்கையோடு காத்திருக்கலாம்!



தன்னம்பிக்கை



□ ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் முடியாது என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள் எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

□ மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும்போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை தான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால்.. நம்மில் பலர் ஓரளவு கல்வித்தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத்தயங்குகிறோம்.

தவறாகப் பேசிவிடுவோமோ என்ற பயமும் , ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான மூல காரணமாகும்.

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளிக்கும் ஓர் எளிய பயிற்சி முறையை மேற்கொண்டால், தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாடவும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுதவும் உங்களால் முடியும்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப் பயிற்சியை மேற் கொள்ளலாம். நேர் முகப் பயிற்சியும் உண்டு. இன்றே கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண் 4986. 9, மேட்லி ரோடு, தி.நகர். சென்னை.600 017.



''யாரது குனிஞ்ச தலை நிமிராம போறது?''


''என் பையன்தான்..''

''பேர் என்ன?''

''விநாயகம்.''

'''ஜனநாயகம்'னு வச்சிருக்கலாம்.''

— வி. கிருஷ்ணகுமார்.



''இதான்! நீங்க வாங்கற முதல் 'மெமோ'ன்னு நினைக்கிறேன்!''

''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''


''அதான்! மேனேஜரே மூலையில் மஞ்சள் தடவிக் கொடுத்து இருக்காரே!''

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

''ஆபீஸில் எல்லாருக்கும் சாக்லேட் கொடுத்திட்டுப் போறாரே... என்ன விஷயம்...?''

''அவர் வீட்டு ஃ. வி. ரிப்பேராம்...!''

— புன்னகை மன்னன்.



போலீஸ்காரர்: சைக்கிளில் லைட் இல்லாம வர்றியே, எடுய்யா பத்து ரூபாயை!

அவர்: இந்தாங்க சார்!

போலீஸ்காரர்: ஏன்யா இருபது ரூபா தர்றே?

அவர்: பிரேக்கும் பிடிக்காது, சார்!

— நீடாமங்கலம் ஜே. பி.



''நாங்கள் ஆட்சியில் இருந்தால் இப்போது இருந்து வரும் மின்சார வெட்டைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருப்போமா? மெழுகுவர்த்தி வழங்கும் திட்டத்தை உருவாக்கி வீட்டிற்கு வாரத்திற்கு நான்கு மெழுகுவர்த்திகளைக் கொடுத்திருப்போமே!''

— சீர்காழி சாமா.



பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 31543, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 145.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

ஃபோலா கொலஸ்ட்ரலைக் குறைக்கிறது அனைத்தையும்விட அதிகமாக.

சூரியகாந்தி எண்ணையைவிட சிறந்தது. கடலை எண்ணையைவிட சிறந்தது.


அதனால்தான் குடும்பத்திற்கு இதை டாக்டர்கள் வேறு எதனையும்விட ஆரோக்கியமான சமையல் எண்ணெயென பரிந்துரை செய்கிறார்கள்.



சஃபோலா சுத்தமான, ரிஃபைண்டு Kardi எண்ணெய். எல்லா சமையல் எண்ணையைக் காட்டிலும் இதில்தான் மிக அதிகமாக லினோலிக் ஆசிட் அடங்கியுள்ளது. இது கொலஸ்ட்ரலைக் குறைக்க உதவும் ஒரு பாலி அன்சாச்சுரேட்டட் ஃபேட்டி ஆசிடாகும்.

நீங்களே பாருங்கள் :

வெவ்வேறு சமையல் எண்ணெயில் கொலஸ்ட்ரலைக் குறைக்கும் லினோலிக் ஆசிட் நிலை :



சஃபோலா. வாழ்நாள் முழுவதும் நல்ல ஆரோக்கியத்திற்கு

இரண்டு வயதிலிருந்தே கொலஸ்ட்ரால் சேர ஆரம்பித்துவிடுகிறது. ஆகவே குடும்பத்தினர் அனைவருக்கும் சிறந்த சஃபோலாவைப் பயன்படுத்தத் துவங்குங்கள். இலேசானது, எளிதில் ஜீரணமாகக் கூடியது, சமைக்கவும், வறுக்கவும், வதக்கவும், உத்தமமானது— சஃபோலா . . . பலவித சமையலுக்கும் உபயோகிக்கவல்லது.

ஆகவே சஃபோலா கொண்டு சமைத்திடுங்கள், வறுத்திடுங்கள், வதக்கிடுங்கள். புது ருசியையும், ஆரோக்கியத்தையும் பெற்று இன்புறுங்கள்.

ச:ஃபோலா




உங்கள் இருதயத்திற்குச் சிறந்தது.
குடும்பத்தினர் ஆரோக்கியத்திற்கும் சிறந்தது.



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

அலாதியானது.



உங்களைப் போல.

of course

GRAVIERA
SUITING

GR



AKSHARA/GR/1848/TA